

# ங்ககால அரசர் வரிசை 6

# திரையன் முதலிய உக்ர போர்கள்

கழக வெளியீடு : ஏ௬அ

சங்ககால அரசர் வரிசை - கூ

# திரையன் முதலிய உ௧ பேர்கள்

ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. சென்னை-1.

First Edition : January, 1955.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office* :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1100.

# பதிப்புரை

திருந்துவேல் தாங்கிச் செறுநர்த்தேய்த்த வெற்றித் திருவினரான மாநிலங் காவல்பூண்ட மன்னர் பலர், நம் தமிழகத்தை மாண்புறச் செய்தனர்.

அவருள், முடியுடை மன்னர், குறுநில மன்னர், வள்ளல்கள் முதலிய பற்பலராவர். அவர்தம் வரலாறே நம் வாழ்நாட்களை வாழ்நாட்களாக வாழவைப்பன. இத்தகைய மாண்புமிக்க அரசர்களின் வரலாற்றை உரைப்பதே இந்நூல்.

இதன்கண், '**திரையன்**' முதலாக '**வேங்கை மார்பன்**' ஈறாக, **இருபத்தோன்பதின்மர்** வரலாறுகளும் பின் **இணைப்பில் கோங்கர், கோசர், தொண்டையர், பூழியர், மழவர், வடுகர், வேளிர்** முதலிய **எழுவகை**யினர் வரலாறுகளும் இடம்பெற்றுள்ளன. இச்சிறிய நூலினைப் **புலவர், திரு. கா. கோவிந்தன்,** எம். ஏ., அவர்கள் தம் நுண்மாணுழைபுல மதுகையால் அகச்சான்று புறச்சான்றுடன் ஆய்ந்து எழுதியுதவியுள்ளனர். இது **சங்ககால அரசர் வரிசையில்** ஆறாவதாக மலர்ந்து நாவலர்தம் வாய் வீதி வந்து தமிழ்மணம் பரப்புகின்றது. இஃதோடு அரசர் வரிசை முற்றுப் பெறுகின்றது.

இவ்வரிசை நூல்களையும், இதற்கு முன்னர் வெளிப் போந்த சகசு புலவர் பெருமக்களின் வரலாறுரைக்கும் சங்கத் தமிழ்ப்புலவர் வரிசையைச் சார்ந்த கசு நூல்களையும் நம் தமிழக மாந்தர் வாங்கிக் கற்றும் கேட்டும் மன்னு தமிழ்ப்புலவராய் விளங்கி வாழ்வார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் ... | 1 |
| க. | திரையன் ... | 5 |
| உ. | தொண்டைமான் ... | 10 |
| ௩. | நன்னன் சேய் நன்னன் ... | 13 |
| ௪. | நன்னன் வேண்மான் ... | 28 |
| ௫. | நாஞ்சிற் பொருநன் ... | 40 |
| ௬. | நாலைகிழவன் நாகன் ... | 45 |
| ௭. | பண்ணி ... | 47 |
| ௮. | பழையன்மாறன் ... | 50 |
| ௯. | பாணன் ... | 55 |
| ௧௦. | பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் ... | 58 |
| ௧௧. | பிட்டங்கொற்றன் ... | 61 |
| ௧௨. | பிண்டன் ... | 67 |
| ௧௩. | புல்லி ... | 68 |
| ௧௪. | பொருட்டெழினி ... | 72 |
| ௧௫. | பொறையாற்றுக்கிழான் பெரியன் ... | 75 |
| ௧௬. | போரூர் கிழவன் பழையன் ... | 77 |
| ௧௭. | மத்தி ... | 80 |
| ௧௮. | மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் ... | 81 |
| ௧௯. | மல்லிகிழான் காரியாதி ... | 84 |
| ௨௦. | மிஞிலி ... | 86 |
| ௨௧. | முசுண்டை ... | 89 |
| ௨௨. | மூவன் ... | 90 |
| ௨௩. | வல்லங்கிழவன் ... | 92 |
| ௨௪. | வல்லார்கிழான் பண்ணன் ... | 93 |
| ௨௫. | வாணன் ... | 94 |
| ௨௬. | விச்சிக்கோன் ... | 96 |
| ௨௭. | விரான் ... | 99 |
| ௨௮. | வெளிமான் ... | 100 |
| ௨௯. | வேங்கை மார்பன் ... | 102 |
| | **பின்னிணைப்பு** ... | 103 |
| க. | கொங்கர் ... | ,, |
| உ. | கோசர் ... | 109 |
| ௩. | தொண்டையர் ... | 116 |
| ௪. | பூழியர் ... | 118 |
| ௫. | மழவர் ... | 120 |
| ௬. | வடுகர் ... | 124 |
| ௭. | வேளிர் ... | 127 |

# திரையன்

## தோற்றுவாய்

பண்டு பைந்தமிழ் நாடாண்டிருந்த அரசர்கள், வீரர்கள், வள்ளல்கள் ஆகியோர் வரலாற்றினை உரைக்கத் தொடங்கியதில் இந்நூல் ஆறுவது. இதுகாறும், சேரர், சோழர், பாண்டியர், வள்ளல்கள், அகுதை முதலிய சச பேர்கள் என்ற தலைப்புக்களின்கீழ் நூற்றுப்பதினான்கு தலைவர்களின் வரலாறு உரைக்கப்பெற்றுளது. திரையன் முதலாக, வேங்கைமார்பன் ஈறாக, இருபத்தொன்பது தலைவர்களின் வரலாறு இதன்கண் விரித்துரைக்கப்பெறுகிறது. இவ்வாறு எடுத்துக் கூறப்பெற்ற பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநிலத் தலைவர்கள், பெருநிலக் கிழார்கள், வீரர்கள், வள்ளல்களேயல்லாமல் வேறு சிலரும் தமிழகத்தே வாழ்ந்துள்ளனர். அன்னார் வரலாறு, விரித்துக் கூறலாகாமைகுறித்து, புலவர் வழி அறிந்த அவர்கள் செய்திகளை ஈண்டு ஓர் அளவு கூறிச் செல்லல் நன்றாம்.

**1. அத்தி :** கரிகாற் பெருவளத்தான் கண்டிருக்கக் காவிரியாற்றில் கழார்த்துறைக்கண் நீராடிய ஆட்டனத்தியின் வேறுபட்டவன் இவன். சேரன் படைத்தலைவரோடு கழுமலம் எனும் இடத்தே, சோழர் படைத்தலைவன் பழையனொடு போரிட்டு இறந்தவன். (அகம் : சச)

**2. அந்துவஞ்சாத்தன் :** ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் நண்பருள் ஒருவன் ; "உரைசால் அந்துவம் சாத்தன்" என அவனால் பாராட்டப்பெற்றவன். (புறம் : எக.)

**3. ஆதனவினி :** சேரநாடாண்ட அரசருள் ஒருவன். ஐங்குறுநூறு ஆசிரியர் ஓரம்போகியாரால் பல இடத்தும் பாராட்டப்பெற்றவன். (ஐங்குறுநூறு.)

**4. ஆதன் அழிசி :** ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் நண்பர்களுள் இவனும் ஒருவன். (புறம் : எக.)

**5. ஆந்தை :** ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனோடு பெரு நட்புடையனாய், "நிலைபெற்ற அரண் உடையான்" என அவனால் பாராட்டப்பெற்றவன். "மன்னெயில் ஆந்தை" (புறம் : எக.)

**6. இயக்கன் :** பெருஞ்சினம் உடையவன்; பாண்டியன் ஒல்லையூர் தந்தானின் உயிர்ஒத்த நண்பர்களுள் ஒருவன். "வெஞ்சின வியக்கன்" (புறம் : எக.)

**7. இருங்கோவேண்மான் :** வேளிர் வழிவந்தவன்; தலையாலங்கானத்தே, பாண்டியன் நெடுஞ்செழியனைப் பகைத்துப் போரிட்டு அழிந்த எழுவருள் ஒருவன். (அகம் : ௩௬.)

**8. ஏற்றை :** கணைக்கால் இரும்பொறையின் படைத் தலைவர் அறுவருள் ஒருவன்; கழுமலம் எனும் இடத்தே, சோழர் படைத்தலைவன் பழையனொடு போரிட்டு உயிர் துறந்தவன். (அகம் : சச.)

**9. கங்கன் :** அத்தியைப்போல், சேரர் படையில் பணியாற்றி, பழையன் படையால் பாழுற்றவன். (அகம் : சச.)

**10. கடலன் :** விளங்கில் எனும் ஊருக்கு உரியவன்; உள்ளத்தே, ஊக்கம் இருந்து உந்த, உரனோடு சென்று தன்னைப் பகைக்கும் அரசர்களின், யானைகளோடு கூடிய பெரிய படையைப் பாழாக்கி வென்றிகொள்ளும் பேராற்றல் உடையவன்; வள்ளன்மைக்குணமும் வாய்க்கப் பெற்றவன்.

“ செம்மல் உள்ளம் துரத்தலின், கறுத்தோர்
ஒளிறுவேல் அழுவம் களிறுபடக் கடக்கும்
மாவண் கடலன் விளங்கில்.” (அகம் : அக)

**11. நெடுமிடல் :** நெடுமிடல் அஞ்சி எனும் பெயருடையானுய இவ் வீரன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலால் கொல்லப்பட்டான். “நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமிய” (பதிற்று : ௩உ.)

**12. நெடுவேளாதன்:** வேள் எனவும், ஆதன் எனவும் அழைக்கப்பெறுதலால், இவன், சேரரோடு தொடர்புடைய வேள்குடியில் வந்தவன் எனத் தெரிகிறது. இவனுக்குரிய போந்தை எனும் நகரம் செல்வமும், செழுமையும் நிறைந்த சிறந்த நகராகும். ஏர் உழுது, நீர் நிறைந்த வயல்களையும், நெல்நிறைந்த மனைகளையும், பொன்வளம்மிக்க தெருக்களையும், வண்டொலிக்க மலர்ந்த சோலைகளையும் உடையது போந்தை எனப் புலவர்களால் போற்றப்பெறுவது அவன் நகரம்.

“ ஏர்பரந்த வயல், நீர்பரந்த செறுவின்
நெல்மலிந்த மனை, பொன்மலிந்த மறுகின்
படுவண் டார்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவே ளாதன் போந்தை.” (புறம் : ௩௩அ)

**13. நெடுவேளாவி :** வேளிர் வழிவந்தவன்; ஆவியர் குடி முதல்வன்; முருகனைப்போலும் முழுவலியுடையான்; மழவரை வென்ற மாண்புடையான்; யானைகள் நிறைந்த பொதினி மலையும், பொன்வளம் பொருந்திய பொதினி நகரும் அவன் உடைமை.

“ உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி.” (அகம். க)

“ முழவுறழ் திணிதோள், நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி.” (அகம்: ௬க)

**14.** புன்றுறை: சேரன் படைத்தலைவர் அறுவருள் இவனும் ஒருவன்; கழுமலப் போரில் பழையனால் அழிந்தான். (அகம்: சச.)

**15.** மாவன்: ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் நண்பருள் ஒருவன்; நிலைபெற்ற வருவாயை உடைய 'மையல்' எனும் ஊர் உடையான் என அவனால் பாராட்டப் பெற்றவன்; "பொய்யா யாணர் மையல்கோமான் மாவன்" (புறம்: எக.)

**16.** முடியன்: வாய்மை வழுவாதவன்; வரை போலும் பெரிய யானைப்படையுடையான்; மூங்கில் நிறைந்த மலையுடையான்; "வரைபோல் யானை வாய்மொழி முடியன் வரைவேய்" (நற்: ௩௯௦.)

**17.** வண்டன்: வண்மையில் சிறந்தவன். வள்ளன்மையுடையார்க்கு எடுத்துக்காட்டாகப், புலவர் காப்பியாற்றுக் காப்பியனாரால், காட்டப்பெறும் பெருமையுடையான். "வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து, வண்டன் அனையை" (பதிற்று: ௩௧.)

## க. திரையன்

தமிழ்நாடாண்ட பேரரசர் மூவரோடும் ஒருங்கு வைத்து மதிக்கத்தக்க மாண்புடையான் திரையன்; பட்டினப்பாலை பாடித் திருமாவளவனைப் பாராட்டிப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில்பெற்ற பெரும்புலவராய கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாராட்டப்பெறும் பெருமையுடையான் திரையன். திரையன் வெற்றிதரும் வேற் படையுடையான்; வேங்கட நாடாண்ட விழுச்சிறப்புடையான்; அழியாப்புகழ் உடையான்; அழகிய அணிகலன் அணிந்த ஆண்மையாளன்; பூஞ்சோலை பல சூழ்ந்த பவத்திரி எனும் ஊர் உடையான் எனப் பிற புலவர்களும் இவனைப் பாராட்டியுள்ளனர்.

"வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை."

"செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி." (அகம்: அரு-கூசO)

"தொண்டைநாடு சான்றோர் உடைத்து" என்பதற்கேற்ப, திரையன் ஆண்ட அந்நாடு, நிலவளம், நீர்வளம், மக்கள் வளம், மனவளம் ஆய, வளம்பல பெற்ற விழுமிய நாடாக விளங்கிற்று. வற்றாதவளம் நிறைந்தநாடு என்பதை விளக்க விரும்புகிறார், திரையனைப் பாராட்டிய உருத்திரங்கண்ணனார். தொண்டைநாட்டில், பல்லாண்டிற்கு முன் விளைந்த பண்டங்களும் தின்னப்பெறாமல் திரண்டு கிடக்கும். அவ்வுணவுப் பொருள்கள் இட்டு வைக்கப்பெற்ற கூடுகள், ஆண்டுபல ஆகினும் கைவைக்கப் பெறாமலே கிடக்கும். கூடுகளில் இட்ட உணவு ஆண்டுபலவாகியும் உண்ணப்பெறாது கிடக்க, அக் கூடுகள் மட்டும், ஆண்டுபல ஆயினமையால், அழியும் நிலைபெற்றுவிடும். கூடுகளின் இவ்வியல்பினைக் கண்ட புலவர், கன்னியராகவே காலத்தைக்கழித்த மகளிரின் அழகு அனுபவிப்பார் இல்லாமலே அழிந்துபோவதால், அவ்வாறு அழகிழந்த கன்னிப் பெண்களைக் குமரிமூத்தார் என அழைக்கப் பெறுதலே

போல், குமரிமூத்த கூடு என அக் கூடுகளுக்குப் பெயர் இட்டுப் பாராட்டியுள்ளார் :

"ஏணி எய்தா நீள்நெடும் மார்பின்,
முகடு துமித்து அடுக்கிய பழம்பல் உணவின்
குமரி மூத்த கூடு ஓங்கு நல்லில்."

(பெரும்பாண்: உ௪௫-எ)

தொண்டை நாட்டு மக்கள், இயல்பாகவே, நல்லறிவும், நற்பண்பும் உடையராவர். அந் நாட்டில் பிறந்த ஆயர்மகள் ஒருத்தியின் உயரிய வாழ்க்கையின்மூலம், அந் நாட்டு மக்கள் இயல்பை யுணர்த்தியுள்ளார் புலவர்.

புள்ளொலிக்கும் விடியற்காலத்தே எழுந்த ஆயர் மகள், புலி ஒலித்தக்கால் எழும் ஒலிபோல் ஒலி எழத் தயிரைக் கடைந்து, முடித்து, மோரும், நெய்யும்கொண்ட கூடையினைப் பூவால் ஆய சுமையடைமீது வைத்துச் சுமந்து சென்று, விற்று, மோர்விற்ற பணத்திற்கு உணவுப் பொருள்களையும், நெய் விற்ற பணத்திற்குப் பால் கறக்கும் எருமை, பசு, எருமை நாகுகளையும் வாங்கி வருவள். பொன்னணியினும், பால் தரும் பசுவினமே பயன் மிக்கது என உணர்ந்த அவள், நெய்விற்ற பணத்திற்குப் பொற்காசு வாங்காது, பசு முதலாயின வாங்கிவரும் பண்பினைப் பாராட்டுவோமாக ! என்னே அவள் மனவளம் !

"நல்லிருள் விடியல் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி,
ஆம்பி வான்முகை யன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி, நுரை தெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ,
நாள்மோர் மாறும் நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதின், பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல், ஆய்மகள்,
அளைவிலை உணவிற் கிளையுடன் அருத்தி,
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்,
எருமை, நல்லான், கருநாகு பெறூஉம்."

(பெரும்பாண் : கருரு-சுரு)

நாட்டுமக்கள் நல்லோராய் வாழ்தற்கு அந் நாட்டு நல்லாட்சியே காரணமாம். திரையன் நாட்டு மக்கள் இத்தகு மனவளம் மிக்க மாண்புடையராதற்குத் திரையன் ஆட்சி நலனே காரணமாம்.

ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு, அந் நாட்டு அரசனாலும், அணங்குகளாலும், விலங்குகளாலும், கள்வர்களாலும், அச்சம் உண்டாதல் உண்டு. நல்லரசராவார், தம்மால், தம் அமைச்சர் முதலியோரால், தம் பகைவரால், கள்வரால், காட்டுக் கொடுவிலங்குகளால், கேடு வந்துறா வண்ணம் நாடாள்தல் வேண்டும். இத்தகு நல்லாட்சி, திரையன் ஆண்ட தொண்டை நாட்டில் நிலவி இருந்தது. திரையன், அல்லன கடிந்து நல்லன ஓம்பும் அறநெறி அறிந்தவன்; அதனால், அந் நாடு அரசரான் அழிவுறுவதில்லை. திரையன் நாடு காவல் செறிந்த நாடு; அதனால், வழிப்போவாரை வருத்தி, அவர் கைப்பொருளைக் கவர்ந்து செல்லும் ஆறலைகள்வரை அந் நாட்டில் எங்கும் காணல் அரிது. அவன் அறம் விரும்பு பெருங்கோலன்; அதனால், அவன் நாட்டு மக்களை, இடியும், இடித்துத் துயர் தருவதில்லை. பாம்புகளும் பிறரைக் கடித்துத் துயர் செய்யா; காட்டுவாழ் புலி முதலாம் கொடு விலங்குகளும், மக்களுக்குக் கொடுமை செய்வதில. அதனால், அவன் நாடு நோக்கி வரும் பதியோர், தாம் வேண்டும் இடத்தே, வேண்டியாங்கு இருந்து இளைப்பாறிச் செல்வர். என்னே அவன் நல்லாட்சி!

"அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன் படர்குவி ராயின்,
கேள் அவன் நிலையே; கெடுகநின் அவலம்;
அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவும் களவுஏர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்;
உருமும் உரறாது; அரவும் தப்பா;
காட்டு மாவும் உறுகண் செய்யா; வேட்டாங்கு
அசைவுழி அசைஇ, நசைவுழித் தங்கிச்
சென்மோ." (பெரும்பாண் : ௩௯-௪௫)

நாடு நலமெலாம் பெற்று நனிசிறந்து விளங்க நாடாண்ட நல்லோனாய திரையன் வரலாற்றினை விளங்க உணரும் வாய்ப்பு வாய்த்திலது; அவன் நாடு, அந் நாட்டு வளம், அவன் ஆட்சித்திறம் ஆகியவற்றை விளங்க விரித் துரைத்த புலவர்களும், அவன் வரலாற்றினை விரித்துரைத் தாரல்லர்.

திரையன், திருமாலை முதல்வனாக் கொண்ட குடியிற் பிறந்தவன்; திரைதரு மரபின் வழிவந்தவன்; திரையன் எனும் பெயருடையான்; சேர, சோழ, பாண்டியர் மூவரி னும் சிறந்தவன்; கடலிற் பிறந்த வளைகள் பலவற்றுள் ளும் வலம்புரிச் சங்கு சிறந்ததாதல்போல், அரசர் அனைவ ரினும் சிறந்தவன்: அல்லது கடிந்து அறம் விளங்க நாடாண்டவன்; வேற்படை பல வுடையான். நீர்ப் பேர் எனும் பெயருடையதொரு பேரூர் இவனுக்கு உரித்து. காஞ்சியைத் தலைநகராக் கொண்டு காவல் மேற்கொண்ட வன். யானைகள் கொணரும் விறகினால் வேள்வி வேட்கும் அந்தணர் நிறைந்த வேங்கட மலையும் அவன் ஆட்சிக்குட் பட்டதே. பகைவர் பணிந்து திறைதர முன்வரினும் அதை ஏற்றுக்கொள்ள எண்ணாராய், அவரை அழித்து அவர் பொருள் அனைத்தையும் கைப்பற்றி உண்ணும் ஆற்றல் வாய்ந்தவர். தன் பாட்டுடைத் தலைவன் திரையன் வரலாறாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுவன இத்துணையவே.

“இருநிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோன் உம்பல்;
மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்,
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்,
பல் வேல் திரையன்.” (பெரும்பாண் : உக-நஎ)

“நீர்ப் பெயற்று எல்லைப் போகி.” (ஷை நகக)

"கச்சி யோனே கைவண் தோன்றல்."
(பெரும்பாண்: சஉ0)

"பகைவர், கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது, வினையுடம் படினும்,
ஒன்றல் செல்லா, உரவுவாள் தடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக."
(ஷை சடு0-ச)

"செந்தீப் பேணிய முனிவர், வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங்கு அருவிய மலைகிழவோனே."
(ஷை: ௬கூஅ-டு00)

திரையன் வரலாறு குறித்துப் பல்வேறு கருத்துக்களைக் கூறுவர் ஆராய்ச்சியாளர். "நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாக கன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான்பெற்ற புதல்வனை என்செய்வேன் என்ற பொழுது, தொண்டையையே அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட, அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பல் என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின் திரையன் என்று பெயர் பெற்றான்," என, நச்சினார்க்கினியர் கூறும் செய்திகளை ஏற்றுக்கொண்டு, அச் சோழன் கிள்ளிவளவனவன்; நாககன்னி பீலிவளையாவள் என்று கொள்வர் சிலர். பல்லவன், அசுவத்தாமனுக்கும், மதனி என்ற அரமகள் ஒருத்திக்கும் பிறந்தவனவன்; அசுவத்தாமன், துரோணரின் மகன்; துரோணர், கங்கை நீரிற் பிறந்தவராய "க்ருதாசி" என்ற நீரரமகளுக்கும், பாரத்வாஜ முனிவருக்கும் பிறந்தவர். இதனால், பல்லவர், திரைதரு மகளிர் மரபினராதல் தெளிவாம்; இப்பல்லவரைக் குறிக்க வழங்கும் தொண்டையர் என்ற பெயரின்கண்வரும் தொண்டை என்ற சொல், துரோணம் என்ற சொல்லின் மரூஉ முடிபாம் என்றுகூறித் திரையன் வரலாறு குறித்து நச்சினார்க்கினியர் கூறியதை மறுத்து வேறு கூறுவர் சிலர்:

# உ. தொண்டைமான்

"சான்றோர் உடைத்து" என்ற சிறப்புடையது தொண்டைநாடு; ஆமூர், இளங்காடு, ஈக்காடு, ஈத்தூர், ஊற்றுக்காடு, எயில், கடிகை, கலியூர், களத்தூர், குன்றபத்திரம், சிறுகரை, செங்காடு, செந்திருக்கை, செம்பூர், தாமல், படுவூர், பல்குன்றம், புலால், புலியூர், பேயூர், மனவூர், வெண்குன்றம், வேங்கடம், வேலூர் முதலாய இருபத்து நான்கு கோட்டங்களைக் கொண்டது எனக் கூறப்படும் தொண்டை நாடு, அருவா, அருவாவடதலை ஆய இருநாடுகளையும், வேங்கடமலையையும் உள்ளடக்கிய நாடாகப் பண்டு இருந்தது. தொண்டையர் வாழ்ந்ததால், அந்நாடு, தொண்டை நாடு எனப் பெயர் பெற்றது. தொண்டையர், வேங்கடமலையில் வேட்டையாடிக் கொண்ட யானைகளாலாய பெரிய படையுடையவர். அப் படை யுடைமையால், பகைவர் நாடுகளை வென்று ஆண்டுத் தாம்கொண்ட பொருள்கொண்டு வாழும் வாழ்க்கை யுடையவர். பகைவர் போரண்களை அழித்து, அப் பகைவர் தம் முடிகளைக் கைப்பற்றி வெற்றிப்புகழ் கொள்வதை விடுத்து, அப் பகைவரோடு பகை தணிந்து போதலை விரும்பா வீரம் உடையவர்.

"வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்,
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் ளருவி வேங்கடம்" (அகம்: உகந)

"பொருவார்
மண்ணெடுத் துண்ணும், அண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர்" (குறுந்: உசுO)

"பகைவர்
கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது, வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா, உரவுவாள் தடக்கைக்
கொண்டி உண்டித் தொண்டையோர்."
(பெரும்பாண்: சுருO-ருச)

இவ்வாறு புலவர் போற்ற வாழ்ந்த வளமார் குடியில் வந்தவன் தொண்டைமான். தொண்டைமான், அதியமான் நெடுமானஞ்சிக்குரிய தகடூரை அடுத்த நாட்டில் வாழ்ந்திருந்தான்; தன் அண்டை அரசுகளோடு பகை கொண்டு வாழும் பண்புடைய அதியமான் தொண்டைமானோடும் பகைகொண்டான்; தொண்டைமானே பேராற்றல் உடையவன்; பெரும்படை யுடையவன்; பேராணும் பெற்றிருந்தான். அதனால், தொண்டைமான் படை கண்டு கலங்கினான்; பகை தணிந்து வாழவும் விரும்பினான்; தன் அவைப் புலவர் ஔவையாரை அது குறித்துத் தொண்டைமான்பால் தூதனுப்பினான். ஔவையாரும் தொண்டைமான்பால் சென்றார்; வந்த ஔவையை அன்புடன் வரவேற்றான் தொண்டைமான்; அவர்க்குத் தன்படைக் கலக்கொட்டிலைத் திறந்து காட்டினான்; போருண்டாயின், உடனே பயன்படுதற்கேற்ற நிலையில், அடுக்கிவைக்கப் பட்டிருக்கும் அப் படைக்கலங்களைக் கண்டு நின்ற ஔவைக்கு, "ஔவையே! இத்துணைப் பெரும்படை யுடையேன் யான்; இத்தகையேன், அதியமானொடு பகையொழிதல் ஏனோ?" "என்று கூறிநின்றான். படைக்கலக்கொட்டிலைக் கண்ட ஔவையார், அதியமான் அனுப்ப வந்தவர் தாம் என்ற எண்ணத்தால், தொண்டைமான் படைகளைப் புகழ்வார்போல் பழித்தும், அதியமான் படைக்கலங்களைப் பழிப்பார்போல் புகழ்ந்தும் வந்தார் எனினும் அவன், படை கண்டு உண்மையிலேயே அஞ்சியிருப்பர். "வென்றியல்லது வினையுடம்படினும் ஒன்றல் செல்லா" உரவுடையோர் வழிவந்த தொண்டைமான், ஔவையார், வேண்ட அமர் ஒழித்து இரான்; அதியமானொடு போரிட்டேயிருப்பன். அதியமானும், அவன் ஆண்டிருந்த தகடூரும் அழிவுற்றதில், தொண்டைமானும் பங்குகொண்டே யிருப்பன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறு பேராண்மை தோன்ற வாழ்ந்த தொண்டைமான் பிறந்தகுடி, தமிழரசர் மூவரினும் தனிப்புகழ் பெற்றுப் பாராண்ட திரையனைப் பெற்ற பெருமையையும் உடையது.

"இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்தி, நெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே; அவ்வே,
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ."

"அதியமான் தூதுவிடத் தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு அவன் படைக்கலக் கொட்டில் காட்ட அவர் பாடியது." (புறம்: ௯௫.)

## ௩. நன்னன்சேய் நன்னன்

"சான்றோர் உடைத்து" எனும் உயர் புகழ்கொண்ட தொண்டை நாட்டின் பெரும்பிரிவாகிய இருபத்து நான்கு கோட்டங்களுள், பல்குன்றக் கோட்டம் என்பதும் ஒன்று; குன்றுகள் பலவற்றைத் தன்பாற் கொண்டிருத்தலின் இக் கோட்டம் அப் பெயர் பெற்றது; மலைபடுகடாம் பாடிய புலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், "குன்றுசூழ் இருக்கை நாடு" (மலைபடுகடாம்: ௫௮௩) எனப் பெயரிட்டு அழைப்பர். வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களின் ஒன்று கூடும் இடமாகத், திருவண்ணாமலைக்கு மேற்றிசைக்கண் உள்ள இவ்வூர், வடார்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தின் தலைநகராய் இன்று திகழ்கிறது; செங்கண்மா, செங்கமா, செங்கம் என்றெல்லாம் இக் காலத்தே வழங்கப் பெறும் அவ்வூர், பேரரசின் தலைநகராம் பெருமையினைப் பண்டு பெற்றிருந்தது என்பதைக் காட்டும், அழிந்த அகழி, இடிந்த கோட்டை முதலாயினவற்றை இன்றும் கொண்டுளது.

பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாவில் இருந்து அரசாண்டான் நன்னன் சேய் நன்னன் எனும் வேளிர் குலத்தான் ஒருவன்; இவன் வேளிர் வழிவந்தவன் என்பது, "வேள்" "மானவிறல்வேள்" என மலைபடுகடாத்தில் (௬௪, ௧௬௪) அவன் அழைக்கப் பெறுதலால் உணரலாம்; நன்னன்சேய் நன்னன் என அழைக்கப்பெறும், இந் நன்னனின் தந்தையாய நன்னன், யாவன் என்பது குறித்து ஆராய்ச்சியாளரிடையே ஒருமைப்பாடு உண்டாகவில்லை.

"நன்னன் சேய் நன்னனுக்குரிய மலைநாடு ஏழிற் குன்றம் எனவும் வழங்கப்பெறும்; அஃது ஏழு மலைப்பகுதிகளைக் கொண்டிருந்தமையால், அப் பெயர் பெற்றதாகத் தெரிகிறது; பல்குன்றக் கோட்டம் எனும் பெயர் வழக்

கின் காரணமும் இதுவே யாதல்வேண்டும்; ஆகவே, ஏழில் மலையைக் கொண்ட கொண்கான நாடு, நவிரம் எனும் மலையைப் பெற்ற பல்குன்றக் கோட்டம் என்ற தொடர்கள் இரண்டும் இருவேறு நாடுகளைக் குறிப்பன அல்ல; ஒரே நாட்டைக் குறிக்க வழங்கும் இரு பெயர்களாம்; மலைபடுகடாம் பெற்ற நன்னன், புலவர் புகழ்ச்சிக்கு உரியவனாய்ப் போற்றப்படுகிறான்; ஆகவே, பெண்கொலை புரிந்த நன்னன் எனப் பழிக்கப்படும் கொண்கானத்து நன்னனே, நன்னன் சேய் நன்னனின் தந்தையாதல் வேண்டும். "அறிவார்யார் நல்லாள் பிறக்குங்குடி" என்றவாறு கொடுமைக்கு நிலைக்களமாய நன்னனுக்கு, நற்குணமே திரண்ட நன்னன் சேய் நன்னன் பிறந்தான்; தீய தந்தை பெயரை விலக்கி யொழியாது இவனுடன் இணைத்தது, "கள்ளி வயிற்றினகில் பிறக்கும் என்னும் முதுமொழியை உலகோர்க்கு மெய்ப்பித்தற்குப் போதும்," எனக் கூறுவர் ஒரு சாரார்.

"மலை நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட சிற்றரசனாகிய நன்னன், நெடுந்தூரத்ததாகிய—தொண்டை நாட்டில் உள்ள—பல்குன்றக் கோட்டத்தையும் ஆண்டுவந்தான் எனக் கொள்வதில் ஐயம் உண்டாயிற்று; அக் காலத்தில் முடிவேந்தராய் விளங்கிய சேரவேந்தரும் தமிழ்நாட்டில் இத்துணை நெடுந்தூரம்வரை ஆண்டனர் எனத் தெரியவில்லை. "பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள்" என்னும் அடைமொழி, கொண்கானத்து நன்னனினின்றும், இந் நன்னனைப் பிரித்துக் காட்டுவதற்காகவே கொடுத்தது போலத் தோன்றுகிறது, எனக் கூறி இதை மறுப்பர் சிலர்.

கொண்கானத்து நன்னனும், பல்குன்றக் கோட்டத்து நன்னனும் தந்தையும், மகனுமாய முறையுடையார், அவ்விருவரும் எத்திறத்தானும் தொடர்புடையாரல்லர் என்ற இருவர் கூற்றையும் முற்றும் ஏற்றுக் கொள்வதோ மறுப்பதோ செய்யாது, "செங்கண்மா எனும் நகரம், கொண்கான நாட்டின் ஒருபகுதியான சேலம் மாவட்டத்தை

யடுத்து உளது ஆதலின், அந் நகரமும், பல்குன்றக் கோட்டமும், கொண்கான நாட்டினைச் சேர்ந்திருத்தல் கூடும் என்று உணரக்கிடக்கிறது; அதனால் செங்கண் மாத்து நன்னனும், அவன் தந்தையாய நன்னனும், கொண் கான நாட்டு நன்னன் குடிப்பிறந்தாரே என்று துணிய வேண்டும்," என்பர் மற்றும் சிலர்.

சேரரோடு யாரோ ஒருவகையால் உறவுபூண்டு அத னால், "உதியன்" எனச் சிறப்புப் பெயர் பெற்று, அதே நிலையில், அச்சேரரோடு பகைகொண்டு களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலால் உயிர் இழந்த கொண்கான நாட்டு நன்னன், சேரர்க்கும் சோழர்க்கும் கழுமலம் எனுமிடத்தே நடைபெற்ற போரில், சேரர்க்குப் படைத்துணை யளித்த நன்னன்; சேரரோடு சிறிதும் தொடர்பு இலனாய்ப் பல் குன்றக் கோட்டம் ஆண்ட நன்னன் சேய்நன்னன் என நன்னன் எனும் பெயருடையார் மூவர் உளர் எனத் தெரி தலால், அவர் வரலாற்றினை அறிதற்கண் ஆராய்ச்சியாளர் பெரிதும் விழிப்புடையராதல் வேண்டும்.

"நன்னன் சேய்நன்னனுக்கு 'வானவிறல்வேள்' என்ற சிறப்புப் பெயரொன்று மலைபடுகடாத்தில் கூறப்பட்டுளது (கசுச). இத்தொடர்மொழியே மதுரைக் காஞ்சியில் அழும் பில்வேள் என்பானுக்கும் வழங்குவதாம் (அடி: நஉசச-ரு) இவ் வேளும் சேரமானது கருமத்தலைவரில் ஒருவனாவன்; (சிலப்: உரு-கஎஎ; உ௮-உ0ரு). இவ்வாறு சேரரது அரசி யலில் தலைமை வகித்த சிலர்க்கு "வானவிறல்வேள்" என் னும் சிறப்புப் பெயர் வழங்குதலை நோக்கும்போது, அது, வானவனது வெற்றிக்குரிய வேள் என்ற பொருளில் வந்த தொடராதல் வேண்டும் என்று கருத இடந்தருகிறது; வானவன்; சேரன்; வானவன் விறல்வேள் என்பது வான விறல் வேள் என்று மருவியதாகல் வேண்டும்; ஆகவே, வானவிறல் வேள் என அழைக்கப் பெறும் செங்கண் மாத்து நன்னன், சேரர் படையில் பணியாற்றியவனாவன் என்பது புலப்படும்; சேரமானது படைத்தலைமை வகிக்கும் சிறப்பினை அவன் பெற்றிருந்தான் என்பதை, "நன்

னன் உதியன் அருங்கடிப்பாழி'' என்ற தொடரானும் (அகம்: உடுஅ) "நன்னன் ஏற்றை" எனத் தொடங்கும் அகப்பாட்டானும் (சச) அறியலாம்;' என்று கருதுவாரும் உளர்.

மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம் இரண்டினும், "மான விறல்வேள்" என, உளதே யல்லால், வானவன் வெற்றிக் குரிய வேள் எனப் பொருள் தரும் "வானவிறல்வேள்" எனக் காணப்படவில்லை; "விளங்கு பெருந்திருவின் மான விறல்வேள் அழும்பில் அன்ன நாடிழந் தனரும்" (மதுரை: ௩சச-௫) "நோனுச் செருவின் வலம்படு நோன்ருள், மானவிறல்வேள் வயிரியம் எனினே" (மலை படு: கசுரு-சுச). மதுரைக் காஞ்சி உரையாசிரியர், அத் தொடர்க்கு "விளங்கும் பெரிய செல்வத்தினை உடைய மானவிறல் வேள் என்னும் குறுநில மன்னனுடைய அழும் பில் என்னும் ஊரையொத்த நாடுகளை இழந்தவர்களும்" என்று உரை கூறுவதால், மதுரைக்காஞ்சித் தலைவனால் நாடிழந்தவன் மானவிறல் வேள் அல்லன்; இழந்ததும் அழும்பில் அன்று; அழும்பில் போலும் வளம்நிறைந்த பிற நாடுகளே எனப் பெறப்படும்; இவ்வாறு கொள்ளாது, மானவிறல் வேளாகிய அழும்பில் என்பானைப்போல் நாடி ழந்தவரும் எனப் பொருள் கொள்வதாயின் அழும்பில் வேள், நெடுஞ்செழியனால் நாடிழந்தவனுதல் வேண்டும்; செங்குட்டுவன் படைத்தலைவருள் ஒருவன் எனக் கூறப் பெறும் அழும்பில் வேள், நெடுஞ்செழியனோடு போரிட்டுத் தோற்ருன் எனச் சிலப்பதிகாரம் உணர்த்தவில்லை.

ஆகவே, மதுரைக்காஞ்சித் தொடரான் உணர்த்தப்படு வோன், சேரன் படை முதலியாகான்; அவன் சேரன் படை முதலியாகான் எனவே, மானவிறல்வேள் எனும் தொடர், சேரன் படைத்தலைவன் எனும் பொருளுடையது ஆகாது; ஆகவே, மானவிறல் வேள் எனும் தொடர் ஒன்றையே கொண்டு, நன்னன்சேய் நன்னனைச் சேரன் படைமுதலி எனக் கோடல் பொருந்தாது; மலைபடுகடாத்தைப் படித் தார், அப் பாட்டைப் பெறும் பெரும்பேறு பெற்ற நன்

னன், ஒரு பேரரசின் கீழ்ப்பணியாற்றிய பல்லோருள் ஒரு வளவன் என்பதை ஒப்புக்கொள்ளார்; அவன் நாடும், அவனும் அத்துணைச் சிறந்து விளங்கியுள்ளனர்; 'நன்னன் ஏற்றை' என்ற அகப்பாட்டான், சேரன் படை முதலி களுள் ஒருவனாக உணரப்படும் நன்னன் கொண்கானத்து நன்னனுமாகான்; நன்னன் சேய் நன்னனும் ஆகான்; நன்னன் எனும் பெயர்பூண்ட பிறனொருவனே ஆவன்; "நன்னன் உதியன், அருங்கடிப்பாழி" என்ற தொடரால், சேரரோடு தொடர்புடையனாக விளங்கும் நன்னன், அச் சேரரோடு பகைகொண்ட கொண்கானத்து நன்னனே யாவன்; சேரரோடு உறவுடையார், அச்சேரரைப் பகைத்து வாழ்ந்தனர் என்பதற்குச் சங்கநூல்களுள் எத்தனையோ சான்றுகள் உள: சேரர்க்குரிய பனந்தார் பூண்டு சேரர்க்கு உறவுடையனாய தகடூர் அதியமான் நெடுமான் அஞ்சி, பெருஞ்சேரல் இரும்பொறையொடு பகைத்துப் போரிட்டு உயிர் இழந்தான்; குட்டுவன் எனும் பெயர் உடைமையால், சேரமரபினன் என உணரப்படும் திருக் குட்டுவன் என்பான், சேரர்க்குப் பகைவராய சோழன் படையில் பணியாற்றிச் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் எனும் பெயர் கொண்டு வாழ்ந்தான் என்ற வரலாறுகளை நோக்குக.

பல்குன்றக் கோட்டம், பெரியனவும், சிறியனவுமாய மலைகள் பலவற்றைக் கொண்ட ஒரு மலைநாடு; ஆகவே, அந்நாடு மலைவளம் பலவும் மலியக் கொண்டிருந்தது; மலை யும், காடும் மண்டிக்கிடக்கும் அக் குறிஞ்சி நிலத்தே, கூத்தர்கொண்டு செல்லும் இசைக்கருவிகளினின்றும் எழும் இன்னிசைபோலும் அருவியொலியும், யானையைப் பிடிப்பார் எழுப்பும் பேரொலியும், எய்ப்பன்றியால் தாக் குண்ட கானவர் எழுப்பும் அழுகை யொலியும், தம் கணவர் மார்பில் புலிபாய்ந்து தாக்கிய புண்ணைப் பாடிப் போக்கும் கொடிச்சியர் பாடல் ஒலியும், வேங்கை மலர் கொய்யும் மகளிர் எழுப்பும் புலிபுலிப் பூசலும், சூலுற்ற தனக்கு வேண்டும் தழை தேடிச் சென்ற தன் களிற்றினைப்

புலி தாக்கக் கண்ட பிடி, காட்டுவாழ் யானைகள் அனைத்தையும் ஒன்று கூட்டி எழுப்பும் கூப்பீட்டொலியும், கிளைக்குக்கிளை தாவுங்கால் கைப்பிடி தளர்ந்த தன் குட்டி ஆழ்ந்த முழையிலே வீழ்ந்திறப்பக் கண்ட மந்தி, தம் இனத்தோடும் கூடி எழுப்பும் இரங்கற் பேரொலியும், குரங்கும் ஏறமாட்டாக் குன்றின் உச்சியில் உள்ள தேனிறாலை ஏணிகொண்டு ஏறிப்பெற்ற கானவர் வெற்றிக் களிப்பும், அழித்தற் கரிய பகைவர்தம் அரண்களை அழித்துப் பெரும்பொருள் கொணர்ந்த கானவர், ஆர்வமிகுதியால் எழுப்பும் ஆரவாரமும், குறக்குல மகளிர் ஆடும் குரவைக் கூத்திடை எழுப்பும் பாட்டொலியும், கல்மீதும், கற்பாறைகள் மீதும் ஓடிவரும் ஆறுகள், மலை முழைஞ்சுகளில் வீழ்வதால் எழும் இடையறாப் பேரொலியும், யானையைப் பழக்குவார், 'அப்புது, அப்புது; ஆது, ஆது; ஐ, ஐ' என்பன போலும் மொழிகளைக் கற்றுத்தரும் ஆரவாரமும், மகளிர், தட்டைகளைப் புடைப்பதால், புனந்தொறும் எழும் கிளிகடி யொலியும், குறிஞ்சி நிலக்குறவரும், முல்லைநிலக் கோவலரும் ஏற்றையும், எருதையும் பொரவிட்டு, வெற்றி கண்டு மகிழும் விழா வொலியும், தின்று எஞ்சிய பலாப்பழத்தினின்றும் கொட்டைகளை மட்டும் கொள்ள விரும்பும் குறக்குடிச் சிறுவர்கள், அப் பழங்களைக் கீழிட்டுக் கன்றுகளைப் பிணித்துக் கடாவிடும் குரலொலியும், மகளிர் தினை கொய்யுங்கால் பாடும் வள்ளைப்பாட்டொலியும், மஞ்சளையும், சேம்பையும் பன்றிகள் தோண்டி உண்ணுவாறு தடுக்க, எழுப்பும் பறையொலியும், ஆய பல்வேறு ஒலிகள் எதிரொலித்து ஒலிக்க, எக் காலத்தும் கேட்கலாம் எனின், அந் நாட்டின் வளத்தினை விளங்க வேறு உரைத்தலும் வேண்டுமோ?

நன்னனுக்குரிய பல்குன்றக் கோட்டத்தில், நவிரம் எனும் பெயருடைய மலையொன்று உண்டு; அம்மலை, "நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல் பேரிசை நவிரம்" எனவும்," "வளம் பிழைப்பறியாது வாய்வளம் பழுநிக் கழைவளர் நவிரம்" எனவும் புலவரால் பாராட்டப் பெறு

கிறது. இம்மலையில், காரியுண்டிக் கடவுள் என்ற திரு நாமம் கொண்ட சிவபெருமான் திருக்கோயில் கொண்டுள்ளார். அம்மலைக்கு இக் காலத்தே வழங்கும் பெயர், திரிசூலகிரி, பர்வதமலை என்பன; ஆங்குறை இறைவனுக்கு இக் காலத்தார் வழங்கும் திரு நாமம் காளகண்டேசுவரர் என்பது; இம்மலை திருவண்ணாமலைக்கு வடமேற்கில் உளது.

நன்னன் நாட்டில் பாய்ந்தோடும் ஆறு சேயாறு; இச் சேயாறு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் சவ்வாது மலையிடத்தே தோன்றிச் செங்கம், திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யாறு முதலிய வட்டங்கள் வழியே ஓடிச் செங்கற்பட்டிற்கு அருகே, பாலாற்றோடு கலந்து விடுகிறது. அவ்யாற்றிற்குச் சண்முக நதி என்பதும் ஒரு பெயர் உண்டு; சிவமகனார் கொண்டு வருதலால் சேயாறு எனப் பெயர் பெற்றது என்பர் சிலர்; வேறு சிலர், சேய் எனச் சிறப்பிக்கப் பெறும் முருகன் அருளால் வந்த ஆறு ஆதலின், அப் பெயர் பெற்றது என்று கூறுவர். குயவன் திகிரி போலும் சுழல்களைக்கொண்டு ஓடிவரும் வெள்ளக் காட்சி காண்பார்க்கு இனிய காட்சியாம் எனப் புலவர் போற்றுவர் சேயாற்றை.

> "வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்
> துனைசெலல் தலைவாய் ஓவிறந்து வரிக்கும்
> காணுநர் வயாஅம் கட்கின் சேயாறு."
>
> "நெடுவரை இழிதரும் நீத்தம் சால் அருவிக்
> கடுவரற் கலுழிக் கட்கின் சேயாறு."
>
> (மலைபடுகடாம்: ௪௭௪-௬; ௫௫௪-௫)

நன்னன் இருந்து அரசாண்ட தலைநகர் செங்கண்மா. மலைபோல் உயர்ந்து வானைத்தீண்டும் மதிலையும், அம்மதிலையடுத்து முதலைகள் வாழத்தக்க ஆழமும், நீர் அருமையும் உடைய அகழியையும் கொண்ட செங்கண்மா, சீரிய, பெரிய அங்காடிகளையும், ஆறுபோல் அகன்ற பெரிய தெருக்களையும், அடைந்தார் அறிவை மயக்கும் குறுந்

தெருக்களையும், மலைபோலும் மாடங்களையும், காதலர் இனிது உறைந்து இன்பம் நுகர்தற்காம் இளமரச் சோலைகளையும், ஊரினின்றும் பெயர்ந்து பிறநாடு போதலை உள்ளத்தான் உள்ளியும் அறியாப் பழங்குடிகளையும் கடல் ஒலி போலவும், கார்மேகத் தொலிபோலவும் எழும் பல்வேறு ஒலிகளையும் பெற்றுப் பெருநகராய்த் திகழ்ந்தது.

"இரைதேர்ந்திவரும் கொடுந்தாள் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்தோய் இஞ்சி
உரைசெல வெறுத்த அவன்மூதூர்"

(மலைபடு: கூ0-கூரு)

"நிதியம் துஞ்சும் நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழல் அறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்து
யாறெனக் கிடந்த தெருவின், சாறென
இகழுநர் வெரூஉம் கவலை மறுகின்,
கடல் எனக் கார் என ஒலிக்கும் சும்மையொடு
மலையென, மழையென மாடம் ஓங்கித்
துனிதீர் காதலின் இனிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரும்
......அவன் பழவிறல் மூதூர்" (மலைபடு: சஎஅ-அஎ)

நன்னனுக்குரிய நாடும், ஊரும், ஆறும், பிறவும் நல்லன ஆதலைப் போன்றே, அவன் நாட்டு வாழ்மக்களும் நனிமிக நல்லவராவர்; காட்டு மக்கள் கொடியராவர் என்றே எவரும் எண்ணியிருப்பர்; எங்கும் அவர் அவ்வாறேயுள்ளனர்; ஆனால், நன்னன் நாட்டைச் சேர்ந்த காட்டு வாழ் மக்கள் அத்தன்மையரல்லர்; அவர்கள் அவ்வழியே வரும் புதியோர்க்கு ஊறு ஒன்றும் விளைக்காது, அன்னார், அவ்விடங்களை இனிதே கழியுமாறு இனிய துணைவராவர்; தம் குடியில் தங்கிய வழிச்செல்வார்க்கும் அவரோடு உடன் வந்தார் அனைவர்க்கும் தேனும், கிழங்கும் தெவிட்டா ஊனும் தவறாது தந்து அனுப்புவர்; அத்துணை அருள் உள்ளம் உடையார் அவர்:

"......துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யாது இயங்குநர் இயக்கும்
அடுக்கல் மீமிசை"
தேனினர், கிழங்கினர், ஊனூர் வட்டியர்
..............................................
கானவர், செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே,
இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்"
(மலைபடு: கஎ-கக-கடுஉ-எ)

மலையைச் சேர்ந்த சிற்றூர்களில் வாழும் குறவர்கள், தம் ஊர் நோக்கி வருவார், நன்னனை நாடிச் செல்லும் பரிசிலராவர் என்பதை அறிவாராயின், அவரைத் தாம் வேறு, அவர் வேறு என எண்ணாது, தமரேபோல் மதித்துத் தம் மால் ஆவன எல்லாம் அளித்து அகமகிழ்வர்; ஆண்டுச் செல்வார், அன்னார் இல்லங்களுள், தம் இல்லங்களுள் நுழைவதேபோல் நில்லாது நுழைதலும், அவ்வில்லுறை பொருள்களைத் தம் பொருள்களேபோல் பயன் கோடலும் கூடும்; ஆண்டுவாழ் குறவர்குல மகளிர், ஆண்டுவரும் புதியரை, அண்ணன் எனவும், அம்மான் எனவும் தம்மக்கட்கு முறைகூறி, நும்பால் அவரை அனுப்பி, அழைத்து விருந்தேற்றுப் போற்றுவர்; அன்னார் காட்டும் அன்பில், நன்னனைப் பாடிச் செல்லும் பரிசிலர், அந் நன்னனை நாடிச் செல்லும் தம் எண்ணத்தை மறத்தலும் கூடும்.

"சிலம்படைந் திருந்த பாக்கம் எய்தி,
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே,
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇ,"
"குறமகள் ஆக்கிய வாலவிழ் வல்சி
அகமலி உவகை ஆர்வமொடு அளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பின் குருசில் முன்னிய
பரிசில் மறப்ப நீடலும் உரியிர்"
(மலைபடு: கசுஉ-சு; கஅக-எ)

அவன் நாடுவாழ் ஆயர்பாலும் அப்பண்பே நிகழும்; இடையர் வாழ் இல்லங்கட்குப் பரிசிலர் இராக்காலத்தே சென்று விட்டால், அவர்க்கு அக் காலத்தே உணவாக்கி அளித்தல் இயலாது என அறிந்த அவ்வாயர், தமக்கென வைத்திருக்கும் பாலையும், பாற்சோற்றையும் அளித்து அன்பு காட்டுவர்.

"பல்யாட்டு இனநிரை எல்லினிர் புகினே,
பாலும், மிதவையும் பண்ணாது பெறுகுவிர்"

(மலைபடு: சசகூ-எ)

நன்னன் தலைநகரிடத்தே வாழும் நகரமாந்தரும், அவன் நாட்டினும், காட்டினும் வாழும் மக்களைப் போன்றே நனிமிக நல்லவராவர்; தம் வீடுநோக்கி வந்தாரை விரும்பி வரவேற்று, விருந்தோம்பும் வேளாண்மை, அவர் பாலும் பொருந்தியிருந்தது; நன்னனை நோக்கி வந்த பரிசிலர், ஊர்மன்றத்தே இருக்கக் காணும் அந்நகர் மக்கள், "இவர்கள் மிகச் சேய நாட்டினின்றும் வந்துள்ளனர்; வெல்லும் போர்வல்ல நம் நன்னன்சேய் நன்னனை நாடி வந்துள்ளனர்; மிகவும் வருந்திவந்துள்ளனர்; அளியர்" என்று எண்ணி முகமலர்ந்து நோக்கி, இன்னுரை பல வழங்கி ஒவ்வொருவர் ஒவ்வொரு நாளாக விருந்தளித்துப் பேணி, வழிநடை வருத்தத்தால் வந்த அவர் துயர்போக்கி அருள் செய்வர்; அன்னார் அருள்உள்ளத்தின் அழகினை என்னென்பது! அரசன் எவ்வழி, அவ்வழியன்றோ குடிகள்!

"மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்,
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிறல் உள்ளி
வந்தோர் மன்ற; அளியர்தாம்; எனக்
கண்டோர் எல்லாம் அமர்ந்து இனிதின் நோக்கி
விருந்திறை யவரவர் எதிர்கொளக் குறுகிப்
பரிபுலம் பலைத்த நும்வருத்தம் வீட."

(மலைபடு: சகூஉ-எ)

இவ்வாறு நீர்வளமும், நிலவளமும் நிறைந்த நாடும், மனவளம் நிறைந்த மக்களும் உடையனாய நன்னன் சேய்

நன்னன், நல்லோர் போற்றும் நற்பண்பு பலபெற்றும் விளங்கினான். நன்னன், பகைவரைப் பாழ்படுக்கும் பேராற்றலும், அப் பகைவர் அணுகுதற்கும் அஞ்சும் வாளாண்மையும் பெற்றிருந்தான்; விற்போர் வல்லனாய் விளங்கினான்; இந்நிலவுலகம் நிற்குமளவும், அழியாப் பெரும்புகழ் நின்று நிலைபெறுமாறு, பகைவர் பலரை வென்று புறங்கண்டு, அவர்பால் கவர்ந்து கொண்ட பெறு தற்கரிய பேரணிகலங்கள் அனைத்தையும், தன்னைப் பாடி வரும் புலவர் முதலாம் இரவலர் தமக்கு வரையாது வழங்கி வள்ளியோனாய் வாழ்ந்தான்; பகற்பொழுதை விளக்கத் தோன்றும் ஞாயிறு, இருளாகிய பகையைக் கடிந்து ஒளி பெற்றுத் திகழ்வதேபோல், நன்னனும், தன் பகைவரை அழித்துப் புகழ் மிகப் பெற்றுத் திகழும் பெருஞ் சிறப் புற்றான்; பகைவர் பெருவாழ்வு வாழப் பார்த்தும் பொறு மையுடையராதல், பேராண்மையுடையராய பேரரசர்க்கு அழகன்று; பகையரசர் தம் பெருவாழ்வுகண்டு பொறு தாரே, பேரரசுடையராதல் கூடும். மேலும், பகைவரொடு மேற்கொள்ளும் முயற்சி, வெற்றிதரு முயற்சியாதலன்றி, வீண்முயற்சியாதல் கூடாது. அதற்கு, அரசராவார், மான மும், மனம்நிறை ஊக்கமும் உடையராதல் வேண்டும்; நல்ல அரசர்மாட்டு நின்று நிலைபெறவேண்டிய இந் நற்பண்புகள் எல்லாம், நன்னன்பால் நிறையப் பொருந்தி யிருந்தன.

"முனைபாழ் படுக்கும் துன்னருந் துப்பின்."

"வில்நவில் தடக்கை, மேவரும் பெரும்பூண்
நன்னன் சேய் நன்னன்."

"தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்
பலர் புறங்கண்டு, அவர் அருங்கலம் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகை மாரி."

"பாயிருள் நீங்கப் பகல்செய்யா எழுதரும்
ஞாயிறு அன்னஅவன் வசையில் சிறப்பு."

"நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல் வேள்."

(மலைபடு: ௫௧; ௬௩-௪; ௭௦-௨; ௮௪-௫; ௧௬௩-௪)

எவ்வினையைத் தொடங்குவதாயினும், தொடங்குவதற்கு முன்னர்; அவ்வினையைத் தொடங்கின் உண்டாம் அழிவையும், ஆக்கத்தையும், அது முற்றுப்பெற்றவழி உண்டாம் பயனையும் எண்ணிப் பார்த்தே தொடங்குதல் வேண்டும். அவ்வாறு எண்ணுவார் பிழைபடு அறிவுடையராயின், அவர்க்கு ஆக்கத்திற்கு மாறாகக் கேடே வந்துறும்; ஆதலின், அவர் தெளிந்த அறிவினராதல் வேண்டும்; அத்தகு நல்லறிவை நன்னன் நனிமிகப் பெற்றிருந்தான் எனக் கூறுகிறார் மலைபடுகடாம் பாடிய ஆசிரியர்:

"மதிமாறு ஓரா நன்றுணர் சூழ்ச்சி." (மலைபடு: ௬௨)

கேளாரும் வேட்பமொழிவது வேந்தர்க்கு அழகு என்ப; தன்னை இகழ்வாரும், தன்னை விரும்புமாறு ஒழுக வல்ல ஆற்றல் அரசனுக்கு இன்றியமையாது வேண்டப்படும்; இந் நற்பண்பும் நன்னன் சேய் நன்னன்பால் நின்று நிலைபெற்றிருந்தது.

"இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும்." (மலைபடு - ௭௩)

"தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று," "செல்வத்துப் பயனே ஈதல்" என்றெல்லாம் கூறுவர் பெரியோர்; நிலைபேறில்லாத செல்வத்தைப் பெற்றார், அப்பொருளை, அஃது இல்லாமையால், தம்பால் வந்து இரந்து நிற்பார்க்கு வாரிவழங்கி, நிலைபெற்ற புகழைப் பெறுதல் வேண்டும். "அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது பெற்றால் அற்குப ஆங்கே செயல்" என்பது திருக்குறள். அவ்வாறு பெறுவாரே, அறிவுடையருமாவர்; அவ்வாறின்றிப் பேரரசும், பெருஞ் சுற்றமும் பெற்றிருந்தும், தம்பால் வந்து இரந்தார்க்கு இல்லை எனக்கூறி இழிவுடையராதல் நல்லறிவுடையார் செயலாகாது; அவ்வாறு பிறர்க்கு அளிக்காது பேணிய பொருள்கொண்டு வாழ்வார், இறவாப் பெருநெறி பெற்று, இவ்வுலகில் என்றும் வாழ்வா

ரல்லர்; அவ்வாறு ஆக்கிய பெரும் பொருளை அறவே கைவிட்டு, அவரும் இறப்பவே செய்வர்; இவ்வாறு இறந்தார், உலகில் எத்தனை எத்தனை கோடியோ! அன்னாரைப் போல், ஆற்றவும் பயன்படாது வாழ்தல் அறநெறி ஆகாது; பொருள் கொடுத்துப் புகழ்பெற்று வாழ்தலே பெருமையும், பேராண்மையும் ஆகும்; அவ்வறிவு வரப்பெற்றாரே உயர்ந்தோராவர்; அவர் உள்ளமே உயர்ந்த உள்ளமாம்; அவ்வுள்ளம் உடையான் நன்னனும்.

"உயர்ந்த கட்டில், உரும்பில் சுற்றத்து
அகன்ற தாயத்து, அஃகிய நுட்பத்து
இலம்என மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை இழிதரும் நீத்தம்சால் அருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவாழ் எக்கர் மணலினும் பலரே;
அதனால், புகழொடும் கழிகநம் வரைந்த நாள்எனப்
பரந்து இடங்கொடுக்கும் விசும்புதோய் உள்ளம்."
(மலைபடு: ருரு0-அ)

வரையாது வழங்கும் வள்ளன்மையுடையான் நன்னன்; தாம் கூறும் பாராட்டுரைகளாகிய விதைகளை விதைத்துத், தம்மால் புகழப்படுவார் தம் பொருள்களைப் பெற விரும்பும் சொல்லேருழவராம் புலவர் முதலாயினார்க்கு, ஆற்றுப்பெருக்கற்று அடிசுடும் அக்காலத்தே அரிதின் வந்து பயனூட்டும் அவ்வாற்று வெள்ளம்போல், அவர் வறுமை ஒழித்து வளம் கொழிக்க உதவும் வள்ளியோனாய் வாழ்ந்தான் நன்னன்; நின்றேத்தும் சூதர், இருந்து ஏத்தும் மாகதர், பாணர், கூத்தர் முதலாயினோர்க்குப் பகைவரை ஓட்டிப் பெற்ற பேரரசுகள் அனைத்தையும் ஒருங்கே அளித்தும் அவன் அமைதியுறுவானல்லன்; பெருமழையைப் பொய்யாது பெய்த பருவமழை, மீண்டும், மீண்டும் பெய்வதேபோல், அவர்க்கு மேலும் மேலும் அளிக்கும் நாளோலக்கச் சிறப்புடையனாயினான் நன்னன்:

"இசைநுவல் வித்தின், நசைஎர் உழவர்க்குப்
புதுநிறை வந்த புனலம் சாயல்."

"புகழு நர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்கும் அவன் நாண்மகிழ் இருக்கை."
(மலைபடு: ௬௦-௬௧; ௭௩-௭௬)

பெரும்படைத் தலைவர்கள்பால் காணலாம் போர் நுணுக்கம் பலவும் பொருந்தப் பெற்றவன் நன்னன்; போர் வீரர் உள்ளத்தே மகிழ்ச்சி நிறைந்திருந்தாலன்றி, அன்னார் உண்மையாகப் போர் புரியார்; உள்ளம் இல்லார் உடற்றும் போர், உறுபயன் தாராது; அவர் உள்ளம் உவப்ப வேண்டின், அரசராவார், அவர்க்கு உறுபொருள் தருதல் வேண்டும்; ஆகவே, தமக்கு வெற்றிதர, வெஞ்சமர் ஆற்றும் வீரர்க்கு, வேந்தர், வேண்டுமளவு பொருளளிக்க மறுத்தலாகாது; இவ்வுண்மை உணர்ந்து பகைவர்நாடு மிகச் சேய்மைக்கண் உளதாயினும் அஞ்சாது சென்று, அப் பகைவர் தம் தூசிப்படைகளை அறவே அழித்துக் கொன்றதோடமையாது, அப் பகைவர் யானைப் படையுட் புக்கு வேலேந்திப் போராற்றி வென்ற வீரர்க்கு, ஊரும், நாடும் ஒன்று பலவாக நல்கி ஊக்கும் நல்லறிவும், நற் புகழும் உடைய தன்முன்னோரைப் போன்றே, நன்னனும், அவர்க்குப் பெரும் பொருள் நல்குவனாயினன்.

"இகந்தன ஆயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து, நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேல்நிழல் புலவோர்க்குக்
கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவு."
(மலைபடு: ௮௬-௮௯)

அறிவு, ஆற்றல், அருள், ஆண்மைகளை இயல்பாகவே பெற்றுடையார் ஒருவர், அவற்றைத் தம்மினும் மிகுதியாகப் பெற்றிருக்கும் பெரியாரைத் துணையாகவும் பெற்று விடின், அவரை, அவற்றான் வேறல் யார்க்கும் அரிதாம்

என்ற உண்மை யுணர்ந்தவன் நன்னன், அரியகற்று ஆசற்றாரும், ஆன்றோர் நிறைந்த அவையுட் புக்கவழி அஞ்சுவர்; அஞ்சினார் தம் அறிவு கலங்கப்பெறும் ஆதலின், அந்நிலையில் அவர், தாம் கருதியதனை அவ் அவையினர்க்கு எடுத்துக் கூறவும் இயலாதவராவர். அந்நிலையில், ஆண்டுக் கூடியிருக்கும் ஆன்றோர், அவர் அச்சம் ஒழியும் வண்ணம் ஆவன கூறி, அவர் உள்ளத்துறையும் உறுபொருளை உள்ளவாறு உணர்த்தற்காம் உரன் உண்டாக்கி, அவர் கூறுவன கேட்டு அகமகிழ்தல் வேண்டும்; அதுவே ஆன்றோர்க்கு அழகு; அத்தகைய ஆன்றோர் நிறைந்த அவையே நிறைவுடை நல்லவையாம்; அத்தகு நல்லவையுடையார் நாடு, நலிவுறுதல் இல்லை; நன்னன் அவையகத்தே அத்தகைய நல்லோர் பலர் வாழ்ந்திருந்தனர் என்றால், அவன் பெருமையினைப் பகரவும் வேண்டுமோ?

> "நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
> வல்லா ராயினும், புறமறைத்துச் சென்றோரைச்
> சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
> நல்லிதின் இயக்கும் அவன்சுற்றத்து ஒழுக்கமும்."
>
> (மலைபடுகடாம்: எஎ-அ0)

# ௪. நன்னன் வேண்மான்

நன்னன் வேண்மான் எனும் இவ் வேளிர் குலத்தலைவன், புலவர் பெருமக்கள் பதின்மர், இருபதுக்கு மேற்பட்ட இடங்களில் விரித்துரைக்கவல்ல வரலாற்றுப் பெருமை யுடையனாவன்; இவன் வரலாற்றினை அறிய முற்பட்டார் பலராயினும், இவன் வரலாறு இதுவே என வரையறுத்துக் கூறினார் ஒருவரும் இலர்; இவன் வரலாறு குறித்த ஒருமித்த கருத்தினை ஆராய்ச்சியாளர் இதுகாறும் கொண்டனரல்லர்; அக்கால அரசரோடும், அரசியலோடும் அவன் கொண்டிருந்த தொடர்பு அத்துணை விரிவுடையது. நன்னன் வேண்மான் இருந்து ஆண்டநாடு கொண்கானம் எனப்படும்; அக்கொண்கான நாட்டில் விளங்கிய ஏழில், பாழி, பிரம்பு என்ற பெயருடைய மலைகளும், பாரம், பாழி, வியலூர் முதலிய ஊர்களும் அவனுக்கு உரியவாம். கொண்கானம், பொன்னுடைமையான் பொலிவுற்றது எனப் போற்றுவர் புலவர்; விண்ணைத் தொடும் கொடுமுடிகளையும், பொன்படு பாறைகளையும் உடையது அக்கொண்கானத்து மலை. பாழி, பகைவர் அணுகுதற்கரிய காவல் செறிந்தது; அதனால், வேளிர் பலரும் தாம் அரிதின் ஈட்டிய பெரும்பொருளை ஆங்குவைத்துப் போற்றிக் காத்தனர்; வயலை வேலியுடையது எனக் கூறப்பெறும் வியலூர், மிளகுக் கொடிகளையும், அதன் அருகே கிடந்து உறங்கும் யானைகளையும் உடைய கடற்கரை ஊராம் என இளங்கோவடிகள் சிறப்பிக்கும் பெருமையுடையது.

"நன்னன்,
பாழியன்ன கடியுடை வியனகர்ச்
செறிந்த காப்பு."

"நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்."

"பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பு."

"நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலை."

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்."

"நன்னன் நன்னாட்டு
ஏழில் குன்றத்துக் கவாஅன்."

"நன்னன் ஆய் பறம்பு."

"பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை."

(அகம்: கரு; கூஎ; கருஉ; கஅந; உருஅ; நூசக; நூருசு; நூஎஉ)

"பொன்படு கொண்கான நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றம்." (நற்: நூகக)

"கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர்." (சிலம்பு: உஅ; ககசு-ரு)

நன்னன் ஓரிடத்தே, "நன்னன் உதியன்" என அழைக்கப் பெறுகிறான்; "நன்னன் உதியன் அருங்கடிப் பாழி." (அகம்: உருஅ). உதியன் எனும் சொல், மூவேந்தருட் சேரரைக் குறிக்க வழங்கும் பெயராம்; அப் பெயர், நன்னன் பெயரோடு இணைந்து வழங்குவதாலும், நன்னனுக்குரிய கொண்கானநாடு, சேரநாட்டின் ஒருபகுதியாகக் கொள்ளப்படுதலாலும், நன்னன் யாதோ ஒரு வகையால், அச்சேரலோடு உறவுடையனாவன் எனத் தெரிகிறது. "நன்னன் ஏற்றை, நறும்பூண் அத்தி" எனத் தொடங்கும் அகப்பாட்டால் (சச). நன்னன் எனும் பெயருடையானொருவன், சேரர் படைத்தலைவனாய் விளங்கினான் எனத் தெரிகிறது. அந் நன்னனே, இந் நன்னன்; அவர் படையில் பணியாற்றியதினாலேயே, இவனுக்கு "உதியன்" எனும் சிறப்புப்பெயர் உண்டாயிற்று, என்று சிலர் கூறுகின்றனர். சேரர் படைத் தலைவர் பலருள் ஒருவனைப் பணி

யாற்றிய ஒருவன், அச்சேரரின் பகைவனுய்ப் பெருவாழ்வு வாழ்ந்தான்; அவனை அழிக்க, அச்சேரர் அரும் போர் ஆற்றவேண்டியவராயினர் எனல், அத்துணைப் பொருத்தம் உடைத்தன்று ஆதலாலும், ஒரு குலத்தில் வந்தாரே, தம் முட் பகைகொண்டு போர் உடற்றுவது பண்டைத் தமிழ் நாட்டு அரசியலில் இயல்பாக நிகழும் நிகழ்ச்சி யாதலின் 'உதியன்' எனப் பெயர் பூண்ட ஒன்றிஞலேயே, சேர ரோடு உறவுடையவன் எனக் கருதப்படும் ஒருவன், அச் சேரரோடு பகைகொண்டு வாழ்ந்தான் எனல் இயல்புடைய தாகாது எனல் பொருந்தாது ஆதலாலும், சேரர் படைத் தலைவனுய்ப் பணியாற்றினவன் அல்லன் இந் நன்னன்; இவன் வேறு; அவன்வேறு என்றே கொள்க.

நன்னன், "வேண்மான்" எனவும் அழைக்கப் பெறு வன்; "நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்" (அகம்: கூஎ). நன்னனுக்குரிய பாழிப் பெருநகரில், தம் பெரும் பொருளை வைத்துப் போற்றிக் காத்தனர் வேளிர் (அகம்: உடு அ-டுஎஉ). இவ்விரண்டினையும் ஒருங்கு வைத்து நோக்குவார்க்கு, நன்னன், வேளிர் வழிவந்தவன் என்பது எளிதிற் புலனும். நிற்க நன்னனுக்குரிய ஊர் களுள், கடம்பின் பெருவாயிலும் ஒன்று எனப் பதிற்றுப் பத்து கூறுகிறது; (பதிற்றுப்பத்து: பதிகம்: ச). சேரர் பகைவருள் கடம்பர் என்பாரும் ஒருவர்; சேரவேந்தர் பலர், அக்கடம்பரை வென்று, அவர் காவல் மரமாம் கடம் பினை அழித்தனர் எனப் பதிற்றுப் பத்தும் சிலப்பதிகார மும் தெரிவிக்கின்றன; அச்சேரர் வழிவந்த, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும், இளஞ்சேரல் இரும்பொறை யும், கடம்பின் பெருவாயில் நன்னனை வென்று அழித் தனர் எனப் பதிற்றுப்பத்து கூறுகிறது; (அகம்: கசுசு; பதிற்று: ச0; பதிகம்: ச; பதிற்று: அஅ). இதனுல், நன்னன், அக்கடம்பரோடும் யாதோ ஒரு வகையான் உறவுடையவனுவன் என்பது தோன்றுகிறது.

இளவிச்சிக்கோ எனும் இளவரசன் ஒருவன், நன் னன் வழிவந்தவனவன் எனக் கூறுகிறார். பெருங்கலச்

சாத்தனார் எனும் புலவர்; "பொலந் தேர் நன்னன் மருகன் அன்றியும், நீயும் முயங்கற்கு ஒத்தனைமன்" (புறம். கருக). விச்சியர் என்ற இனத்தார், தமிழ் நாட்டில் அரச வாழ்வு மேற்கொண்டிருந்தனர் எனப் பழந்தமிழ்ப் பாக்கள் அறிவிக்கின்றன; "இருபெரு வேந்தரும், விச்சியும் வீழ." (பதிற்று: பதிகம்: கூ). "வில்கெழு தானை விச்சியர் பெருமகன், வேந்தரொடு பொருத ஞான்றை" (குறுந்: நஉஅ). "விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே" (புறம்: உ00). என்ற தொடர்களைக் காண்க. "இளவிச்சிக்கோ" எனும் சொல், "இளவிச்சிரக்கோ" என்பதன் திரிபாதலும் கூடும் என்று கொண்டு நன்னன், சோணை நதிக் கரையில் உள்ள தேயம் என அடியார்க்கு நல்லார் அறிவிக்கும் வச்சிர நாட்டினின்று வந்தோர் வழியினனாதல் வேண்டும் எனக் கூறுவாரும் உளர். இவையெல்லாம் ஆராய்ச்சிக்குரியன; ஆய்ந்து உண்மை உணர்க.

நன்னன், நால்வகைப் படையும் நனிமிகக்கொண்டிருந்தான்; "இயல் தேர் நன்னன்" (அகம்: கஎந). "பொலந் தேர் நன்னன்" (பதிற்று: ச0). எனத் தேர்ப் படையுடைமையும், சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்," "கறையடியானை நன்னன்" (அகம்: கரு, கசஉ). என யானைப் படையுடைமையும், "வென்வேல்....நன்னன்" (அகம்: கருஉ). "ஏந்துவேல் நன்னன்" (நற்: உஎ0). என வேற் படையுடைமையும் வியந்து பாராட்டப் பெறுதல் காண்க. இவ்வாறு ஆற்றல் மிக்க பெரும் படையுடைமையால், உள்ளத்தே உரமும், ஊக்கமும் மிக்கு, தன் நாட்டைச் சூழ அரண் அமைத்து வாழ்ந்திருந்த சிற்றரசுகள் பலவற்றை அழித்து, ஆண்டுள்ள பொருளை எல்லாம் வாரிவருதலை வழக்கமாக மேற்கொண்டான். அச் சிற்றரசர்களுள் சிறந்தானாய பிண்டன் என்பான், பகையரசர்க்குத் தொல்லை பலதரும் பேராண்மையுடையனாய் விளங்கினான். பொன்னைக் கொண்டுவரும் பெரிய பெரிய கலங்களையும் தாக்கி அழிக்கவல்ல இருமீன்களைப் போல, பிண்டனும் பேரரசரும் அஞ்சி நடுங்கும் அத்துணை ஆற்றல் உடையனா;

வாழ்ந்தான்; அவன் அன்னனாதல் அறிந்தும், நன்னன், அவனோடு போரிட்டு, அவன் ஆற்றலை அழித்து வென்றான் எனின், அவன் ஆண்மையினை என்னெனப் புகழ்வது! தன் நாட்டைச் சூழ இருந்த சிற்றரசுகளை வெற்றி கொள்வதோடு, நன்னன் போர்வேட்கை தணிவுற்றிலது; அவன் தன் காலத்தே பெரும்படை யுடையராய்ப் பேரரசராய் வாழ்ந்த வேந்தர்களையும் வென்று வீறுபெற விரும்பினான்; அவ்வாறே அவர்களை வென்று, அவர் தம் மனைவிமார் தலையை மழித்து, அக் கூந்தலால் கயிறு திரித்து, அக் கயிற்றால், அவ்வேந்தர் தம் யானைகளைப் பிணித்துக் கொணர்ந்தான்; எத்துணைக் கொடுமை நிறைந்த போர் வெறியுடையான் நன்னன் என்பதை இந் நிகழ்ச்சி உணர்த்துவது உணர்க.

"உரன்மலி உள்ளமொடு முனைபாழ் ஆக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்." (அகம்: ௩௪௯)

"தனந்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெள்ளிறவின் குப்பை யன்ன
உறுபகை தரூஉம் மொய்பமூசு பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்,
இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்." (அகம்: ௧௫௨)

"பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே." (நற்: ௨௭0)

அக்கால அரசர் ஒவ்வொருவரும், அவரவர் விரும்பும் மரம் ஒன்றைத் தம் காவல் மரமாகக் கொண்டிருந்தனர்; நன்னனும் வாகை மரத்தைக் காவல் மரமாக்கொண்டிருந்தான்; வாகையைக் காவல் மரமாக் கொண்டதோடு, அம் மரத்தின் பெயரால் வாகை யெனும் ஊர் ஒன்று கண்டு, அவ்வூர் ஆட்சியைத் தன் இனத்தவனும், தன்பால் அன்பு

டையனும் ஆய ஆய் எயினன் என்பான்பால் ஒப்படைத்திருந்தான். ஆய் எயினன்பால் கொண்ட அளவிறந்த அன்பால் தனக்குரிய பிரம்பு எனும் மலைக்கு "ஆய் பிரம்பு" எனவும் பெயரிட்டான்; அக்காலை நன்னன் நாட்டை அடுத்திருந்த புன்னாடு எனும் நாடு, நன்னனைப் பகைத்தெழுந்தது; அச் செய்தியை ஆய் எயினனுக்கு அறிவித்து, "அந் நாட்டை எவ்வாற்றானும் வென்று அடக்குதல் வேண்டும்; ஆனால், படையொடு ஆண்டுச் சென்றிருக்குங்கால், பாழியையும் பாழிக்கண் உள்ள பெரும் பொருளையும் காப்பது குறித்தே கவலையுறுகிறேன்" என்றான். அதுகேட்ட ஆய் எயினன், 'அவற்றின் காவலை யான் மேற்கொள்கின்றேன்; அஞ்சற்க' என்று கூறியிருந்தான். அந் நிலையில், பாழியை மிஞிலி என்பான் தாக்கினான். அஞ்சல் என நன்னனுக்கு அன்று அளித்த அவ் வார்த்தை பொய்யாகா வண்ணம், ஆய் எயினன் விரைந்து வந்து, மிஞிலியை எதிர்த்தான். மிஞிலியும், 'எயினனொடு மேற்கொள்ளும் போரில் எனக்கு வெற்றி தேடித் தருவையெனின் நினக்கும் பெரும் பலி தருவன்' எனப் பாழிநகர்ப் பேயைப் பரவிப் போர்க்களம் புகுந்தான்; ஆய் எயினனும் ஆற்றல் கொண்டு அரும்போர் உடற்றினன் எனினும், தன்னினும் படைப்பெருமையுடைய மிஞிலியை வெல்ல மாட்டாது உயிர் துறந்தான். தன் நாட்டைத் தாக்கிய மிஞிலியொடு தானே போரிடுதல் ஒழித்து, நண்பனைப் போர்க்களம் அனுப்பிய அறமாகாச் செயல் குறித்து நாணியோ, எயினன் இறந்தானாகப் படைத்துணையும் இழந்து நிற்கும் அந் நிலையில் களம் சேர்தல் தனக்கு ஏதம் வருதலும் கூடும் என அஞ்சியோ நன்னன் களம்சென்று, நண்பனைக் காணாயினான். ஆய் எயினன் இறந்த அன்றே, நன்னன் ஆட்சியும் வீழ்ச்சியுறத் தொடங்கி விட்டது; பாழிப் போர் விளைவாய்ப் பாழியையும், பாரத்தையும் நன்னன் இழந்தான்; மிஞிலியின் உடைமையாயின அவையிரண்டும்:

"பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்சல் என்ற ஆய் எயினன்

இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது."

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப், புள்ளொருங்கு
அங்கண் விசும்பின் விளங்கும் ஞாயிற்று
ஒண்கதிர் தெறுமைச் சிறகரிற் கோலி
நிழல்செய்து உழறல் காணேன் யான் எனப்
படுகளம் காண்டல் செல்லான் சினம்சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்ப."

(அகம்: ௨௬௬-௨௦௮)

பாழிப் பறந்தலை நிகழ்ச்சிக்குப் பின்னர், நன்னன், அடிபட்ட புலியென ஆயினன்; அவன் உள்ளம் ஒருநிலையில் நில்லாது உழன்றது. அந் நிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று, நன்னனுக்கு நீங்காப் பழியொன்றைத் தேடித் தந்தது. நன்னன் தோட்டம் நறுமாமரங்கள் நிறைந்தது; ஒருநாள், அத்தோட்டத்து மாங்காய் ஒன்று, அருகே ஓடிய அருவியில் மிதந்துவந்தது; அவ்வருவியில் நீராட வந்த பெண் ஒருத்தி, அக் காய் நன்னன் தோட்டத்துக் காய் என அறியாது எடுத்துத் தின்றுவிட்டாள்; அஃது அறிந்தான் நன்னன்; அவளைக் கொலை செய்யத் துணிந்தான்; அந் நிலையில், அப்பெண்ணைப் பெற்றோர், "அவள் நிறை பொன்னாலாய பாவையும், எண்பத்தொரு யானைகளும் ஈடாகத் தருகிறோம்; ஏற்று அவளை விடுக" என வேண்டியும் கேளாது, அவளைக் கொலைபுரிந்தான்.

நன்னன் கொடுஞ்செயலை நாடு அறிந்து கண்டித்தது; பெண்கொலைக்குக் காரணமாயது நன்னன் நறுமா என அறிந்த கோசர் எனும் கூட்டத்தார், நன்னன் நாட்டிற் புகுந்து, அருமையுடன் அவன் போற்றி வளர்த்த அம்மாவினை வெட்டி வீழ்த்தித் துண்டுகளாக்கித் தம் ஊர்க்குக்

கொண்டு சென்றனர். நன்னன் தான் இழுக்குற்றதோடு, அவ்விழிவு, தன்குடிக்கும் நின்று நிலைபெறச் செய்துவிட்டான்; "பெண்கொலை புரிந்த நன்னன்" என அவனைப் பழி தூற்றினார் பரணர். "நீ, பெண்கொலை புரிந்த நன்னன் மருகன்" என அவன் வழி வந்தோன் ஒருவனைப் பழிதூற்றினார் பெருந்தலைச் சாத்தனார்.

> "மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
> புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
> ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு, அவள்நிறை
> பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
> பெண்கொலை புரிந்த நன்னன்." (குறுந்: உகூஉ)

> "நன்னன்,
> நறுமா கொன்று நாட்டிற் போகிய
> ஒன்றுமொழிக் கோசர்." (குறுந்: எங)

நன்னன் நறுமா கொன்றது குறித்துக் கட்டிவிடப் பட்ட கதையொன்றும் உண்டு. "இக்கொடுங் கொலையைப் பொறாத கோசர், நன்னன் மாமரமே இக்கொடுங் கொலைக் குக் காரணமென்று கொண்டு அதனை யழித்தற்கு ஒரு வன்கட் சூழ்ச்சி செய்தனர்; அச் சூழ்ச்சியாவது தங்கள் குலத்தலைவனான அகுதையை அகவன் மகளிர்க்குப் பெரும் பிடிப் பரிசில் தரும்படி செய்து, அவற்றை அம் மகளிரைக் கொண்டு நன்னன் தோட்டத்து அம் மாமர முதலாகக் கட்டச் செய்தனர்; மாமரத்திற் கட்டிய பிடிகள் தங்கள் தலையில் மண்ணைப் பெய்தற்குத் தரையைப் பறித்த நிலையில் மாமரம் வேரோடு ஆற்றிற் சாய்ந்தது; அதனை நாட்டில் உள்ளாரெல்லாம் விறகிற்கு ஒடித்துப்போக மரமேயில்லை யாய் அழிந்தது. ஒரு காய் தின்ற தப்பற்கு ஒருமகளைக் கொலை செய்த நன்னன் மரமேயில்லையாகச் செய்யும் இவ் வகவன் மகளிரை என்செய்வன் என்பது துணிய இச் சூழ்ச்சி செய்தனர்; நன்னன், இசைவல்ல அகவன் மகளிர் அன்பினால் அவரை வருத்தாது, தான் முன் செய்த கொடு மையை உணர்வன் ...

தனர் போலும்" என்று கூறி, அதற்கு ஆதாரமாகக் கீழ் வரும் பாக்களையும் காட்டி, "இவற்றுள் கோசர் வன்கட் சூழ்ச்சி இன்னதென்பது, அகுதை மடப்பிடிப் பரிசில் பிறி தொன்று குறித்ததனால் அறியக் கிடப்பது காண்க" என் றும் கூறுவர்.

"நன்னன்,
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்று மொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமோல் சிறிதே."

"இன்கடுங் கள்ளின் அகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன்று குறித்தது அவன்நெடும் புறநிலையே."
(குறுந்: எங-உகஅ)

அகுதை வரையாது வழங்கும் வள்ளலாவன் எனப் புலவர் போற்றும் புகழ் உடையவன்; அவன், இவர்க்கு இது அளித்தால், இன்னது உண்டாம் என ஒன்றை எதிர் நோக்கி அளிக்கும் அறவிலைவணிகனவன் என எதிர் பார்த் தல் இயலாது; அகுதை, தன் பகைவனை அழித்தற் பொருட்டே அகவன் மகளிர்க்குப் பிடியானையைப் பரிசாக அளித்தான் எனல் அவன் வண்மைக்கு இழுக்காம்; அவன் அளித்த பரிசில் அந்நோக்கு உடையதாயின், அதைப் புலவர்கள் போற்றிப் புகழார்; மேலும் அகவன் மகளிர், நன்னன் மாமரத்தில் பிடியானையைப் பிணித்தனர் என் றால், அவ் வகவன் மகளிர்பால் அன்புடைய நன்னன், தன் மாமரத்தைக் காக்க, அவரைத் துன்புறுத்தல் வேண்டுவ தில்லை; அவர் பிணித்த பிடியானையைக் கட்டவிழ்த்து விட்டால் அதுவே போதும்; தன் மாமரத்தைக் காக்க, மேலும், வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கையராய அகவன் மகளிர், தம்பால் அன்புடையனாய்ப் பரிசளிக்கும் பேரரசன் ஒருவனுக்கு அழிவுதரும் அரசியல் சூழலில் தலையிடார்; அகுதை ஆற்றல் மிக்க பெருவீரன் என்பு

மேலும், கோசர் படைத்துணையும் பெற்றவன்; அத்தகையான், நன்னன் கொடுஞ்செயற்கேற்ற தண்டத்தை நன்னனுக்கு அளிக்க விரும்பினுல், அதைத் தன் படைவலி கொண்டே செய்திருப்பன்; இத்தகு சூழ்ச்சிநெறி தேடும் ஆற்றற்குறையுடையானல்லன். இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து ஊன்றி நோக்குவார்க்கு நன்னன் நறுமா அழிவு குறித்து அவர் கூறுவது, கட்டிவிட்ட கதையேயல்லால், வரலாற்றுண்மை உடையதன்று என்பது எளிதிற் புலனும்.

படைத்துணை புரியும் நண்பரை இழந்தும், பெண்கொலை புரிந்து பழியைப் பெற்றும், நன்னன் ஆற்றல் ஒருபால்குன்ற, அவன் பகைவர் ஒருபால் வளர்ந்துகொண்டே வந்தனர்; பாழியும், பாரமும் பகைவர் கைப்பட்டமையானும், வாகை நிற்கும் வாகைப் பெருந்துறை, தன்னைக் காத்திருந்த எயினன் இறந்துவிட்டானுகவே, காப்பாரற்றுப் போனமையானும், நன்னன், கடம்பின் பெருவாயில் என்று அழைக்கப்பெறும் வாகைப் பெருந்துறை சென்று வாழ்வானுயினுன்; வாகைப் பெருந்துறை, சேரநாட்டின் ஒரு பகுதியாம். ஆகவே, அந் நாட்டை மீளவும் பெற வேண்டும் என்று சேரவேந்தன் பெரிதும் முயன்றுன்; ஒருமுறை பெரும்படையோடு போந்து, பெருந்துறையை முற்றிப் போர்செய்தான்; நன்னன், தன் போராற்றலால் அவனை வென்று துரத்தினுன்; வேந்தனை வென்ற வெற்றிக் களிப்பால், நன்னன், தன் தலைநகரையடுத்துள்ள காட்டுட் புகுந்து, ஆண்டுள இயற்கைக்காட்சிகளைக் கண்டு இன்புற்று வாழ்ந்திருந்தான்; நாட்டில், நன்னன் இல்லாக் காலமே, தன் கருத்தினை முடித்துக் கோடற்கு ஏற்ற காலமாம் எனக் கருதிய சேரவேந்தன், மீளவும் வந்து, வாகைப் பெருந்துறையை வளைத்துக் கொண்டான்; அஃதறிந்தான் நன்னன்; உரிய காலத்தில் ஆண்டுச் சேராவிடின், அந்நகரும் அரணும் பகையரசனுக்குப் பணிந்துவிடும் என எண்ணினுன்; உடனே விரைந்தான் வாகை நோக்கி. ஆண்டு வந்து

வென்று துரத்தித் தன் பழம் பெருமையைப் பார் அறியச் செய்தான். இந் நிலையில் சிலகாலம் கழிந்தது. சேர நாட்டு அரியணையில், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் அமர்ந்தான்; ஆற்றல்சால் அரசனாய அவன், தனக்குரிய நாட்டை நன்னன் பற்றி ஆள்வதைப் பொறானாயினான். உடனே இளஞ்சேரல் இரும்பொறை என்பானையும் துணை கொண்டு, பெரும்படையோடு போந்து பெருந்துறையை முற்றிக் கடும்போர் ஆற்றினான். களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரலை நன்னனால் வெல்ல இயலாது போயிற்று; வாகைப் பெருந்துறை வந்தார் கைப் புகுந்து விட்டது; களங்காய்க் கண்ணிக்குக் கடம்பின் பெருவாயில் திறந்து விட்டது; வாகையை வெட்டி வீழ்த்தினர் வேந்தர் உடன் வந்த வீரர்; நன்னனும், நார்முடியின் வாட்புண் பெற்று வாழ்விழந்தான்:

"வினைதவப் பெயர்ந்த வென்வேல் வேந்தன்
முனைகொல் தானையொடு முன்வந் திறுப்பத்
தன்வரம் பாகிய மன்னெயில் இருக்கை
ஆற்றா மையின் பிடித்த வேல்வலித்
தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக ஓங்கிய கழைதுஞ்சு மருங்கின்
கானமர் நன்னன்." (அகம்: ௩௯௨)

"குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன." (அகம்: ௧௯௯)

"பொன்னங், கண்ணி பொலந்தேர் நன்னன்,
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்." (பதிற்று: ௪0)

"உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை

பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
.....................................
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்."
(பதிற்றுப்: பதிகம்: ௪)

"சுடர்வீ வாகை நன்னன் தேய்த்து." (பதிற்று: ௮௮)

இவ்வாறு பேராண்மை தோன்றப் பாராண்ட நன்னன், இரவலர்ப் பிணிக்கும் இனிய உள்ளமும் உடையனுயினுன்; பகையரசரை வென்று பெற்ற பெரும்பொருளையெல்லாம், பரிசிலர்க்கே வாரி வழங்கினுன்; பரிசிலர்க்கு வேண்டும் பெரும்பொருள் தேடவே, அவன் பிற நாடுகள் மீது போர்தொடுப்பின், அதனுல் தன் பகை வளர்வதையும் பாராருயினுன்; பரிசிலரைப் புரக்கும் பேரன்புடைய நன்னன், தன்னை நாடிவருவார்க்குக் களிறு பல வழங்கும் கொடை வள்ளலாய் வாழ்ந்தான்; பெண்கொலை புரிந்த பழியுடையனுகவும், நன்னன்பால் காணலாம் பேராண்மையும், பெருங்கொடையும், மக்கள் உள்ளத்தை அவன்பால் ஈர்த்தன. அவன் பிறந்த நாள் விழாவை விரும்பிக் கொண்டாடினர் நாட்டு மக்கள்:

"உலந்த ஒக்கல் பாடுநர் செலினே,
உரன்மலி உள்ளமொடு முனைபாழ் ஆக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்." (அகம்: ௩௪௧)

"இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்." (அகம்: ௧௫௨)

"அகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்." (அகம்: ௯௭)

"பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னுட்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு."
(மதுரைக்: ௬௧௮-௬௧௯)

## ரு. நாஞ்சிற் பொருநன்

குமரிமுனைக்கும் நாகர்கோவிலுக்கும் இடையில் நாஞ்சில் என்ற பெயருடைய தொரு மலையுண்டு; பொதியின்மலைத் தொடர்களுள் ஒன்றாய அம்மலை, இன்று மருத்துமலை என வழங்கப் பெறுகிறது; பண்டு, அது நஞ்சிலாமலை என்ற பெயர் பூண்டிருந்தது எனக் கூறுகின்றனர், அம்மலையை அடுத்து வாழ்வார். நாஞ்சில் மலையைச் சூழ இருந்த நாடும், நாஞ்சில் எனும் பெயரே கொண்டது; நாஞ்சில் நாடு, நல்லவளஞ் செறிந்த நாடு; நாஞ்சில் நாட்டில் விதைத்த வித்து மழையின்மையால் கெடுதல் அறியாது, கரும்புபோல் வளர்ந்து காட்சிதரும் கவின் உடையது; அந் நாட்டு நீர்நிலைகள் கோடைக்காலத்தும், வற்றி வளங் குன்றுவதில; அந் நாட்டு ஆறுகள், தெளிந்த நீருடன், வேங்கைப்பூக்களையும் கொண்டு செல்லும்; இவ்வாறு வளங் கொழிக்கும் வனப்புடையது அந் நாடு.

> "கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது;
> கழைக்கரும்பின் ஒலிக்குந்து;
> கொண்டல் கொண்டநீர் கோடை காயினும்
> கண்ணன்ன மலர் பூக்குந்து;
> கருங்கால் வேங்கை மலரின் நாளும்
> பொன்னன்ன வீசுமந்து
> மணியன்ன நீர் கடற்படரும்
> செவ்வரைப் படப்பை நாஞ்சில்." (புறம்: ௧௩௭)

நாஞ்சில் மலையையும், அதைச் சூழ உள்ள நாட்டையும் ஆண்டிருந்தான் ஒரு வில் வீரன்; அவனை நாஞ்சிற் பொருநன் எனவும் நாஞ்சில் வள்ளுவன் எனவும் பெயரிட்டு அழைத்தனர், அக்கால மக்கள்; நாஞ்சில்மலைக்கு வடகிழக்கே உள்ள வள்ளியூர், நாஞ்சில் வள்ளுவன் பெயர் கொண்டு பிறந்த ஊராம் என்பர் ஆராய்ச்சியாளர்; நாஞ்சில் வள்ளுவன், பாண்டியர் படைத்தலைவனாய்ப் பணியாற்றும் பெருமையுடையோனவன்; அதனால், அப் பாண்டியர்க்கு

பெற்று விளங்கும் உரிமையும் உடையனாயினான்; நாஞ்சில் வள்ளுவன் நல்லாண்மையால், தானும், தன் நாடும் பெறும் பெருநலம் கண்ட பாண்டியன், அந் நாஞ்சில் வள்ளுவன் விரும்புவன எல்லாம் நல்கிப் பெருமை செய்வன்; பாண்டியன் பெரும்பொருள் அளித்தும், பேரன்பு காட்டியும் பேணிக் காத்தலைக் கருத்தில் இருத்திய நாஞ்சில் வள்ளுவனும், அப் பாண்டியன் பொருட்டுத் தன் உயிரை இழக்கவும் துணிவன்.

"தென் பவ் வத்து முத்துப் பூண்டு
வட குன் றத்துச் சாந்தம் உரீஇ." (புறம்: ௩௮௦)

"இன்னிசை விறல்வென் றித்
தென்னவர் வயமறவன்." (புறம்: ௩௮௦)

"ஈதல் ஆனான் வேந்தே; வேந்தற்குச்
சாதல் அஞ்சாய் நீயே." (புறம்: ௧௩௭)

போர்க்களம் புகுந்தால், வெற்றிச் செருக்கோடு வீடு திரும்புதல் அல்லது ஓடிப் புறங்காட்டா உயர்வுடையோர் வழி வந்த நாஞ்சிற் பொருநன், பகைத்து வருவார், நெஞ்சாலும் நினைந்து காணலாகா ஆற்றலும், ஆண்மையும் உடையனாய், அவரான் அணுகற்கு அரியனே யெனினும் அகமும், முகமும் ஒன்றுபட்ட உயர்நட்புடையராய் வருவார்க்கு அவர் அங்கையினும் அண்மையனாய் உற்றுழி உதவும் உரவோனாவன்.

"ஓடாப் பூட்கை உரவோர் மருக!
உயர்சிமைய உழாஅ நாஞ்சிற் பொருந! (புறம்: ௧௩௭)

"தீஞ்சுளைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
துப்பு எதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையன்;
நட்பெதிர்ந் தோர்க்கே அங்கை நண்மையன்."
(புறம்: ௩௮௦)

நாஞ்சில் வள்ளுவன், வரையாது வழங்கும் வள்ளியோனாவன்; தமிழ் அரசர் மூவரையும் பாடிப் பாராட்டுவதைப் பெருமையாகக் கருதும் புலவர் வழிவந்த ஒரு

சிறைப் பெரியனார், "என்னொத்த புலவர் எல்லாம் 'வேந்தரைப் பாடவேண்டும், வேந்தரைப் பாடவேண்டும்' என்ற வேட்கையுடையராகவே உள்ளனர்; ஆனால், அவ்வேட்கை என் உள்ளத்தே மட்டும் இடம் பெற்றிலது; 'வேந்தரைப் பாடவேண்டும்' என்ற வேட்கையற்ற என் உள்ளம், 'நின்னை முதற்கண் காணவேண்டும்; நின்னைப் பாடிப் பரவவேண்டும்' எனப் பெரிதும் விழைகிறது; என்னே நின் பெருமை!" என்று கூறுவர் எனின், நாஞ்சிற் பொருநன் பெருமையை நுவலவும் கூடுங்கொல்!

"இரங்கும் முரசின், இனஞ்சால் யானை
முந்நீர் ஏணி விறல்கெழு மூவரை
இன்னும் ஓர் யான் அவாவறி யேனே;
நீயே, முன்யான் அறியு மோனே." (புறம்: கந௭)

நாஞ்சில் வள்ளுவன் வள்ளன்மை வனப்பும், பொருட்கொடைப் பெருமையும் உணர்ந்த பாணர், அவன் நாடு அடைதற்கு அருமையுடைத்து என்று எண்ணாராய், அவ்வழியினை வருந்திக் கடந்தேனும் அவன் வாயில் சென்று சேர விழைவர்; அன்னார், ஆனிரை பலகூடி அறுகு அருந்தி வாழும் அரிய வழிகள் பலவற்றை நடந்தும், மானினம் மகிழ்ந்துறையும் மலைகள் பலவற்றைக் கடந்தும், மீனினம் நிறைந்த நீர்நிலை பலவற்றை நீந்தியும் அவன் நாடடைவர் எனின், அவன்பால் அவர் கொண்டிருந்த அன்புதான் என்னே! அவர் வறுமைவாட வழங்கும் அவன் வண்மைதான் என்னே!

"ஆனினம் கலித்த அதர்பல கடந்து
மானினம் கலித்த மலைபின் ஒழிய,
மீனினம் கலித்த துறைபல நீந்தி
உள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறியாழ்
சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண!" (புறம்: கந௮)

நாஞ்சில் வள்ளுவன், இவ்வாறு நாட்டவர் போற்றும் நற்பண்புகட்கு நிலைக்களனாய் நின்று நிலைபெறவே, ஒரு

மருதன் இளநாகனார் முதலாய புலவர் பெருமக்கள் அவனைப் பாடிப் பெருமைசெய்வாராயினர்.

நாஞ்சிற் பொருநனைப் பாடிப் பரிசில்பெற விரும்பிய ஔவையார், பலாமரம் பல வளர்ந்து வளம்பெற்றிருக்கும் அவன் நாஞ்சில் மலையடைந்து அவனைக் கண்டு பாராட்டினர்; ஔவையின் அருமை யுணர்ந்த அவன், தன் பெருமை தோன்றப் பெரிய யானை ஒன்றைப் பரிசாக அளித்தான்; அதைப் பெற்றுக்கொண்ட ஔவையார் அவனைப் பாராட்டிய பாடல் மிகவும் நயம் உடைத்து; அவனைப் பாடிய புலவர்கள் பலராதல் அறிந்த ஔவையார், அவர்கள் அனைவரையும் நோக்கி, "புலவர் பெருமக்களே! எங்கள் நாக்கு செம்மையான நாக்கு; தகுதியில்லோர் செல்வம் வியத்தல் செய்யாப் பெருமை மிக்கது' என்றெல்லாம் பெருமைகொள்ளும் நீங்கள் கடைசியில் அறிவிற்குறைந்த இவனைப் போய்ப் பாடினீர்களே! இவன் அறிவின்மைக்கு ஓர் எடுத்துக் காட்டுக் கூறுகிறேன் கேளுங்கள்! வீட்டில் அரிசியில்லாக் குறையால், பெண்கள், கொல்லையில் விளைந்திருக்கும் கீரையைப் பறித்துக் கொணர்ந்து உணவாக்கி வைத்திருந்தனர்; அக் கீரை உணவை மட்டும் உண்ண விரும்பாத யான், இந் நாஞ்சிற் பொருநன்பால் சென்று சிறிது அரிசி வாங்கி வருவோம் என்று அவனைப் பாடிநின்றேன்; பசித்து வந்து நிற்கும் எனக்கு அவன் என்ன கொடுத்தான் தெரியுமா? பாலைநிலத்திற்கிடையே படுத்துக் கிடக்கும் பெரியமலைபோலும் யானையொன்றைக் கொடுத்தான்; அதைக் கண்ட நான் ஐய! எனக்கு இப்போது வேண்டுவது அரிசி; அரிசியின்றிப் பசியால் வருந்தும் எனக்கு யானையைக் கொடுக்கின்றனையே, இது முறையா? இதைக் கொண்டு சென்று யான் என்ன செய்வேன்? என் சிறு வயிற்றிற்கே உணவு பெற மாட்டாது வருந்தும் இந் நிலையில் இப்பெரிய யானையை எவ்வாறு பேணவல்லேன்? என்று குறை கூறினேன்.

இவ்வாறு எடுத்துக்கூறிய பின்னரும் அதைப் புரிந்து

என் குறைகேட்ட, அவன், நீ, நின் நிலைக்கு ஏற்ற பொருளை என்பால் வேண்டினை; அதைப்போலவே, யானும் என் தகுதியை எண்ணி, யானையைப் பரிசாக அளித்தேன்; அவ்வாறு கொடுப்பதுதான் என் தகுதிக்கும் பெருமைக்கும் பொருந்துவதாம் என்று கூறினன். இவ்வாறு, யாருக்கு எதைக் கொடுப்பது என்பதையும், தன் கடமை யாது என்பதையும் எண்ணிப் பாராமல், தான் எண்ணியவாறே நடந்து கொள்ளும் இவனை அறிவுடையான் என எவ்வாறு உலகம் ஏற்றுக்கொள்ளும்? உண்மையில் இவன் அறிவுடையானல்லன்; அறிவற்ற இவனைப் பாடினீர்களே, உங்களை என்னென்பது? உங்கள் நாக்கைச் செவ்விய நாக்கு என எவ்வாறு ஒப்புக்கொள்வது?" என்று கூறினர். நாஞ்சிற் பொருநனை நாவாரப் பாராட்டி ஔவை பாடிய பாட்டு இது; என்னே அவன் கொடைவளம்!

"தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற; செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம்சில
அரிசி வேண்டினெ மாகத் தான்பிற
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே; அன்னதோர்
தேற்றா ஈகையும் உளதுகொல்!
போற்றார் அம்ம, பெரியோர்தம் கடனே!"

(புறம்: கசo)

## ௯. நாலைகிழவன் நாகன்

பாண்டிநாட்டில், அருப்புக்கோட்டையை அடுத்து நாலை என்றோர் ஊர் இருந்தது; பண்டு நாலை என வழங்கிய அவ்வூர், இன்று நாலூர் என வழங்குகிறது; அந்நாலை நகர்க்கு உரிமை பூண்டிருந்தான் வீரன் ஒருவன்; நாகன் என்பது அவன் இயற்பெயர். அதனால், அவனை நாலை கிழவன் நாகன் என அக்கால மக்கள் அழைத்தனர்.

நாகன் பேராண்மை மிக்க பெருவீரனாவன்; அவன் வேலேந்திக் களம் புகுந்தால், களமெல்லாம் பிணக்குவியலே காட்சிதரும்; அப் பிணம் உண்டு பசி தீர்ந்த பருந்துகள் அவன் வெற்றி விளங்கப் பாடிப் பறக்கும்; அத்துணை ஆண்மையும், அதற்கேற்ற படைவன்மையும் உடையான் நாகன். நாகன் நாலையை உரிமையாக் கொண்டு வாழ்ந்திருந்த காலத்தே, பாண்டிய அரியணையில் அமர்ந்திருந்த அரசன், தன்னாட்டை அடுத்துள அரசுகளையெல்லாம் அடக்கி ஆள எண்ணினான்; அதற்கு, அறிவும் ஆற்றலும் ஒருங்கே வாய்ந்த படைத்தலைவன் வேண்டும் என்பதை உணர்ந்தான்; நாகன் போர்க்களம் புகுவார்க்கு வேண்டும் படைத்துணை அளிக்கவும், அறநெறி இயலும் ஆட்சிநலம் வேண்டுவார்க்கு, அத்தகு அரசியலை அமைக்கவல்ல அறிவுத்துணை அளிக்கவும் வல்லனாதலை அறிந்தான்; உடனே, அவனைத் தன் படைத்தலைவனாக்கினான்; நாகனும், பாண்டியற்கு அறிவாலும், ஆற்றலாலும் ஆருயிர்த்துணையாய் அமைந்தான்.

நுகத்தடி ஒருபாற் சாய்ந்து கோடாவாறு ஒப்ப நடக்கும் பெருமிதப் பகடேபோல், ஆண்மை, அறிவு ஆகிய இவற்றுள் ஒன்றினும் குறைபாடில்லா ஊக்கமும், உரனும் ஒருங்கே கொண்டு உதவினான்; இதனால், மாற்றார் முரசமும், மண்ணும் எண்ணிறந்தன கொண்டு, ஈடு இணையின்றி வாழ்ந்தான் பாண்டியனும்; இவ்வாறு வாழ்ந்த பாண்டியன், 'மண்பலதந்த திருவீழ் நுண்பூண் பாண்டியன்' என

## எ பண்ணி

கோடைக்காலத்துக் கொடுமையின் நீங்கி வாழ விரும்பும் மக்கள், விரும்பிச் செல்லும் வாழிடங்களுள் கோடைக் கானலும் ஒன்று; இக் கோடைக்கானற் குன்றே, பண்டு, கோடைப் பொருப்பு எனப் பெயர் பூண்டிருந்தது; பழனி மலைத்தொடரின் ஒரு பகுதியாகிய அக்கோடை மலையை, அம்மலைச் சாரலின்கண் அமைந்திருந்த கடியம் எனும் ஊரிடத்தே இருந்து ஆண்டுவந்தான் ஒரு வில் வீரன்; அவன் இயற்பெயர் பண்ணி; கோடைப் பொருநன் எனவும் அழைக்கப் பெறுவன்; வேட்டை நாய்கள் பல பின் தொடர்ந்து வர, கூரிய அம்பும், விரைந்து அம்பேவ வல்ல வில்லும் உடையனாய் வேட்டைமேற் சென்று, மான் முதலாயினவற்றைக் கொன்று கொண்டு வருதலோடு, காட்டு யானைகளை உயிரோடு கைப்பற்றி வருதலினும் வல்லனுவன். அதனால், இவனை வேட்டுவன் எனவும், நெடு வேட்டுவன் எனவும், கடியநெடு வேட்டுவன் எனவும், அழைத்துச் சிறப்புச் செய்தலும் உண்டு.

பண்ணி, பாண்டியர் படையில் பணியாற்றும் பெருமை பெற்றோனுவன்; தான் கைப்பற்றிய யானைகளுக்கு மொழி அறிவித்துப் பழக்கவல்ல பேரறிவும் உடையனுவன்; தன் பால் அடைக்கலம் புகுந்தாரை ஆதரிக்கவல்ல அருள் உள்ளமும், தன்னைப் பகைத்தாரை அழிக்கவல்ல ஆற்றலும் ஒருங்கே வாய்ந்த உயர்வோனாய பண்ணி, தன்னைப் பாடி வரும் பாணர் முதலாம் பரிசிலர் தமக்கு வரையாது வாரி வழங்கும் வள்ளன்மையும் உடையனுவன்.

"திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்,
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்தும் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி இரவலர்க்கு ஈயும்
வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்

( அகம்: ௧௩ )

"விறற்சினம் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார் வாகிச், செறுவர்
தாளுளம் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந!
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ."

(புறம்: உ0௫)

இவ்வாறு, அன்பு, ஆண்மை, அருள், ஆற்றல்களான், பண்ணி சிறந்து விளங்குதல் அறிந்த பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர்பெருந்தகையார், கோடைமலையடைந்து அவனைப் பாடிப் பரிசில் வேண்டி நின்றார்; அவன், அக்காலை தான் பற்றிய யானை ஒன்றிற்கு மொழியுணர்த்தும் பணிமேற் கொண்டிருந்தானாகவே, பரிசில் தருவதில் சிறிதுகாலம் தாழ்க்க நேர்ந்தது; அதனால், வெறுப்புற்ற புலவர், "பெறலாகும் பெரும்பொருள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற உயர்வுடையராய மூவேந்தரேயாயினும், அன்புள்ளம் இன்றி அவர் அளிக்கும் பொருள்களை ஏலேம்; அவற்றை ஏற்கும் இழிவுள்ளம் உடையால்லேம் யாங்கள்; நீர்குடித்தற்குக் கருதிக் கடல்புக்க முகில்கள், நீரை வாரிக்கொண்டன்றி வறிதே வருவதில்லை; அதைப் போன்றே, பொருள் வேண்டி, வள்ளியோரை யடைந்து பாடிநிற்கும் புலவர்களும், அவர்பால் பொருள் பெற்றன்றி மீள்வதிலர்; இவ்வியல்பிற்கு மாறாக, நின்னைப் பாடிநின்ற யான், நின்பால் பொருள்பெறமாட்டாது வறிதே மீள்கின்றேன்; இயற்கையையும் மறுக்கவல்ல மாணச்செயல் புரிந்த நீ, அதனால் வருந்துவதொழிந்து வாழிய நீடூழி!" என வருந்திக் கூறிச்செல்வாராயினர்; புலவர்தம் பெருமையும், அவர்தம் பேருள்ளமும் உணர்ந்த பண்ணி, அவர்க்கு வேண்டும் பொருளெலாம் அளித்துப் போற்றினன். புலவரும், தாம் பாடிய அகப் பாட்டொன்றிலும், புறப்பாட்டொன்றிலும் பண்ணியின் புகழைப் போற்றிப் புகழ்வாராயினர்:

“முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின்று ஈதல் யாம்வேண் டலமே;
.............................................
நோன்சிலை வேட்டுவ! நோயிலை யாகுக!
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துத்
கடல் வயின் குழீஇய அண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரொடு
ஒளிறுமருப் பேந்திய செம்மல்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே.”

(புறம் : உ0ங)

# அ. பழையன்மாறன்

பேரரசரும் அஞ்சும் பேராற்றல் பெற்று வாழ்ந்த வீரர்பலர், தமிழகத்தே வாழ்ந்திருந்தனர்; அத்தகையாருள் ஒருவன், பழையன்மாறன் எனப்படுவான். பழையன் எனவும் அழைக்கப் பெறுவன். அவன், கள்ளக்குறிச்சியை அடுத்திருந்த மோகூரில் வாழ்ந்திருந்தானுதலின், மோகூர் மன்னன் எனவும் வழங்கப் பெறுவன். பழையன் வாழ்ந்த மோகூர் கள்ளக்குறிச்சியை அடுத்துள்ள மோகூரே, என்பது, அப்பகுதியில், பழையன் அரசியலோடு தொடர்புடைய குட்டுவனஞ்சூர், கோசர்பாடி, ஆலம்பலம் என்ற பெயருடைய ஊர்கள் இருப்பதால் உறுதியாதல் காண்க.

பழையன் மாறன் பாண்டியர் படையில் பணியாற்றுபவன். அதனால், தான் விரும்பும் தன்பேரரசற்குரிய மாறன் என்ற பெயரையே தன்பெயராகக் கொண்டதோடு, அவ்வரசர்க்கு உரிய காவல் மரமாகிய வேம்பினையே, தன் காவல் மரமாகவும் கொண்டு காத்து வந்திருந்தான். பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாராட்டிய புலவர் மாங்குடி மருதனர், பாண்டியர் படையில் பணியாற்றும் கோசர் இனவழி வந்த வீரர்கட்கு மாறனே படைத்தலைவன் எனக்கூறுவதாலும், பழையன் மாறன், பாண்டியர் படைத்தலைவனுவன் என்பது பெறப்படுதல் காண்க.

> "பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
> பெரும்பெயர் மாறன் தலைவ னாகக்
> எந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
> இயல்நெறி மரபின்நின் வாய்மொழி கேட்ப."
>
> (மதுரைக் : எஎக - எகூ)

பழையன் மாறன், பாண்டியர் படைத்தலைவனுய், அப்பாண்டியர்க்குரிய தலைநகராய கூடல் நகரைக் காத்திருந்த காலை, வெள்ளம்போல் பரந்த பெரும்படையுடைய கிள்ளி வளவன், கூடலை வளைத்துப் பெரும் போர் புரியத் தொடங்கினன். அதுகண்டு கடுஞ்சினம் கொண்ட பழையன், தன் களிற்றுப் படையோடும் புறம் போந்து, கிள்ளி வளவனை

வளைத்துப் போரிட்டான்; பழையன் பேராண்மையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அழிந்து தோற்றோடினான். கிள்ளி வளவனுக்குரிய களிறுகளையும், குதிரைகளையும் கணக்கில கைப்பற்றிக்கொண்டான் பழையன்; அம்மட்டோடு அமையாது, பாண்டிநாட்டை அடுத்திருந்த கிள்ளிவளவனுக்குரிய நல்ல ஊர்கள் பலவற்றையும் கைப்பற்றிக்கொண்டான். சோணாட்டுப்பெருவேந்தன், பாண்டிநாட்டில் பெற்ற பெருந்தோல்வி கண்டு, அவன் பகையரசனாய சேரன் சிந்தை களிகூர்ந்தான்.

"நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி,
எதில் மன்னர் ஊர் கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே."

(அகம்: ௩௪௬)

பாண்டியர் தலைநகர்க்குச் சோழவேந்தனால் வரவிருந்த கேட்டினைப் போக்கிக்காத்த பழையன், தன் மோகூர் சென்று வாழ்ந்திருந்தான்; அவன் ஆற்றல் கண்டு அஞ்சி, அவனை அழித்தல் வேண்டும் எனக்கருதும் அவன் பகைவர், அவன் ஆண்டும் அமைதி வாழ்வு வாழ விடுத்தாரல்லர்; அக்காலத்தே, சேரநாட்டு அரியணையில் வீற்றிருந்தான் செங்குட்டுவன்; செங்குட்டுவன் சிறந்த நண்பர்களுள், அறுகை என்பானும் ஒருவன்; பகைவர் நாடுகள் மீது படையெடுத்துச் சென்று வென்று வருவதையே வழக்கமாகக் கொண்ட அவன், பழையன் மோகூரைத் தாக்கினான். ஆனால், பெரும் படையும், பேராற்றலும் உடைய பழையனை அவனால் வெற்றி கோடல் இயலாது போயிற்று. அவனை வென்று துரத்தினான் பழையன். மோகூரில் தோல்வி கண்ட அறுகை, தனக்கு அறிந்தாரைக் காணவும் நாணினான்; தன்னாட்டை விடுத்துச் சேணிடைச் சென்று

மறைந்து வாழலாயினன். இதையறிந்தான், அவன் நண்பன் செங்குட்டுவன்; நண்பனுக்கு உண்டான இழிவு, தனக்கு உண்டான இழிவு எனக் கருதினன். உடனே பெரும் படையோடு சென்று, மோகூரைத் தாக்கினன்; வேளிர் சிலரும், வேந்தர் சிலரும், பழையனுக்குத் துணையாய் நின்று, போர் செய்தும், பேராற்றலும், பேராண்மையும், பெரும்படையும் உடைய சேரன் செங்குட்டுவனைப் பழை யன் வென்றிலன்; பழையன் ஆற்றலினும், இவன் ஆற்றல் பெரிதாயிற்று; பழையன் படைவலி இழந்து தோற்றன். செங்குட்டுவன், பழையன் காவல்மரமாம் வேம்பினை வெட்டி வீழ்த்தி, முரசுசெய்தற்காம் சிறுசிறு துண்டுக ளாக்கித் தன்னூர்க்குக் கொண்டு சென்றன். பழையன், மோகூரில், சேரனெடு செய்த இப்போர், புலவர் பலரும் அடுத்துக் கூறும் அத்துணைப் பெரும்போராய் விளங் கிற்று.

“நுண்கொடி உழிஞை வெல்போர் அறுகை
சேணனாயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
அரண்கடா வுறீஇ அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு,
நெடுமொழி பணித்து, அவன் வேம்பு முதல்தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறு பலபூட்டி
ஒழுகை உய்த்தோய்!”

“வெல்போர் வேந்தரும், வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்,
வலம்படு குழூஉ நிலை அதிர மண்டி
.............................................
கருஞ்சினை விறல் வேம்பறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்!” (பதிற்று: ௪௪; ௪௯)

“பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்

பல்விருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி." (பதிற்று : பதிகம் : ௫)

"பழையன் காக்கும் குழைபயில் நெடுங் கோட்டு
வேம்புமுதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய."

(சிலம்பு : உ௭ : ௧௨௪-௨௬)

சேரன்பால் பெற்ற தோல்வி பழையன் பெயர்க்குப் பெரியதோர் இழுக்கினைத் தந்தது. ஆனால், அது நிகழ்ந்த சின்னாட்களுக்கெல்லாம், அப்பழியினின்றும் நீங்கிச், சேரனை வென்றிருந்தால் பெற்றிருக்கும் புகழினும், பெரியதொரு புகழைப் பெற்றுவிட்டான் பழையன். தமிழகம், தன்னேரில்லாச் சிறப்புற்று விளங்குவது கண்டு பொறாமை கொண்ட வடநாட்டு அரசர்கள், வாய்க்கும் போதெல்லாம், தமிழகத்தின்மீது படையெடுத்துவரத் தலைப்பட்டனர். தன் மொழியே பேசும், தன் அண்டை நாட்டு அரசன் ஒருவனால், தோல்வியுற்ற மோகூர்ப் பழையன், தமிழகத்தின்மீது படையெடுத்துப் போந்த வடநாட்டுப் பேரரசன் படையொன்றை வென்று துரத்தி விழுப்புகழ் பெற்றான்.

வடநாட்டுப் பேரரசுகளுள், மௌரியப் பேரரசும் ஒன்று ; அப் பேரரசர் படையொன்று, தமிழகத்தைத் தன்னடிப்படுத்தும் நோக்குடன், தென்னாடு நோக்கி வரலாயிற்று ; அவ்வாறு வந்த பெரும்படைக்குத், தமிழகத்தின் வடவெல்லையை அடுத்து வாழ்ந்த வடுகர் என்பார் துணைபுரிந்தனர் ; வடுகர் துணையும் பெற்று வந்த அப் படை, வழியில், தங்களின் நெடிய தேர்ப்படை செல்லா வாறு நின்று தடுத்த மலைகளையெல்லாம் உடைத்து வழி செய்துகொண்டு வந்தது அப்படை. வந்த பெரும்படை, பழையன் காக்கும் மோகூரை வளைத்துப் போரிட்டது ; பழையனை வென்றால் அல்லது, பாண்டிநாடு முதலாம் பேரரசுகளை வீழ்த்தல் இயலாது என அறிந்த அப்படை,

யின் ஆற்றல்களைச் சிறுகச்சிறுக அழித்துக்கொண்டே, மோகூர்க் கோட்டையுள் அடங்கியிருந்தான் பழையன்; மோரியர் படைக்குப் பணியாது நிற்கும் மோகூர்ப் பழைய னுக்குப் படைத்துணை அனுப்புதல் தம் இன்றியமையாக் கடமை எனக் கருதினர் பாண்டியர்; பாண்டியர் படையுள், பேராண்மையுடைய கோசர் படை, மோகூர் வந்து சேர்ந்தது. பாண்டியர் அளித்த படைத்துணை பெற்ற பழையன், மோரியர் தம் தேர்ப்படையோடு கூடிய பெரிய படையை வென்று துரத்தினான்; மோரியர் முன்னி வந்தது முடியாது போயிற்று. பழையனை வாழ்த்தினர் புலவர்கள்.

"வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்,
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத்து இரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையின் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய அறைவாய்." (அகம் : உருக)

## ௬. பாணன்

தமிழகத்தின் வடவெல்லைக்கப்பால் அரசமைத்து வாழ்ந்தாருள் பாணனும் ஒருவன்; பாணன், பகைவர் நாட்டு ஆனிரைகளை, அவ்வானிரைகளைக் காத்து நிற்பாரை வென்று கவர்ந்து வருவதில் வல்லவன்; பரல் பரந்த பாலை வழியை ஓசை எழாவாறு இனிது கடத்தற்குக் காலில் செருப்பணிந்து செல்வன்; செல்லும் இடம் சேய்மைக் கண்ணதாகலின், ஆங்கு வேண்டும் உணவை, மூங்கிற் குழாயிலிட்டு உடன்கொண்டு செல்வன். பகைவர் நாடு, தன் நாட்டைச் சாராது, சேய்மைக்கண் உளதே எனச் சிந்தை கலங்குவதிலன்; ஆனிரைகளை வைத்துக் காவல் மேற்கொண்டிருக்கும் பகைவர் ஆனிரைகளை, ஏற்ற செவ்வியை எதிர்நோக்கியிருந்து தாக்கி, ஆண்டுள்ள ஆக்களையும், ஆனேறுகளையும் கைப்பற்றிக் கொணர்தற்கேற்ற ஆற்றல் வாய்ந்த வேற்படையுடையவன்; தன் படை வீரர்க்குப் பெருஞ் சோறளித்து மகிழும் மாண்புடையனாதலின், அவன் தன் பகைவர்க்கு அஞ்சிப் புறங்கொடுத்தது என்றும் இலன்.

"கல்பொரு மெலியாப் பாடினேன் அடியன்;
அல்கு வன்சுரைப் பெய்த வல்சியன்;
இகந்தன ஆயினும், இடம்பார்த்துப், பகைவர்
ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பில்
குவையிமில் விடைய வேற்று ஒய்யும்
கனையிரும் சுருணைக் கனிகாழ் நெடுவேல்,
விழவயர்ந் தன்ன கொழும்பல் திற்றி
எழாஅப் பாணன் நன்னாடு."

"வடாஅது
நல்வேற் பாணன் நன்னாடு." (அகம்: ௧௧௩. ௩௨௫)

வில்லும், வேலும், வாளும் கொண்டு போர் செய்ய வல்ல பாணன், மற்போர் புரிதலிலும் வல்லனாய் வாழ்ந்திருந்தான்; தன் மற்போர் வன்மையைத் தமிழகமும் அறிந்து பாராட்டவேண்டும் என்ற வேட்கை அவனுக்கு

சேரர் படையில் பணியாற்றி வாழ்ந்த கட்டி என்பானை அடைந்து, தன் ஆற்றலைக் காட்டற்காம் ஏற்ற காலத்தை எதிர்நோக்கியிருந்தான். அக் காலத்தே, தன்னைப் போன்றே, வடநாட்டினின்றும் வந்தவனாய ஆரியப் பொருநன், எனும் மற்றொரு மற்போர் வல்லான், கட்டி பணியாற்றும் சேரர் படைக்குத் தலைவனாய கணையனை அடுத்து வாழ்ந்திருந்தான். கணையன், தன்பால் வந்திருக்கும் ஆரியப் பொருநன், ஆற்றலில் அனைவரினும் மிக்கவன்; அவனை வேறல் எவரானும் இயலாது என்றெல்லாம் கூறிப் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தான். அதுபொறாத பாணன், தன்னொடு மற்போர் புரியுமாறு அவனை அழைத்தான்; அவனும் இசைந்தான்; இருவரும், ஒருநாள் மற்போர் மேற்கொண்டனர்; கட்டியும், கணையனும் கவலையோடு போரைக் கண்டு நின்றனர்; பாணன், பொருநனைத் தன் மார்புறச் சேர்த்து, அவன் தோள்களைத் தன் இரு கைகளாலும் இறுகப் பிணித்துக்கொண்டான்; பொருநன் பாணன் பிடித்த பிடியினின்றும், தன்னை விடுவித்துக் கொள்ளும்பொருட்டுத் தன் தோள்களை அசைத்து இழுக்க முழுவலி காட்டி முயன்றான்; ஆனால், அந்தோ, அவ்வாறு அவன் முயன்றபோது, பாணன் தான் இறுகப் பிடித்திருந்த பிடியை நழுவவிடாது போகவே, பொருநன் தோள்கள், பாணன் கைகளுக்குள்ளேயே கிடக்க, அவன் உடல் மட்டும் தனியே போந்து புறத்தே வீழ்ந்தது; பொருநன் இறந்தான்; பொருநன் பொன்றியது கண்டு கலங்கிய கணையன், தன் பொருநன் தோற்றமைக்கு நாணித் தலை குனிந்தான். மற்போரைப் பார்த்திருந்தோரெல்லாம், பாணன் ஆற்றல் கூறி அவனைப் பாராட்டினர் :

“ பாணன்,
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்,
நிறைத்திறன் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி, நற்போர்க்

அம்மற்போர் நிகழ்ச்சிக்குப் பின்னர், பாணன்பால் பெரு மதிப்பு உண்டாயிற்று கட்டிக்கு. அவன் பேராற்றல் துணைகொண்டு, ஓர் அரசமைத்து வாழவும் ஆசைகொண்டான் அவன். அக்காலை, உறையூரை ஆண்டிருந்த தித்தன் வெளியன், அத்துணை ஆற்றல் வாய்ந்தவனல்லன் என யாரோ சிலர் கூறியதைக்கொண்டு, அவனை வென்று, அவ்வுறையூர் ஆட்சியைக் கைப்பற்றத் துணிந்தான். பாணன் துணையோடு, பெரியதோர் படையையும் உடன்கொண்டு, உறையூர் சென்று, ஊர்ப்புறத்தே தங்கியிருந்தான். அவ்வாறு தங்கியிருப்பான், பாட்டிசைத்தும், பறையொலித்தும் தித்தன் வெளியனைப் பாராட்டி மகிழும் மக்கள் கூடியிருக்கும் உறையூர் அவையினின்றும் எழும் பேரொலியைக் கேட்டான்; "இவ்வாறு மக்கள் பாராட்டும் மாண்புடையனுய தித்தன் வெளியன், நாம் எண்ணியவாறு அத்துணை எளியனல்லன்" என்று எண்ணினன்; உடனே, ஊரார் எவரும் உணராமுன்னரே, உறையூரை விட்டு ஓடிவிட்டான். தன் பேராற்றல் காட்டி, மக்கள் பாராட்டைப் பெறவந்த பாணன், அந்நாட்டு அரசியல் சூழலிலும் அடிவைக்க முயன்றான்; ஆனல், மற்போரில், மக்கள் மகிழ வெற்றிகண்ட அவ்வீரன், அரசியல் வேட்டையில் வீழ்ச்சியுற்றான்:

" வலமிகு முன்பின் பாணனொடு, மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடு கேட்டஞ்சிப்
போரடு தானைக் கட்டி,
பொராஅது ஓடிய ஆர்ப்பு." (அகம் : உ௨௬)

## ௧௦. பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்

முடியுடைப் பேரரசராய மூவேந்தர்க்கு மகட்கொடுக்கும் உரிமையுடையராய உழுவித்து உண்ணும் வேளாளர் வழிவந்தோருள், சோழநாட்டுப் பிடவூர் கிழான் பெருஞ்சாத்தனும் ஒருவனவன்; இஃது, "உழுவித்துண்போர், மண்டில மாக்களும், தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதியில் தோன்றி, வேள் எனவும், அரசு எனவும் உரிமை எய்தினோரும் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளர்" (தொல்: பொருள்: ௩௦). என்ற தொல்காப்பிய உரையால் தெளிவாகும். பிடவூர், சோழ நாட்டில், உறையூர்க்குக் கீழ்பால் உள்ளதொரு வைப்புத்தலம்: அதில் மாசாத்தனார் கோயில் ஒன்றும் உளது; அச்சாத்தனார் பெயரே, பிடவூர் கிழான் மகனுக்கும் பெயராயிற்று; பிடவூர், பலவளமும் நிறைந்த பேரூராம் பெருமையுடையது; அவ்வூர்வாழ் உழவர், தம் வயல் உழுத பகடுகளை வன்புலத்தில் மேயவிடுத்து, முயற்கறியும், வாளைமீன் கறியும் உடன்கொண்ட பழஞ்சோறுண்டும், முல்லை மலர் சூடியும் மகிழ்வர்; வயலில் விளைந்த கதிர்களை உண்டற்கு வந்து படியும் புள்ளினங்களைப் பறையொலித்து ஓட்டுவர்; நெல்கொண்டு செய்த நறுங்கள்ளுண்டு களிப்பர்: மனையகத்துக் கோழிகள் எடுக்கும் குரல் ஒலிக்கு எதிராகக், கானக்கோழியும், நீர்க்கோழியும் தம் நீண்ட குரல் கொடுக்கும்; வேய்போலும் தோளும், மயில்போலும் சாயலும் உடைய உழவர் மகளிர், கிளி ஓட்டும் ஒலிகேட்டு, சேற்றுப் பறவைகளாகிய செங்கால் நாரை முதலாயின வெருவி ஓடும்; இவ்வாறு வளஞ் செறிந்த வயல்கள்சூழப் பெற்றது பிடவூர்:

"மென்புலத்து வயலுழவர்

குறுமுயலின் குழைச்சூட்டொடு
நெடுவாளைப் பல்லுவியல்
பழஞ்சோற்றுப் புகவருந்திப்,
புதல் தளவின் பூச்சூடி,
அரிப்பறையால் புள்ளோப்பி,
அவிழ் நெல்லின் அரியல் ஆருந்து;
மனைக்கோழிப் பைம்பயிரின்னே,
கானக்கோழிக் கவர்குரலொடு
நீர்க்கோழிக் கூப்பெயர்க் குந்து;
வேயன்ன மென்தோளால்
மயிலன்ன மென்சாயலார்
கிளிகடியின்னே
அகல் அள்ளல் புள்இரீஇயுந்து;
ஆங்கப், பலநல்ல புலன் அணியும்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை உறந்தைக் குணது
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்."

(புறம்: ௩௯௫)

இத்தகு வளமிகு பிடவூரைப்பெற்ற பெருஞ்சாத்தன், பெருங்கொடை வள்ளலாய்ப் புலவர் போற்ற வாழ்ந்தான்; அவனைப் பாராட்டிய முதுபெரும் புலவராய நக்கீரர், தன்னை ஒருகிணைப் பொருநனைக் கொண்டு, "தன்வாயில் முன் தடாரிப் பறையோடு நின்ற என்னைக்கண்ட பெருஞ்சாத்தன், நெடிது நேரம் அங்கேயே நின்றுவிடாமலும், மிக்க நேரத்தைப் பேசியே கழித்து விடாமலும், விரைந்து உட்சென்று அருங்கலம் பல கொணர்ந்து தந்தான்; தந்த தோடு அமையாது, என்னை அரண்மனைக்குள்ளே அழைத்துச் சென்று, தன் மனைவிக்குக் காட்டி, 'என்பால் அன்பு கொண்டு போற்றிப் பேணுவதைப் போன்றே, இவனையும் போற்றிக் காப்பாயாக என்றுகூறி நலம்பல நல்கினான்; அன்று தொட்டு அவனை யான் மறந்திலேன்; அவனையன்றிப்

கூறிப் பாராட்டுவதோடு, "அறப்பெயர்ச் சாத்தன்" என அவற்குப் பெயரிட்டும் அழைப்பாராயின், அவன் பெருமையினை என்னென்பது!

"அரிக்குரல் தடாரியோடு
ஆங்கு நின்ற எற்கண்டு
சிறிது நில்லான்; பெரிதும் கூறான்;
அருங்கலம் வரவே அருளினன்! வேண்டி
ஐயென உரைத்தன்றி நல்கித் தன்மனைப்
பொன்போல் மடந்தையைக் காட்டி, இவனை
என்போல் போற்று என்றோனே; அதற் கொண்டு
அவன் மறவலேனே; பிறர் உள்ளலேனே."

(புறம்: ௧௬௫)

## கக. பிட்டங்கொற்றன்

சேரநாட்டு ஆட்சிக்குட்பட்ட மலைகளுள் குதிரை மலையும் ஒன்று; குதிரைமலை, தகடூர் ஆண்ட அதியமான் நெடுமானஞ்சிக்கும் உரியது எனக் கூறப் பெறுவதால், "நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி" (அகம் : ௩எ௨), "ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல், கூவிளங்கண்ணிக் கொடும்பூண் எழினியும்" (புறம் : கரு௮) - அம்மலை, அவ் வஞ்சிக்குரிய தகடூரை அடுத்து இருந்தது எனக் கொள்ளுதல் பொருந்தும். சேரநாட்டு மலையாகிய குதிரைமலையை, அச்சேரர் குலத்தோடு உறவுடைய அதியமான்கள், உரிமை யாக்கி ஆண்டிருந்ததைப் போன்றே, அச்சேரன்படைத்தலை வருள் சிறந்தான் ஒருவனும், தன் உடைமையாக்கி ஆண்டிருந்தான். அவ்வாறு ஆண்டிருந்தவன், பிட்டங்கொற்றன்.

"பொய்யா வாய்வாள் புனைகழல் பிட்டன்,
மைதவழ் உயர் சிமைக் குதிரைக் கவாஅன்"
(அகம் : க௪௩)

பிட்டங்கொற்றன், பேராற்றல் உடையனுவன் பகைவர் நாட்டின்மீது போர்தொடுத்துப் புறப்படுங்கால், அப் படைக்குத் தலைமைதாங்கி முன்னேநின்று, பகைவர் படை எறியும் படைக்கலங்கள் அத்தனையும் தன் மேலேற்றுத் தன்படையினைக் காப்பதும், பகைவர் பெரும்படை, தன் நாட்டின்மீது படையெடுத்து வருங்கால், அப்படை தன் நாட்டுள் புகுந்துவிடாவண்ணம், பெருக்கெடுத்து ஓடிவரும் ஆற்றுவெள்ளத்தை இடைநின்று தடுக்கும் கல்லணை போலத், தான் ஒருவனுகவே நின்று தடுத்து அழிப்பதும் ஆற்றல்மிக்க பெருவீரர்க்கு அழகாம். பிட்டங்கொற்றன் ஒரு பெரிய போர்வீரன்; ஆதலின், அவன்பால், இப்பண்பு இயல்பாகவே அமைந்து விட்டமையால், அவனைக் காண்பது பரிசிலர்க்கும் அருமையாம். பிட்டங்கொற்றன், பகைவர் படைக்கலங்களால் அழியாத்திண்மை வாய்ந்தவன்; படைப்பயிற்சிபெறும் கோசர், வேலையும், அம்பை

முருக்க மரத்தான் ஆய இலக்கேபோல், பிட்டங்கொற்ற னும், பகைவர் படைக்கலங்கள் பலப்பல வந்து பாயினும், மாயாப் பெருவன்மையுடையவன்.

" நும்படை செல்லுங்காலே, அவர் படை
எடுத்தெறி தானை முன்னரை எனாஅ,
அவர்படை வரூஉங் காலே, நும்படைக்
கூழைதாங்கிய, அகல்யாற்றுக்
குன்று விலங்கு சிறையின் நின்றனை எனாஅ,
அரிதால் பெரும! நின் செவ்வி; என்றும்
பெரிதா வத்தை என் கடும்பினது இடும்பை;
இன்னே விடுமதி பரிசில்; வென்வேல்
இளம்பல் கோசர், விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகல்இலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்
பொருநர்க்கு உலையாநின் வலன்வாழியவே "

(புறம்: கசக)

கொல்லன் உலைக்களத்தில், காய்ச்சிய இரும்பினைக் கூடம் கொண்டு, அடிக்கும் அடிகளையெல்லாம் தாங்கிக் கொண்டு, சிறிதும் நிலைகலங்காது நிற்கும் பட்டடைக்கல் போல, பகைவர் எவ்வளவு பெரும்படை கொண்டு தாக்கி னும், அப்படைகள் எல்லாம், தாக்கித் தாம் அழியுமேயல் லால், அவற்றால் அவன் சிறிதும் அழிவுறான்; அத்துணைத் திண்ணியன் பிட்டங்கொற்றன்.

" பகைவர்க்கு
இரும்புபயன் படுக்கும், கருங்கைக் கொல்லன்,
விசைத்தெறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல் அன்ன வல்லா ளன்னே" (புறம்: கஎ0)

வன்மையுடையனாய் வாழ்ந்த பிட்டங்கொற்றன், வள் ளன்மையுடையனாயும் வாழ்ந்தான்; கொற்றம் உடைய னாதலைப்போன்றே, கொடையும் உடையனாயினான். "இன்று சென்றாலும் தருவன்; சிறிதுநாள் கழித்துச் செல்லினும்

தருவன்; நாள்தோறும் செல்வதாயினும், உமக்கு முன்னரே தந்துளேன் என மறுக்காது, யாம் வேண்டுவ எல்லாம், வேண்டியாங்கே தருவன். அவன் தொழுவத்தில் உள்ள பசுக்கள் அனைத்தையும் கேட்பினும் கொடுப்பன்; களத்தின்கண் கிடக்கும் நெற்போர்க் குவியலையே கேட்பினும் கொடுப்பன்; எமக்கேயல்லால், தன் மலைநோக்கி வந்து வாழ்த்திநிற்பார் அனைவர்க்குமே தருவன்" என அவன்பால் பொருள்பெற்ற பரிசிலன் கூறும் பொன்னுரையால், அவன் கொடைவளம் இன்ன தன்மைத்து எனல் இனிது விளங்கும்.

"இன்று செலினும் தருமே; சிறுவரை
நின்று செலினும் தருமே; பின்னும்
முன்னே தந்தனென் என்னாது, துன்னி
வைகலும் செலினும் பொய்யல னாகி,
யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்;
..............................................
இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்
களமலி நெல்லின் குப்பை வேண்டினும்,
அருங்கலம், களிற்றொடு வேண்டினும், பெருந்தகை,
பிறர்க்கும் அன்ன அறத்தகை யன்னே"

(புறம்: கஎக)

பிட்டனுக்குரிய நாட்டு உழவர், தினைப்புனக்காவலுக்குத் துணையாக ஏற்றிய தீ, அவிந்து விடுமானல், அப்புனங்களில் மலிந்துகிடக்கும் மாணிக்கக் கற்கள், தாம் விடும் ஒளியால் துணைசெய்வதேபோல், பாணரையும், பொருநரையும் புரப்பதற்காகவே பிறந்த பிட்டங்கொற்றன், தன் கடமையில் ஒருவேளை தவறுவனாயின், தன் படைத்துணைவனும் பிட்டங்கொற்றன் தளர்ச்சியினைப் போக்குவது தன்கடனாகும் என்று எண்ணும் பண்பினனாய அவன் அரசனாய சேரன், தானே முன்வந்து, பிட்டங்கொற்றனால் புரக்கப்படவேண்டியவர்களைப் புரந்து நிற்பன். இவ்வாறு, வள்ளல் தன்மையில் வாட்டம் காட்டாப் பிட்டங்கொற்றனையும், அவன் தளர்ந்தவழி, முன்வந்து துணைபுரி

யும் சேரவேந்தனையும் பெற்றுள்ளமையால், இரவலர்கள் சிறிதும் கவலை கொள்ளாது உலையேற்றிச் சோறாக்கியுண்பதும், கள்ளைக்குடிப்பதும், மலரும் மாலையும் சூடி மகிழ்வதும், பிட்டங்கொற்றன் வாழ்க! அவன் தலைவன் மாக்கோதை வாழ்க! அவர்கள் கொற்றம் வாழ்க! அவர்கள், இரவலர்க்குக் குறையாது கொடுத்தற்காம் பெரும்பொருளை இறையாகத் தரும் அன்னார்ப் பகை மன்னரும் பெருவளம் பெற்று வாழ்க! என வாழ்த்துவதுமே செய்து வாழ்வர்; என்னே அவன் வள்ளன்மை!

“எற்றுக உலையே! ஆக்குக சோறே!
கள்ளும் குறைபடல் ஓம்புக! ஒள்ளிழைப்
பாடுவல் விறலியர், கோதையும் புனைக!
அன்னவை பிறவும் செய்க! என்னதூஉம்
பரியல் வேண்டா; வருபதம் நாடி;
ஐவனம் காவலர் பெய்தீ நந்தின்,
ஒளிதிகழ் திருந்து மணி, நளியிருள் அகற்றும்
வன்புல நாடன், வயமான் பிட்டன்,
ஆரமர் கடக்கும் வேலும், அவன் இறை
மாவள் ஈகைக் கோதையும்,
மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே.”

(புறம்: கஎஉ)

“பொன்மலையைச் சார்ந்த காகமும் பொன்னிறம் பெறும்” என்ப. பெருங்கொடை வள்ளலாய் வாழ்ந்தவன், பிட்டங்கொற்றன் மட்டும் அல்லன்; அவன் நாட்டு வாழ் மக்கள் அத்தனைபேருமே பெருங்கொடை வள்ளல்களாய் வாழ்ந்தனர்; அவன் மலைநாட்டு மக்கள், மரையாவின் பால் ஊற்றி ஏற்றிய உலையில், தினையரிசி யிட்டு, சந்தன விறகால் தீமூட்டி ஆக்கிய சோற்றை, வாழையிலையில் வைத்து வருவார்க்கு வழங்கி உண்ணும் உயரிய வாழ்க்கையினை உடையர் என்பதைப் புலவர்கள் கூறிக் கூறிப் பாராட்டுவர்.

“மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்.

வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றிச்
சாந்த விறகின் உவித்த புன்கம்,
கூதளம் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ!" (புறம்: கசுஅ)

பிட்டங்கொற்றன், இவ்வாறு பெருங்கொடையுடைய னாதலின், அவன்பால் பேரன்புகொண்ட இரவலர், அவனுக்குண்டாம் சிறு துயரையும், தமக்குற்ற பெருந் துயராக்கொண்டு பெரிதும் வருந்துவர்; அவன் துயர் அறியாப் பெருவாழ்வினனாதல் வேண்டும் என்று விரும்பினர். இரவலர் தம் உள்ளத்தை உணர்ந்த புலவர், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், "வறுமையால் வாடும் புலவர்கள் வாழவேண்டின், பிட்டங்கொற்றன் வாழ்தல்வேண்டும்; ஆகவே, அவன் அடியில் சிறு முள்ளும் தைக்காதிருக்குமாக!" என வேண்டி வாழ்த்துவாராயினர்.

"அன்னன் ஆகலின், எந்தை உள்ளடி
முள்ளும் நோவ உறாற்க தில்ல;
ஈவோர் அரிய இவ்வுலகத்து,
வாழ்வோர் வாழ, அவன் தாள்வா ழியவே."
(புறம்: கஎக)

பிட்டங்கொற்றன், கொடையும், கொற்றமும் கண்டு மகிழ்ந்த புலவர்கள், அவனை இவ்வாறெல்லாம் புறத்தில் பாராட்டியும் அமைதியுற்றாரல்லர்; தாம் பாடிய அகத் துறைப் பாடல்களிலும் அவனைப் பாராட்டுவாராயினர். ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் எனும் புலவர், "பிட்டங்கொற்றன், அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஓச்சுதல்போன்ற போர்ப்பழிகள் தன்பால் உண்டாகா வண்ணம் போராற்றும் பேராண்மையாளன். சேரர் படைத்தலைவன்; பரிசில்பெற்று வாழும் வாழ்க்கையின ராய இரவலர்க்கு, நல்ல பல பொருள்களை நாடோறும் நல்கும் நயமுடையவன்; வெற்றியன்றித் தோல்வி காணா

உடையவன்; குதிரை மலைக்கோவலன்; மழை தவழும் மாண்புடைய மலையுடையான்" என்றெல்லாம் பாராட்டு வாராயினர்.

"வசையில் வெம்போர் வானவன் மறவன்;
நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும்
பொய்யா வாய்வாள், புனைகழல் பிட்டன்,
மைதவழ்உயர் சிமைக் குதிரைக் கவாஅன்."

(அகம்: ௧௪௩)

# ௧௨. பிண்டன்

நாடு, குடி, படையென நிலைத்த அரசமைத்து வாழ்ந்த அரசர்களுக்கிடையே, தம் ஆற்றல் துணையால் அண்டை நாடுகளிற் புகுந்து ஆண்டுள்ள அரசுகளுக்கும், அவ்வரசின்கீழ் வாழ் மக்களுக்கும் கேடு விளைத்து வாழும் குறும்பர்கள் சிலரும் வாழ்ந்திருந்தனர். அத்தகையாருள் பிண்டனும் ஒருவன். பிண்டன், பாழிநகர்க்கு உரியோனாய நன்னன் நாட்டையடுத்த வோரிடத்தே வாழ்ந்திருந்தான்; பெருவலி பெற்ற பிண்டன், நன்னனுக்கும், அவன் போலும் அரசர் பலர்க்கும் பெருந்தொல்லை விளைத்திருந்தான்; அவனால் அரசுகள் பல அழிந்தன; கடல் கடந்து, கரைசேர நண்ணும் கலங்களை, ஒன்று கூடிக் கவிழ்க்க வல்ல சுறுமீன் கூட்டத்தைப்போல், அமைதி வாழ்வு வாழும் அரசுகளை அலைக்கழித்து வாழும் குறும்பர் கூட்டத் தலைவனாய் வாழ்ந்தான் பிண்டன். அவன் தரும் கேட்டினைத் தாங்கமாட்டா நன்னன், வேற்படையால் வீறுகொண்ட பெரிய படையோடு சென்று, அவன் ஆற்றலை அழித்து அடக்கினான்:

"இரங்குநீர் பரப்பின் கானலம் பெருந்துறைத்
தனந்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெள் இறவின் குப்பை யன்ன
உறுபகை தரூஉம் மொய்ம்மூசு பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்
இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவன் ஆர நன்னன்." (அகம்: ௧௫௨)

## கரு. புல்லி

தமிழகத்தின் வடவெல்லையாக விளங்கும் வேங்கடத்தையும், அவ்வேங்கடத்தைச் சூழ உள்ள நாடுகளையும் ஆண்டிருந்தவன் புல்லி. புல்லி ஆண்டிருந்த நல்ல நாட்டைக் கடந்தால் வடுகு மொழி வழங்கும் வடுகர்நாடு வந்துறும் எனத் தெரிவதால், தமிழகத்தின் வடவெல்லையைக் காத்து நின்றவன் இப்புல்லி எனல் பொருந்தும்.

"புடையலம் கழற்கால் புல்லி குன்றத்து
நடையரும் கானம் விலங்கி, நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழி பெயர் தேஎம்." (அகம்: உகரு)

புல்லி, கள்வர் என்ற இனத்தாரின் தலைவனாவன்; சங்ககாலத்திற்குப் பிறகு, தமிழகத்து அரசியல் அமைதியை அழித்து, பேரரசுகளையெல்லாம் பாழாக்கிப் பெருங் கேடு விளைத்து வந்தாராய களப்பாளர் என்ற இனத்தார், புல்லி பிறந்த கள்வர் குலத்தாரே எனக் கூறுவர் சில ஆராய்ச்சியாளர். தென்னவர் என அழைக்கப்படுவாராய பாண்டியர் கள்வர் தலைவராவர் என்றும், அப்பாண்டியர் படைக்குப் பயன்பெறும் யானைகள் எல்லாம், கள்வர் பெருமகனாய புல்லி வாழும் வேங்கடத்தினின்றே வந்தன என்றும், புல்லியின் வரலாறுகளை விளங்க உரைக்கும் புலவர் மாமூலனார் கூறுவதால், புல்லி, யாதோ ஒருவகையால், பாண்டியர் குலத்தோடு தொடர்புடையனாதல் வேண்டும் எனத் தெரிகிறது.

"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்." (அகம்: சுக)

"ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்;

அருங்குறும் பெறிந்த ஆற்றலொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்
கெடாஅ நல்லிசைத் தென்னன்." (அகம்: ௩௪௨)

"வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை
மறப் போர்ப் பாண்டியர்." (அகம்: ௨௭)

புல்லி ஆண்ட வேங்கடநாடு, வேழங்கள் மலிந்த நாடு. வேங்கடத்தில் கொண்ட வெண்கோட்டு யானைகளை உடையது பாண்டியர் படை எனக் கூறுவதையும் உணர்க. தாம் வாழும் நாடு வேழங்கள் நிறைந்தது என்பதை அறிந்த அந்நாட்டு வீரர்கள், தாம் வாங்கும் பொருள்களுக்கெல்லாம், யானைகளையும், யானைக்கோடுகளையுமே விலையாகக் கொடுப்பர் என்றும், புல்லியின் படைவீரர், தம் நாட்டை அடுத்த காட்டுட் புகுந்து, பிடி யானைகள் வருந்துமாறு, அவற்றின் கன்றுகளைக் கைப்பற்றி, வெண் கடம்ப மரத்தின் கிளைகளை வெட்டி, உரித்தெடுத்த நார் கொண்டு பின்னிய வலிய கயிற்றால் கட்டிக்கொணர்ந்து, கொடிகள் ஆடும் அழகுடைய தம் ஊரில் உள்ள கள்ளுக் கடைகளின் வாயிலிடத்தே, தாம் வாங்கி உண்ட கள்ளின் விலையாகக் கட்டிப்போவர் என்றும், புல்லியின் வில்வீரர், கள்ளுண்ணற்குக் களிற்றுக் கன்றுகளைக் கைப்பற்றிக் கொணர்வர் என்றால், அவர்களின் தலைவனாய புல்லி, நாளவைக்கண் தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்கு, நறவுவிற்றுப் பெற்ற நெல்லோடு, யானைக்கோடுகளையும் கொடுத்தலை விரும்பிப் பகைவர் மார்பில் பாயுமாறு அம்பெவவல்ல விடி வீரர் பலரோடு சென்று, பெரிய யானைகளை வேட்டையால் அவற்றின் வெண்கோடுகளைக் கொணர்வன் என்றும், பிடியினை இழந்த களிறும், களிற்றினை இழந்த பிடியும் அழுது கூப்பிடும் பேரொலி, அம்மலையகத்தே மாறாது ஒலிக்கும் என்றும் புலவர்கள் கூறுவர்.

"கறையடி மடப்பிடி கானத்து அலறக்
களிற்றுக்கன்று ஒழித்த உவகையர், கலிசிறந்து
கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து

நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவுநொடை நல்லில் புதவுமுதல் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி." (அகம்: அ௩)

"அருநிறத்து அழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண்புல்லி." (அகம்: ௬௧)

புல்லியும், அவன் வில்வீரரும், இவ்வாறு வேழம் வீழ்த்தும் வன்கண்மையுடையரேயெனினும், அவன் நாட்டு வாழ் ஆயர், தம்நாடு நோக்கி வருவாரை விருந்தேற்றுப் போற்றும் அன்புடையராவர். உயர்ந்த உச்சிகளையுடைய மலைகள் பலவற்றைக் கடந்தும், கோடையின் கொடுமையால் நீர்நிலைகள் எல்லாம் வற்றிப்போக வெப்பம்மிக்க வழிகளைத் தாண்டியும், வெளிநாடு சென்று விழுமிய பொருள் கொணர்வான்வேண்டி, தம் ஊர்வழியே வரும் புதியோர்க்கு, அந்நாட்டு ஆயர்களுள் சிலர், மூங்கிற் குழாயில் இட்டு, எருதுகளின் கழுத்தில் கட்டிவைத்த புளிச்சோற்றைத் தேக்கிலையில் வைத்துத் தருவர்; சிலர், ஆக்கிய சோற்றை ஆவின்பாலில் பெய்து தருவர் எனப் புலவர்கள் பாராட்டுவது காண்க.

"கோடுயர் பிறங்கல் குன்றுபல நீந்தி
வேறுபுலம் படர்ந்த வினைதரல் உள்ளத்து
ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரிய
..................................
குடவர் புழுக்கிய பொன்கவிழ் புன்கம்
மதர்வை நல்லான் பாலொடு பகுக்கும்
நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி."

"பயந்தலை பெயர்ந்து மாதிரம் வெம்ப,
வருவழி வம்பலர்ப் பேணிக், கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்

இவ்வாறு வன்கண்மைமிக்க வீரரும், அன்புகாட்டும் ஆயரும் கலந்து வாழும் வேங்கட நாடாண்ட புல்லி, இரவலர்க்கு இல்லை என்னாது ஈயும் வண்மையும், அதனால் பெற்ற வளமார் புகழும் உடையனாவன். அவன் அத்தகையான் என அறிந்த புலவர்கள், அவனைப் "பொய்யா நல்லிசை மாவண்புல்லி" (அகம் : ௩௫௯) என்றும், "நெடுமொழிப் புல்லி" (அகம்: ௩௯௩) என்றும் சுருங்கிய வாய்பாட்டான் கூறிப் பெருகப் பாராட்டினர்.

# கச. பொருட்டெழினி

சேலம் மாவட்டத்துத் தர்மபுரி, பண்டு தகடூர் எனும் பெயர்கொண்டு விளங்கிற்று. தகடூரைத் தலைநகராகக் கொண்டு, சேலம் மாவட்டத்தின் வடபகுதியை ஆண்டு வந்தனர் அதியர் என்ற குறுநில அரசர்கள்; அவ் வதியர் சேரமரபினரோடு உறவுடையவர்; அதனால் அச்சேரர்க்கு உரித்தெனப்பட்ட பனந்தோட்டையே, இவர்களும் மாலையாகப் பெற்றிருந்தனர்; கொல்லிக்கூற்றமும், குதிரைமலையும் இவர்க்கு உரியவாய் இருந்தன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனப்படும் சங்ககாலத்தே வாழ்ந்த இவர்கள், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், விசயாலயன் வழி வந்த பிற்காலச் சோழர்களுக்குத் துணைவர்களாக விளங்கினர் என அறியப்படுதலால், இவர்களும் மூவேந்தரைப் போன்றே நெடிதாண்ட பெருமரபினர் என்பது புலனும். பெறற்கரும் பெருமைவாய்ந்த கரும்பைப் பிறநாட்டினின்றும் ஈந்தற்கண் இவண் கொணர்ந்த பெருமை, இவ்வதியர்க்கே யுரித்து.

> "அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
> அரும்பெறல் மரபின் கரும்பிவண் தந்தும்
> நீரக இருக்கை ஆழி சூட்டிய
> தொன்னிலை மரபின்நின் முன்னோர்." (புறம்: கூக)

போரிடை வெற்றியல்லது தோல்வி காணாப் பேராண்மை யொன்றையே பெறற்கரும் பேறாகக் கருதும் வீரர் பலர், வில்லேந்திக் காத்துநிற்கும் காவற்காட்டான் சூழப்பெற்றது தகடூர். அந்நகருள், அரசர் புகழ்பாடி வரும் இரவலர் நுழைதல் இயலுமேயல்லால், பகை கொண்டு வருவார் எவரும், கனவிலும் நுழையக் கருதாக் காவல் உடையது. காட்டிற் சென்று மேயும் ஆனிரைகள், ஆங்கே தமக்கு ஊறுசெய்யும் பகை விலங்குகள் இல்லாமையால், மேய்ந்து, மாலை வந்ததும் வீடுநோக்கி

தங்கும். நடந்து நடந்து வெந்த காலுடையராய வழிப் போவார், வழி, ஆறலை கள்வர் அற்றது ஆதலின், அவர் அலைப்பரே என அஞ்சி அரண் அமைந்த இடந்தேடி ஓடி ஒளியாமல், தாம் விரும்பும் இடங்களிலேயே இருந்து இளைப்பாறுவர். நாடு கள்வர் அற்றது ஆதலின், நெல் முதலாம் பொருட்குவியல்கள் காப்பார் எவரையும் பெறாமல் களங்களில் தனித்தே விடப்படும். அத்துணை நல்லாட்சியுடையது அந்நாடு.

"பல்பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர்." (பதிற்று: எஅ)

"ஆர்வலர் குறுகினல்லது, காவலர்
கனவினும் குறுகாக் கடியுடை வியன்நகர்." (புறம்: ௧௨0)

"கன்றமர் ஆயம் கானத்து அல்கவும்,
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்
களமலி குப்பை காப்பில வைகவும்,
விலங்கு பகைகடந்த கலங்காச் செங்கோல்."
(புறம் : உ௩0)

இத்துணை வாழ்வும், வளப்பும் மிக்க நாட்டிலே, அத்துணைப் பீடும் பெருமையும் மிக்க மரபிலே பிறந்து, "நெல்லி அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த" அருட் பேருள்ளமுடையான் என ஆன்றோர் வாழ்த்த ஆண்ட அதியமான் நெடுமானஞ்சியின் அருமை மகன் பொகுட்டெழினி. பொகுட்டெழினியும் அவன் தந்தை அதியமானைப்போன்றே பேராற்றலும், போர்வேட்கையும் உடையவன்; பகைமன்னர் பலரை வென்று, அவர் அரண்களைக் கைக்கொள்வதோடு அமையாது, ஆங்கு இறந்து வீழ்ந்த வீரர்களின் உடலினின்றும் வெளிப்போந்த குருதியால் ஈரம்பட்ட நிலத்தில், கழுதை ஏர்பூட்டி உழுது, வெள்ளைவரகும் கொள்ளும் விதைத்து, அப்பகைவர் நாட்டைப் பாழாக்கிப் பார்த்து மகிழும் போர்வேட்கையும்

"உருகெழு மன்னர் ஆரெயில் கடந்து,
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்து
அணங்குடை மரபின் இருங்களம் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ." (புறம்: ௩௯௨)

பொகுட்டெழினி, நாடாளும் நற்றிறமும் நன்கு பெற்றிருந்தான். அதியமான் மறைவால், அல்லற்பட்டு ஆற்றாது அழும் அவன் நாட்டுமக்கள் நிலைகலங்கி மனம் தளராது, அவன் பிரிவால் நேர்ந்த துன்பம் மறந்து மகிழும்வண்ணம், நாடாள் திறம்பெற்று விளங்கிய பொகுட்டெழினியின் சிறப்புணர்ந்து வியந்த ஔவையார், அவனைப், "பாரம் மிகுதியாலும், வழி அருமையாலும், வண்டியின் அச்சு, இடைவழியில் முறிந்துபோமாயின், ஆண்டு உதவுதற்கு என்றே எடுத்துச்செல்லும் சேம அச்சிற்கு" ஒப்பித்துப் பாடிப் பாராட்டியுள்ளார்.

"எருதே இளைய; நுகம் உணராவே;
சகடம், பண்டம் பெரிது பெய்தன்றே;
அவல் இழியினும், மிசையேறினும்
அவணது அறியுநர் யார்என, உமணர்
கீழ்மரத்து யாத்த சேமஅச்சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய்." (புறம்: ௧0௨)

போர்வேட்கையும், பாராள்திறமும் பெற்ற பொகுட்டெழினி, அவன் தந்தை அதியமானைப்போன்றே, தன் பால் பாடிப் பரிசில்பெற வரும் பாணரையும், பாவலரையும், அன்புடன் ஏற்று, அவர் வறுமை போகப் பரிசில் பல அளிப்பதோடு, அவரைத் தம்மோடு பலநாள் இருத்தி, உடனிருந்து உண்டு மகிழும் மனநலனும் உடையனவன். அதியனை இழந்து, அல்லலுற்ற நாட்டை, தன் ஆட்சித்திறத்தால் நன்காண்ட நல்லோனாய பொகுட்டெழினியின், திறமெலாம் விளங்கப் பாக்கள் பல பாடிப் பாராட்டியுள்ளார், அவன் தந்தை அதியமான் அவைக்

## கரு. பொறையாற்றுக்கிழான் பெரியன்

'தென்னாட்டு நெற்களஞ்சியம்' என்ற தனிச் சிறப்புடையது தஞ்சை மாவட்டம்; 'சோழ வளநாடு சோறுடைத்து' என, அது அன்றே பாராட்டப் பெற்றுளது. அத்தகைப் பெருஞ் சிறப்புடைய தஞ்சைமாவட்டத்துப் பேரூர்களுள் பொறையாறு என்பதும் ஒன்று; பொறையாறு கடற்கரையை யடுத்த நெய்தல் வளம் நிறை ஒரு நல்லூர். கடல் நீருட்புகுந்து மீன் தேடியுண்ட புதாவும், நாரையும் போலும் அந்நிலத்துப் பறவைகள், கரைக்கண் உள்ள தாழை மரத்திலும், புன்னைமரத்திலும் சென்று தங்கும். அக்கரைவாழ் பரதவர், கடல் அலையும், ஒலியும் அடங்கித்தோன்றும் இராக்காலத்தே மீன் படகேறிக் கடல்மேற் செல்வர். ஆதலின், அவர்கள், தம் படகு தோறும் ஏற்றிய விளக்குகள் கடல் நிறையத்தோன்றும். அக்காட்சி, நாடாளும் அரசன் பாசறைக்கண், யானைகளின் முகபடாத்து ஒளியொப்பத் தோன்றும்.

இத்தகு நெய்தல் வளம் நிறைந்த பொறையாற்றில் வாழ்ந்த பெரியன், பெரிய கொடை வள்ளலாய் வாழ்ந்தான்; அவனை அறிந்த இரவலர் அனைவரும், அவனையே சூழ்ந்து கிடப்பர்; அவனை விட்டு அப்பாற்செல்ல எண்ணார். தான் வாழும் வடநாடு வறுமை கொள்ளுந்தோறும், புலவர் கல்லாடனார், தென்னாடு போந்து பெரியன் பேரன்பிலேயே வாழ்வர் என்றால், அவன் புலவர்கள் மாட்டும், அவர் போலும் பிற இரவலர் மாட்டும் எத்துணைப் பேரன்புடையனவன்! வருவார்க்கெல்லாம் வரையாது வழங்கி வாழ்ந்தமையால் புலவர்கள், அவனை 'வேலியாயிரம் விளைக' என வாழ்த்தினர்.

> "திரைமுதிர் அரைய தடந்தாள் தாழைச்
> சுறவுமருப் பன்ன முள்தோடு ஒசிய
> இறவார் இனக்குருகு இறைகொள இருக்கும்
> நறவுமகிழ் இருக்கை நற்றேர்ப் பெரியன்

"பெருந்திரை முழக்கமொடு இயக்கு அவிந்திருந்த
கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த,
கொழுமீன் கொள்பவர், இருள்நீங்கு ஒண்சுடர்,
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை
ஆடியல் யானை அணிமுகத்து அசைந்த
ஓடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன், விரியிணர்ப்
புன்னையங் கானல் புறந்தை." (அகம் : ௧00)

"நின்உணர்ந்து அறியுநர் என்உணர்ந்து கூறக்
காண்கு வந்திசின் பெரும! மாண்தக
இருநீர்ப் பெருங்கழி நுழைமீன் அருந்தும்
துதைந்த தூவியம் புதாஅம் சேக்கும்
ததைந்த புன்னைச் செழுநகர் வரைப்பின்,
நெஞ்சமர் காதல்நின் வெய்யோளொடு
இன்துயில் பெறுகதில் நீயே ; வளம்சால்
துளி, பதனறிந்து பொழிய,
வேலி யாயிரம் விளைகநின வயலே." (புறம் : ௩௯௧)

## கக. போரூர்கிழவன் பழையன்

சோணாட்டுக் காவிரியாறு வளமான ஊர்களைத் தன் இருபாலும் கொண்டோடும் கவின் உடையது. அத்தகைய ஊர்களுள் ஒன்று போரூர்; போஒர் என வழங்கப்பெறும் அப் பேரூர் காவிரி பாய்வதால் பெற்ற பெருவளம் உடையது. அப்போரூரில் பழையன் என்பானொரு படைமறவன் வாழ்ந்திருந்தான். பழையன், விற்படை, வேற்படைகளில் நன்கு பழகியிருந்தான். அவன் பகைவர்மீது எறியும் வேல், தப்பாது சென்று தன் தொழிலை முடிக்கும். பழையன் வில்வளைத்து நின்றால், மழைத்துளிபோன்ற அம்புகள் பல அவன் கையினின்றும் போந்து பகைவரைப் பாழ் செய்யும். பழையன் இங்ஙனம் பேராற்றல் உடையன் என்பதை அறிந்தான். அக்காலைச் சோணாடாண்டிருந்த சோழன் செங்கணான், அவனை அழைத்துத் தன் பெரும்படைக்குத் தலைமை தாங்கும் பெரும்பணியை அளித்தான். சோழர்படையில் பணியாற்றி வந்தான் பழையன்.

சோழன் செங்கணான், அன்று சேரநாட்டு அரசனாய் ஆண்டிருந்த சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பானோடு பகைகொண்டிருந்தான். கடைசியில், சேரநாட்டைச் சேர்ந்த கழுமலம் எனும் இடத்தே கொங்குநாட்டுப் படைகளும், சோணாட்டுப்படைகளும் எதிர்த்துப் போரிடத்தொடங்கின. ஆண்டு அமைந்திருந்த சேரர் பாசறை பேரரண் உடையது, ஆற்றல் வாய்ந்த படைத்தலைவர்களாய நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை முதலாய பலர் அதை நின்று காத்து வந்தனர். சோழர்படைக்குத் தலைமை தாங்கிச் சென்றான் பழையன். போர்தொடங்கியவுடனேயே, பழையன் பேராற்றல் காட்டிப்போரிட்டான்; ஒரே பகலில், பகைவர் படைத்தலைவர் அறுவரையும் கொன்றான்; அவர்கள் காத்து நின்ற அரணையும் அழித்தான். சேரர் படை சிதைந்தது;

வெற்றிபெறும் அந்நிலையில், யாரோ எய்த அம்பொன்று பழையன் மார்பில் பாய்ந்துவிட்டது; களத்திலேயே வீழ்ந்து மாண்டுபோனான் பழையன். படைத்தலைவன் பழையன் பட்டான்எனக் கேட்டுக் கலங்கினான் செங்க) ணான்; கண்ணீர்விட்டுக் கதறினான். பழையனைக்கொன்ற பகைவரைப் பாழ்செய்தன்றி மீளேன் எனக் கடுஞ்சினம் கொண்டு, களம் புகுந்து கடும்போரிட்டுக் கணைக்கால் இரும்பொறையைக் கைப்பற்றிக் கொணர்ந்து, குடவாயிற் கோட்டத்தில் காவலில் வைத்தான். ஆனால், அந்தோ, அவ்வெற்றியால் உற்ற பெரும்பயனைப்பெறும் பேறுபெறா னயினான் பழையன். அவ்வெற்றிவிழாவைக் காணக் கொடுத்து வைத்தில அவன் கண்கள். கழுமல நகரிடத்தே பழையன்பால் தாம் கண்ட பேராண்மைப் பெருமையினை அப்போரில் தோற்ற கணைக்கால் இரும்பொறை சிறை வைக்கப்பெற்ற சிறையிருந்த குடவாயிற்கோட்டத்தில் வாழ்ந்த புலவர் கீரத்தனார் தாம் பாடிய அகப்பாட்டொன் றில் வைத்துப் பாராட்டிப் பெருமை செய்துள்ளார் :

"வென்வேல்
மாரி அம்பின், மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பின் போஓர்." (அகம் : ௧அசு)

"வென்வேல்
இழையணி யானைச் சோழன் மறவன்
கழையளந் தறியாக் காவிரிப் படப்பைப்
புனல்மலி புதவின் போஓர் கிழவோன்
பழையன் ஓக்கிய வேல்போல்
பிழையல." (அகம் : ௩உசு)

"நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்னருங் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்

கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலம் கண்ணிப் பெரும்பூட் சென்னி."
(அகம்: ௪௪)

"கொற்றச் சோழர், கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல் வாய்த்தன்ன நின்
பிழையா நன் மொழி." (நற்: க0)

"கவளங்கொள் யானையின் கை துணிக்கப் பட்டுப்
பவளம் சொரிதரு பைபோல்—இவன்ஒளிய
ஒண்செங் குருதி உமிழும், புனல்நாடன்
கொங்கரை அட்ட களத்து." (களவழி நாற்பது: க௪)

# கஎ. மத்தி

காவிரிக் கரைக்கண் உள்ள ஊர்களில் சாலச் சிறந்தது கழார். காவிரி கடலோடு கலக்குமிடத்தே அமைந்தது அப்பேரூர். ஆண்டு, ஆண்டுதோறும், புதுப்புனல் வருங்கால் நிகழும் புனல் விழா, அரசரும் வந்து காணும் அத்துணைச் சிறப்புடையது. அவ்வூரில் வாழ்ந்த பரதவர் தலைவன் மத்தி. வேற்படை வீரனாய மத்தி, வள்ளன்மை மிக்கானுமாய் வாழ்ந்திருந்தான். மத்தி, சோழர் படைத் தலைவருள் ஒருவனாய்ப் பணியாற்றி வந்தான். ஒருகால், சோழ அரசன் தன் படைகளுக்காம், பிடிகளையும், களிறுகளையும், அவற்றின் கன்றுகளையும், பற்றிக்கொணரும் வேட்டைமேற் கொண்டானாக, அரசனுக்கு, அப்பணியில் துணைபுரிந்து வந்த எழினி என்பான், அம்முறை வாரானாக, அதனால் சினங்கொண்ட சோழன் ஏவப், படையோடு சென்று, அவ்வெழினியை வென்று, அவன் பல்லையும் பறித்துக்கொணர்ந்து வெண்மணி வாயில் கதவில் வைத்துப் பொறித்த வீரம் செறிந்தவன் இம்மத்தி. மத்தி, அவ்வாறு தான் பெற்ற வெற்றிச்சிறப்பு விளங்க, அவ்வெண்மணி வாயிற்கண், கல்லால் உண்ணுநீர்த் துறையொன்று அமைத்தான். மத்தியையும், அவன் கழார்நகரையும், அவன் கொடையையும், கொற்றத்தையும் விளங்கப் பாராட்டிய புலவர்கள், ஓரம்போகியார், பரணர், மாமூலனார் ஆய மூவராவர்.

"நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்
கைவண் மத்தி கழாஅர்." (ஐங் : சுக)

"பல்வேல் மத்தி கழாஅர்." (அகம் : சு)

"வல்வில், எறுழ்த்தோள், பரதவர் கோமான்
பல்வேல் மத்தி கழாஅர் முன்துறை." (அகம் : உஉசு)

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ் சேணாட்டின் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி, பல்லெறிந் தழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்

# கஅ. மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளதும், பெண்ணையாற்றுப் பாய்ச்சலையுடையதும், திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டதுமான நாடு, பண்டைக்காலத்தில், மலாடு அல்லது மலையமானாடு என்ற பெயர் பெற்றிருந்தது. அந்நாடு, காடும் மலைகளும் சூழ நடுநாட்டில் இருப்பதால், கடலாலோ, பகைவர்களாலோ, அழிவுறுவதில்லை. அந்நாட்டில் அந்தணர் பலர் வாழ்ந்திருந்தனர். அந்நாட்டின் இடையே, முள்ளூர் என்ற அரண்மிக்க மலையொன்றும் இருந்தது. அந்நாட்டை மலையர், அல்லது மலையமான்கள் என்ற அரசர்கள் ஆண்டு வந்தனர். அம்மலையமான்கள் மரபிலே வந்தவன் திருக்கண்ணன். இவன் சோழ அரசின் கீழ்ப் படைப்பணியாற்றும் பெருவலியுடையனாவன்; அவ்வாறு பணியாற்றியதால் பெற்ற சோழிய ஏனாதிப் பட்டத்தையும் பெற்றிருந்தான். மலையமான்களுள் சிறந்தானாய திருமுடிக்காரியின் மகனே இத் திருக்கண்ணன் எனக் கூறுவாரும் உளர்.

காவிரிபாய்ந்து வளங் கொழிக்கும் சோழவள நாடு, பங்காளிப்போரால் பாழடைந்துவிட்டது; நல்ல அரசை இழந்து விட்டது அந்நாடு; அந்நாட்டு அரியணைக்கு வர வேண்டியவனோ மிகவும் இளைஞன்; அவன் தாயத்தார், அவனையும் அழித்தொழிக்கத் திட்டமிட்டனர்; அஃதறிந்த அவ்வரசிளங்குமரன், தங்கள் குலத்தின்பால் குன்றாத அன்புடையவரும், தங்களுக்குத் துயர் வந்தபோதெல்லாம் துணைபுரிவோரும் ஆகிய மலையமன்னர்கள்பால் வந்து அடைக்கலம் புகுந்தான். அப்போது அந் நாடாண்டிருந்தான் திருக்கண்ணன். அவன் தந்தையும், அப்போதுதான் இறந்துவிட்டான்; ஆகவே, தானே முன்வந்து, தன் தந்தை தோழன், சோழர் குல இளவரசனுக்குத் துணை

தன் முள்ளூர் மலையிடத்தே வைத்துக் கேடொன்றும் உண்டாகா வண்ணம் காத்தான்; இறுதியில், அவன் பகைவரையும் அழித்து அவனைச் சோணாட்டிற்கு அரசனாக்கி, அரசிழந்து அல்லலுற்றுக் கிடந்த அந்நாட்டு மக்கள் துயரையும் துடைத்தான்.

திருக்கண்ணன் தோன்றி, மேற்கொண்ட தொண்டின் சிறப்பினைக் கண்டு வியந்தாருள், மாறோக்கத்து நப்பசலையாரும் ஒருவர்; அவன் பெருமைகண்டு இறும்பூதுற்ற அவர், "கொடிய கோடைகாலம்; அக்கோடையும் குறுகியதாகாது, நீண்டுசெல்கிறது; கோடைக் கொடுமையால், மலைகள் வெப்பம் தாழாது வெடித்துப் பொடியாகின்றன. காடுகள் எல்லாம் தீப்பற்றி எரிகின்றன. நிறைந்திருந்த நீர்நிலைகள் பலவும், நீர்முற்றும் வற்றிப்போக, உலர்கின்றன. இந்நிலையில் நீளுகிறது கோடை. இக்கோடையின் கொடுமை கண்டு கண்கலங்குகின்றனர் மக்கள். ஒருநாள், திடீரென, வானம் இருண்டு, இடியும், மின்னலும் கலந்து, மண்ணும் பிளந்து போமாறு பெருமழை பெய்யத் தொடங்கி விட்டது. மக்கள் மனத்துயர் மாய்ந்தது. மகிழ்ச்சி பொங்கிற்று." இக்காட்சியைக் கண்முன்னே காட்டி, கோடையின் கொடுமை போன்றது திருக்கண்ணன் தந்தை மறைவு; பெருமழைபெய்ததுபோல் வந்து நின்றான் திருக்கண்ணன் என்று கூறிப் பாராட்டினார்.

"அரசிழந்திருந்த அல்லற் காலை,
முரசெழுந் திரங்கும் முற்றமொடு, கரைபொருது
இரங்குபுனல் நெரிதரும் மிகு பெருங் காவிரி
மல்லல் நன்னாட்டு அல்லல் தீரப்
பொய்யா நாவின், கபிலன் பாடிய
மையணி நெடுவரை யாங்கண், ஒய்யெனச்
செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி இருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடைகாட்டி, அக்குடை

புதுமையின் நிறுத்த புகழ்மேம் படுந!
விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூண்
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தன னாகலின்,
ஆறுகொல் மருங்கின், மாதிரம் துழவும்,
கவலை நெஞ்சத்து அவலம் தீர,
நீதோன் றினையே நிரைத்தார் அண்ணல்
கல்கண் பொடியக், கானம் வெம்ப,
மல்குநீர் வரைப்பின் கயம்பல உணங்கக்
கோடை நீடிய பைதறு காலை
இருநிலம் நெளிய ஈண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந் தாங்கே."

(புறம்: கஎஎ)

## ௬௯. மல்லிகிழான் காரியாதி

காரி என்றபெயர், தமிழ்நூல்களில் பல்வேறிடங்களில், பல்வேறு தொடர்புகளில் ஆளப்பட்டுளது. காரியாறு, ஓர் ஆறு; காரிநாடு, ஒரு நாடு; காரிக்குதிரை, ஒரு குதிரை; மலையமான் திருமுடிக்காரி, ஒருவள்ளல்; காரிகிழார், ஒருபுலவர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த காரி என்ற சொல்லைத் தன்பெயரின் ஒருபகுதியாகக் கொண்ட ஒருவன், வீரனும், வள்ளலுமாய், மல்லி என்ற ஊரில் வாழ்ந்திருந்தான்; அவன் முழுப்பெயர், மல்லிகிழான் காரியாதி. அவனைப் பாராட்டிய பாடலில், குடநாடு, குறிப்பிடப்படுவது கொண்டு, அவனுக்குரிய நாடு, குடநாடு என்பர் சிலர்; காரியாதிக்குரிய மல்லிநாடு, இப்போதுள்ள சீவில்லி புத்தூரைச் சூழ உள்ள நாடாம்; சீவில்லிபுத்தூர்க் கோயிற் கல்வெட்டுக்கள், சீவில்லிபுத்தூரை, மல்லி நாட்டுச் சீவில்லிபுத்தூர் என்றே குறிப்பிடுகின்றன எனினும், மல்லிநாட்டுப் புத்தூர் எனும் சொல்லே, மல்லிபுத்தூர் எனவும், பிற்காலத்தே வில்லிபுத்தூர் எனவும் மருவியது என்று கூறுவாரும் உளர்.

காரியாதிக்குரிய மல்லிநாடு, சிறியபல அரண்களை நெருங்கக் கொண்டிருப்பது ஆதலின், அந்நாட்டுள் அவனுக்கு வேண்டியோரும் போர் ஒழிந்து அமைதி நிலவும் காலத்திலேயே நுழைதல் இயலும்; போர்க்காலத்திலோ, எங்கும் திரியும் திங்களும், அங்கு நுழைதல் இயலாது; அத்துணைச் சிறந்த காவல் அமைந்தது, அந்நாடு; அந்நாட்டுத் தலைவனாய காரியாதி, குடநாட்டு மறவர் கொன்று கொணர்ந்த எய்ப்பன்றியின் கறி விரவிச் செய்த வெண்சோற்றினை, விடியற்காலையில், பனையோலையால் முடைந்து செய்யப் பெற்ற உண்கலத்தில் இட்டு வருவார் அனைவர்க்கும் வழங்கி மகிழ்விப்பன். காரியாதியின் இக்கொடைச் சிறப்பினைக் கண்டு களித்த ஆவூர் மூலங்கிழார், "உள்ளன்புடன் உவந்தீயும் காரியாதியின் கொடைப் பொருளாம் இச்

யானைப் பரிசில் நனி மிகச் சிறிதாம்" என்று கூறிச் சிறப்பித்துள்ளார். இவ்வாறு வேந்தரும் நாணவழங்கும் வள்ளலாய் வாழ்ந்த வான் புகழ் உடையான் மல்லி நகர்க் காரியாதி:

"ஒளிறுவாள் மன்னர் ஒண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாள் திரங்கிப்
பாடிப் பெற்ற பொன்னணி யானை,
தமர் எனின் யாவரும் புகுப; அமர் எனின்
திங்களும் நுழையா எந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி இருந்த
குறும்பல் குறும்பில் ததும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டறல் நல்யாற்று எக்கர் ஏறிக்
கருங்கனி நாவல் இருந்து கொய்துண்ணும்
பெரும்பெயர் ஆதி பிணங்கரிற் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
இரும்பனம் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே."

(புறம்: கஎஎ)

# உ௦. மிஞிலி

கொண்கான நாடாண்ட நன்னன், தன் படைச் செருக்கால் பெற்ற பகைவர் பல்லோருள் ஒருவன் மிஞிலி. மிஞிலி, "வாய்மொழி மிஞிலி", "நெடுந்தேர் மிஞிலி" "ஒன்னார் ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை அடுபோர் மிஞிலி", "இகலடு கற்பின் மிஞிலி", "வில்லோர் பெருமகன், பூந்தோள் யாப்பின் மிஞிலி" என்றெல்லாம் அழைக்கப்படுதலை நோக்கின், அவன், உரைத்த வஞ்சினம் வழுவாது முடிக்கும் வன்மையுடையவன், பகைவர்தம் பேரரண்களையும் பாழாக்க வல்ல பெரும்படையுடையவன், வில்லேந்திய வீரர்களைப் பெற்றவன், நெடிய தேர்ப்படையுடையவன், கவசம் பெற்றுக் காவல்கொண்ட மார்பும் தோளும் உடையவன் என்று புலனுதல் அறிக. நன்னன் தனக்குரிய பாழிநகரில் ஈட்டி வைத்த பெரும்பொருள், அப் பாழியைப் பற்றி ஆளவேண்டும் என்ற பேராசை அரசர்கள் உள்ளத்தே எழுதற்குக் காரணமாய் இருந்தது. அவ்வாறு ஆசைகொண்டு, அப் பாழி மீது போர்தொடுத்தாருள் மிஞிலியும் ஒருவன்.

மிஞிலி, பெரிய படையோடு சென்று, பாழியை வளைத்துக் கொண்டவழி, மிஞிலியொடு போரிட நன்னன் வந்தான் அல்லன். நன்னன் பாழிக்குப் பகைவரால் கேடு வரின் யாதுசெய்வேன் என வருந்தியக்கால், "அஞ்சற்க! யான் வந்து காப்பன் பாழியை" என்று உரைத்திருந்த, நன்னன் ஆருயிர் நண்பன், வாகைப் பெருந்துறைக்குரிய வேள், ஆஅய் எயினன் வந்து எதிர்த்தான் மிஞிலியை. ஆய் எயினன், பேராற்றல் உடையவன்; அகுதை என்பானை வென்று கொன்ற வீறுடையான்; ஆகவே, அவனை வெல்ல வேண்டுமாயின், தன் படைத்துணையோடு, பேய்கள் போலும் கடவுளரின் பெருந்துணையும் வேண்டும் என்பதறிந்தான் மிஞிலி. உடனே, அப்பாழி நகர்க்கண் இருந்த பேயைப் பரவி, "எயினனைக் கொன்று வென்று

என வேண்டி வணங்கி, வாளேந்திக் களம் புகுந்தான்.

நன்னனுக்குத் தான் உரைத்த உரைபிழையா வண்ணம் வந்து உதவிய ஆய் எயினனும், தன் ஆற்றல் எலாம் காட்டி அரும்போர் ஆற்றினன். களமெலாம் சிவப்பேறக் கடும்போர் நிகழ்ந்தது. இறுதியில் எயினன் இறந்து வீழ்ந்தான். நன்னனுக்குரிய பாரம் என்ற ஊரைத் தனதாக்கிக் கொண்டு பாழியைவிட்டுப் போயினன் மிஞிலி. மிஞிலி வரலாறாக அறியத்தக்கன இத்துணையவே. இவன் வரலாறு உணரத் துணைபுரிந்தவர் பரணர்.

மிஞிலி, "வாய்மொழி மிஞிலி" என ஓரிடத்தே வழங்கப்பெறுதல் கண்டு, அவன், வாய்மை வழுவாதாராய கோசர் குலத்தவனாவன் எனக் கூறுவர் சிலர். வாய்மொழி என்ற அடையினைக் கோசர்க்கேயல்லால், வேறு பலருக்கும் வழங்கியுள்ளனர் புலவர்கள். ஆதலின், அவன், வாய்மொழி என்ற அடையடுத்து வழங்கப்பெறுவது ஒன்றையே கொண்டு, மிஞிலியைக் கோசன் எனக்கோடல் பொருந்தாது.

"நன்னன் பாழி,
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்கு
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி,
புள்ளிற்கு ஏம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை எயினற் கொன்றுவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு."

"கடும் பரிக்குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டென."

"ஒன்னார்
ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற்கு உடைஇ
முருகுஉறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் ; மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில், புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தென."

"பொலம்பூண் நன்னன் புன்றுடு கடிந்தென
யாழிசை மறுகின் பாழி ஆங்கண்
அஞ்சல் என்ற ஆஅய் எயினன்
இகல்அடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது"
(அகம் : கசஉ ; கசஅ ; கஅக ; உ0அ ; ௩கூசு)

"வீளை அம்பின் வில்லோர் பெருமகன்
பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும் பாரம்."
(நற் : உசுரு)

## ௨௧. முசுண்டை

வீரர்களாய், வள்ளல்களாய் வாழ்ந்தார் பண்டைத் தமிழகத்தில் பலராவர்; அன்னுருள் முசுண்டை என்பானும் ஒருவன். வேம்பி நகர்க்கண் வாழ்ந்த முசுண்டை, வெல்லவல்ல வேற்படையும் பெற்றிருந்தான். அவன் தன்னைப் பாடிவரும் பாணர் முதலாம் பரிசிலர்க்கு, அக்கால வள்ளல்கள் எவரும் வழங்கிக்காணு வளம்பல அளிப்பன்; வளர்ந்து ஆடும் அழகிய திமிலைக்கொண்ட காளைகளைக் கொணர்ந்து, அவற்றின் கோடுகளுக்குப் பொற்பூண் செறித்துப், பொன்னரி மாலையைக் கழுத்தில் சூட்டி முன்னே அளித்து, அறுசுவை உணவினை ஆர உண்பித்துப் பின்னர்க் களிறும் தேரும் கொடுத்து மகிழும் மனவளம் உடையனாய் வாழ்ந்து மாண்புற்றவன் முசுண்டை. வாழ்க முசுண்டை! விளைக வேம்பி! வளர்க அவன் கொடை!

"வள்வார்
விசிபிணித்து யாத்த அரிகோல் தெண்கிணை
இன்குரல் அகவுநர் இரப்பின், நாடொறும்
பொன் கோட்டுச் செறித்துப் பொலந்தார் பூட்டிச்
சாந்தம் புதைத்த ஏந்து துளங்கு எழில்இமில்
ஏறுமுந் துறுத்துச் சால்பதம் குவைஇ
நெடுந்தேர் களிற்றொடு சுரக்கும், கொடும்பூண்
பல்வேல் முசுண்டை வேம்பி." (அகம் : ௨௪௯)

# ௨௨. மூவன்

விரைந்து பொருள் தாராமை கண்டு, பெருந்தலைச் சாத்தனரால் வருந்திப் பாடப்பெற்றருள் ஒருவன் மூவன். நெய்தல் நிலத்தைச் சார்ந்த மருதவளம் நிறைந்த நாடுடையான் அவன்; அவன் நாட்டில், பொய்கைக்கண் மீன் தேர்ந்துண்ட நாரைகள், அப்பொய்கைக் கரைக்கண் கிடக்கும் நெற் போரிடத்தே துயில் கொள்ளும்; இடையிடையே நெய்தல் மணக்கும் நெல்விளை கழனிகளில் தொழிலாற்றும் உழவர், ஆம்பலின் அகன்ற இலையில் மது வுண்டு மகிழ்ந்து, கடலின் அலையொலிக்கேற்பப் பாடி ஆடுவர். மூவன், இத்தகு வளநாடு பெற்றிருந்தும், பரிசில் வேண்டி வருவார்க்குவழங்கி வாழும் வளம் அறியானயினன்; வளஞ்சால் பெருநாடுடையான் மூவன் என அறிந்த புலவர் பெருந்தலைச் சாத்தனர், அவன்பால் பரிசில் பெறுவான் வேண்டி, அவனூர் சென்று அவனைப் பாராட்டினர்; புலவர் தம் பெருமையறியும் பீடிலானய மூவன், அவர்க்குப் பரிசில் அளியானயினன்; அது கண்டு வருந்திய புலவர், தம் உள்ள வருத்தத்தால், மூவனுக்கு உறுதுயர் உண்டாதலும் கூடும் என அஞ்சி, அவன், தன்னல் துயரடைதல் கூடாது என்ற பெரும் பேரெண்ண முடையராய், அவன் நோயற்ற நல்வாழ்வில் நெடிது வாழ வாழ்த்திச் சென்றர்.

"பொய்கை நாரை போர்வில் சேக்கும்;
நெய்தலங் கழனி நெல்லரி தொழுவர்,
கூம்புவிடு மென்பிணி அவிழ்ந்த ஆம்பல்
அகலடை அரியல் மாந்தித் தெண்கடல்
படுதிரை இன்சீர்ப் பாணி தூங்கும்
மென்புல வைப்பின் நன்னட்டுப் பொருந!"

"நசைதர வந்து நின்இசை நுவல் பரிசிலேன்
வறுவியேன் பெயர்கோ; வாள்மேம் படுந!
ஈயா யாயினும், இரங்குவே னல்லேன் ·

பொறையன் எனப் பெயர் பூண்ட சேரனொருவன் காலத்தே ஒரு மூவன் வாழ்ந்திருந்தான்; அம்மூவன் சேர நாட்டரசியலுக்கு அழிவுதரும் செயல் புரிந்து வாழ்ந்தான்; அதனால், அவன்பால் பெருஞ்சினமுற்ற பொறையன், அவனை வென்று, அவன் பல்லைப் பறித்துக்கொணர்ந்து, தன் தொண்டிநகர் வாயிற் கதவில் வைத்துப் பொறித்தான் என்று கூறுகிறார் பொய்கையார். மூவன் எனும் பெயருடையார் இருவர் பண்புகளும் ஒத்துள்ளன ஆதலாலும், இருவர் வாழ்ந்த நாடும் நெய்தல் நிலமாகவே காணப்படுதலாலும், இருவரையும் ஒருவராகவே கோடல் பொருந்தும்:

"மூவன், முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலம் தொண்டிப் பொருநன்." (நற்: கஅ)

# உ௩. வல்லங்கிழவன்

சோணாட்டு வளம் செறிந்த ஊர்களுள் வல்லமும் ஒன்று. வல்லம், நெல்வளம் நிறைந்தது. வல்லத்தின் இன்றியமையாமை அறிந்த சோழர், அவ்வூரைச்சூழக் காவற்காட்டை எழுப்பினர்; வேலேந்திய வீரர் இருந்து காக்கும் சிற்றரண்களை ஆங்காங்கே அமைத்தனர்; அம்பும் தோலும் உடையராய்ச் சோழர் குலச் சிற்றரசர் பலர், அந்நகர்க்காவலை மேற்கொண்டிருந்தனர்; இவ்வாறு பற்றற் கரிய பேரரண் உடையதாய் அமைந்த அந்நகர்க்காவல் தலைமையை மேற்கொண்டிருந்த பேராண்மை உடையான் வல்லங்கிழவன். அறனொடு இயன்ற ஆட்சி மேற்கொண் டிருந்தான் அவன்; எல்லோர்க்கும் நல்லோனாய் நாடாண் டிருந்தான்; அவன் அத்துணை நல்லனாகவும், அந்நாட்டு வளம், அவ்வூரைப்பற்றி ஆளவேண்டும் என்ற ஆசையை அரசர் பலர்க்கும் உண்டாக்கிற்று. அவ்வாறு ஆசை கொண்ட ஆரியர் சிலர், பெரும்படையோடு வந்து, வல்லத்தை வளைத்துப் போரிட்டனர்; அவ்வாறு வந்து தாக்கிய அவ் வாரியப்படை யனைத்தும் அடியோடு அழியு மாறு வென்று துரத்தி வெற்றி பெற்றான் வல்லங்கிழவன்.

"நற்றேர்க்
கடும் பகட்டு யானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்
நல்லடி உள்ளா னாகவும், ஒன்னார்
கதுவ முயறலும் முயல்ப."

"வென்வேல்
மாரி அம்பின் மழைத்தோல் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைக." (அகம்: கஙசு ; ௩௩௬)

## ௨௪. வல்லார்கிழான் பண்ணன்

வல்லார் என்றோர் ஊர் உண்டு; வன்புலம் சூழ விளங்கிய அவ்வூர், கடத்தற்கரிய காவற்காட்டையும், போர்பல கண்டு புலால் நாறும் அம்பேந்திய வீரர் நின்று காக்கும் அரிய அரண்களையும் உடையது; அவ்வூர் மன்றம், விளா மரங்கள் பல தழைத்துக் காய்த்துக் கனிந்து கிடப்பதால் மாண்புற்றது; முற்றிக் கனிந்து விழும் விளாங் கனிகளை, அவ்வூரகத்து மறவர்மக்களும், அவ்வூரை அடுத்துள்ள காட்டகத்துக் களிற்றின் கன்றுகளும் கலந்து எடுத்துண்ணும் கவின் உடையது; அவ்வூரை உரிமைகொண்டு வாழ்ந்த உரவோன் பண்ணன் எனும் பெயருடையனவன்; வாட்போர் வல்லனுய அவன், பகைவரை அழித்துப் பெறும் பொருளையெல்லாம் தன்னைப்பாடிவரும் பரிசிலர்க்கே அளிக்கும் அருள் உள்ளம் உடையனுவன்; பண்ணன் வாழ் வல்லாரின் வனப்பும், அவன் வாட்போர் வன்மையும் விளங்கப் பாடிய சோணுட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் எனும் புலவர், "பாண! வல்லார் எனும் ஊரின் கண்ணே பண்ணன் என்பானொரு பெருவள்ளல் உளன்; வறுமையால் வருந்தும் நின்சுற்றம் உண்டு, உவந்து வாழ்தலை வேண்டுவையாயின், பண்ணன் பகைப்புலம் நோக்கிப் போதற்கு முன்னரே, பசிப்பகையாய பரிசிலைப் பெறுதற்கு இன்னே அவன்பாற் செல்வாயாக" எனப்பாடி, அவன் வள்ளன்மையினையும் வாயாரப் பாராட்டியுள்ளார் :

"மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்கண் எயிற்றி காதல் மகனொடு
கான இரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்
பெருங்குறும் புடுத்த வன்புல இருக்கைப்
புலாஅ அம்பின் போருங் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாள் பண்ணன்:
உண்ணு வறுங்கடம்பு உய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீரே; சென்று அவன்
பகைப்புலம் படரா அளவை நின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே."

(புறம்: ௧௮௧)

## உரு. வாணன்

பெருநிலக்கிழார்களாய்ப் புலவர் போற்ற வாழ்ந்தாருள் வாணனும் ஒருவன். வாணன், சிறுகுடி எனும் ஊரில் வாழ்ந்த வற்றாப் பெருஞ்செல்வ முடையான். சிறுகுடி எனும் பெயருடைய ஊர்கள் இரண்டுள. ஒன்று பண்ணனுக்குரியது; சோணாட்டில் காவிரியின் வடகரைக்கண் உள்ளது. வாணன் சிறுகுடி, பாண்டி நாட்டில் உள்ளது. வாணன் சிறுகுடியும், பண்ணன் சிறுகுடியேபோல் பெருவளங் கொண்டது. வாணன் சிறுகுடி, நெய்தல் நிலத்தைச் சார்ந்த மருத நிலத்து ஊராகும். அவ்வூரில், பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரால் அமைந்த பெரிய நீர்நிலை ஒன்று உண்டு. அஃது, அவ்வூரைச் சூழவுள்ள நன்செய்களுக்காம் நீரைத் தேக்கிவைக்கும் நற்பணிகுறித்து நாடாண்ட பாண்டியரால் எடுக்கப்பட்டது. அந்நீர்நிலை, மடையெடுத்துக் கொண்டக்கால், வாய்க்காலுள் வந்து புகும் வாளை மீன்கள், அவ்வாய்க்கால் வழியோடி, வயலுட்புகுந்து, ஆண்டு, நிலத்தை உழுது செல்லும் நெடிய எருதுகளின் காற்கீழ் ஓடி, உழவர், கோல்கொண்டு அடிக்கவும் அஞ்சாது திரிந்து, இறுதியில், உழுத படைச்சாலுள் கிடந்து புரளும் எனின், சிறுகுடி நீர்வளம் எத்துணைப்பெரிது என்பது புலனாம். ஆண்டு, வெண்ணெல் அரிவார் எழுப்பும் தண்ணுமையொலி, தாமரைபூத்த தடங்களில் வாழும் பறவைகளை அச்சுறுத்தி ஓட்டும். தைந்நோன்பு மேற்கொண்ட மகளிர், அந்நோன்பின் இறுதி நாளன்று, தம் வண்டற் பாவைகளை, உண்ணு நீர்த்துறைக்கண் போட்டுப் போந்து, குரவையாடி மகிழ்தற்கேற்ற கடற்கரைச் சோலைகளையும் கொண்டது அச்சிறுகுடி. இத்தகு வளம் கொண்ட ஊரை உடையான் வாணன் என்பதல்லால், இவன் வரலாறாக வேறு தெரிந்திலது.

"கடுந்தேர்ச் செழியன்,
படைமான் பெருங்குளம் மடைநீர் விட்டெனக்
கால் அணைந்து எதிரிய கணைக்கோட்டு வாளை,
அள்ளலம் கழனி உள்வா யோடிப்,

செஞ்சால் உழவர் கோற்புடை மதிரிப்
பைங்காற் செறுவின் அணைமுதற் புரளும்
வாணன் சிறுகுடி." (நற்: ங௪0)

"வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்
காய்நெற் படப்பை வாணன் சிறுகுடி."
(அகம்: உ0௪)

"தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
.............................................
வண்டற் பாவை உண்டுறைத் தரீஇத்
திருநுதல் மகளிர் குரவை அயரும்
பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை
வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணை." (அகம். உ௬௯)

மதுரைக்காஞ்சி பாடிப், பாண்டியன்நெடுஞ்செழியனைப் பாராட்டிய புலவர் மாங்குடிகிழார், வாணன் எனும் பெயருடையானொருவன் பெரும் பொருள் சேர்த்துவைத்துளான் எனக் கூறியுள்ளார் :

"தென்புல மருங்கின் வண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி." (மதுரைக்: உ0உ-ங)

இவ்வடிகட்கு உரையெழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர், "தென்திசை நிலத்தின் மலைகள் எல்லாம் நிறையும்படி வாணன் என்னும் சூரன் வைத்த சீரிய பொருட்டிரள்" என்று பொருள் கூறியுள்ளார். பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாராட்டிய நக்கீரரே, சிறுகுடியையும், ஆண்டுள்ள செழியன் பெயர்கொண்டு விளங்கும் நீர்நிலையையும், அச்சிறுகுடிக் குரியோனாய வாணனையும் பாராட்டியுள்ளமையானும், சிறுகுடி வாணனும் பெரும்பொருள் உடையனாகக் காணப்படுதலானும், மதுரைக் காஞ்சியாசிரியர் கூறுவது, சோணாட்டுச் சிறுகுடியை நோக்கத் தென்திசைக் கண்ணதாய பாண்டி நாட்டுச் சிறுகுடிக் குரியோனான வாணனையும், அவன் மலைபோல் சேர்த்துவைத்த மாநிதியையுமே எனக்

## ௨௯. விச்சிக்கோன்

விச்சி என்றொரு மலையுண்டு; அம்மலையைச் சூழ இருந்த நாடும், விச்சி எனும் அப்பெயரே கொண்டிருந்தது. மலையில் வளர்ந்த பலாவின் பழத்தைக் கவர்ந்து சென்றுண்ட கடுவன், தன் செம்முக மந்தியையும் உடனழைத்துக் கொண்டு, சேய்மைக்கண் நின்றார்க்கும் தோன்றுவதும், மழைமுகிலும் காணலாகா உயர்வுடையதுமாய மலைக்கண், வானுற வளர்ந்திருக்கும் மூங்கில் மீது ஏறித் துயில் கொள்ளும் வளம் உடையது அவ் விச்சிமலை. அவ் விச்சி நாடு, வணங்காத மன்னரையும் வணங்கவைக்கும் வளம்பல பெற்றது. இத்தகு வளநாடாண்ட அரசர் விச்சியர் என அழைக்கப் பட்டோராவர். சேர, சோழ, பாண்டியராய பேரரசர்களையும் வெல்லவல்ல படைவளம் உடையவர் அவ்விச்சியர்; விச்சியர், அவ் வேந்தரை வென்று, தம் ஊராகிய குறும்பூரில் வெற்றிவிழாக் கொண்டாடிய காட்சியைக் கண்டு பாராட்டியுள்ளார் பரணர். மூவேந்தரை வென்ற வீறுடையராய் விளங்கிய விச்சியர், ஒரு காலத்தே, இளஞ்சேரல் இரும்பொறைக்குத் தோற்றனர் எனப் பதிற்றுப்பத்துப் பதிகம் கூறுகிறது.

இவ்வாறு வளம்நிறைந்த நாடும், வன்மை நிறைந்த படையும் உடைய விச்சியர் குடியில் வந்தோனே இவ்விச்சிக்கோ. வாட்போர் வல்லவன்; வாளேந்திக் களம் புகுந்தால், பணியாத மன்னரும் பணிந்து நிற்பர். வணங்கித் திறைகொடா மன்னரை வாழவிடான் அவன். விச்சிக்கோவுக்கு, இளவல் ஒருவன் இருந்தான். இளவிச்சிக்கோ என அழைக்கப்பெறும் அவன், கடையெழு வள்ளல்களுள் ஒருவனாய கண்டீரக்கோப் பெருநள்ளியின் தம்பியோடு நட்புடைய நல்லோனாவன்.

விச்சிக்கோ, இவ்வாறு நாட்டவர் போற்றும் நல்லோனாய் வாழ்ந்தனன் எனினும், அவன் பிறந்தகுடி அத்துணைப் பெருமையுடைய கன்

னன் வழிவந்த பழியுடையது அவன்குடி; தம்மலை நோக்கி வந்து வாழ்த்தி நின்ற புலவரை வணங்கி வரவேற்று வேண்டுவ அளித்து அனுப்பாது, அவர்க்கு வாயில் அடைத்தான் ஒருவன் வாழ்ந்த வழுக்குடையது அவன்குடி. இப்பழியுடைமையால், இவன் உடன் பிறந்தான், புலவர் ஒருவரால் புறக்கணிக்கவும் பெற்றுளான். அவனும், அவன் நண்பன், இளங்கண்டீரக்கோவும் ஒருங்கிருக்க வந்த புலவர் பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக் கோவை மட்டும் அன்பொழுகத் தழுவி விட்டு, இளவிச்சிக் கோவைத் தழுவாதே சென்றார்.

பிறந்தகுடி பழியுடையதே எனினும், அக் குடியிற் பிறந்த இவர்கள் பழியுடையா ரல்லர். குணத்தாலும், கொடையாலும், கொற்றத்தாலும் சிறந்து விளங்கினன் விச்சிக்கோ. பாரி இறந்தானாக, அவன் மகளிர்க்கு மணஞ்செய்துவைக்கும் பணியேற்றுக் கொண்ட கபிலர், அம்மகளிரையும் அழைத்துக்கொண்டு, விச்சிக்கோன் அவைக்கு வந்துசேர்ந்தார்; பாரிமகளிரை மணந்துகொள்ளும் மாண்புடையான் அவன் என்று எண்ணினார் கபிலர்; உடனே, அவனை அடுத்து, "விச்சியர்கோவே! இம் மங்கையர் இருவரும், முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளியோன் மகளிர்; யான் ஒருபரிசிலன்; மேலும் ஓர் அந்தணன்; கேட்கவும், கொடுக்கவும் உரிமை உடையேன்; இவரை மணந்து கொள்ளத்தக்க மாண்புடையான் நீ ஆகவே இவர்களை யான் தர, ஏற்று மணந்து மகிழ்ந்து வாழ்க!" என்று வேண்டினார்; ஆனால், பேரரசர் மூவர்க்கும் பகைவனாய பாரியின் மகளிரை மணந்தால், அம் மூவேந்தர் பகைப்பர் என அஞ்சியோ, அம் மகளிரின் சீரழிந்த செல்வநிலை கண்டு நாணியோ, அவரை மணக்க மறுத்து விட்டான்.

"வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக் குறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே."

"இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ."
(பதிற்று: பதிகம்: ௫)

"பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரல் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!
நிணந்தின் று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்
களங்கொண்டு கனலும் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக்கோவே!
இவரே, பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி மகளிர்;
யானே, பரிசிலன்; மன்னும் அந்தணன்; நீயே
வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்;
நினக்குயான் கொடுப்பக் கொண்மதி; சினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே."
(புறம்: ௨00)

## ௨௭. விரான்

நீர்வளமும், நிலவளமும் நிறைந்த மருதநிலத்து ஊர்களுள், இருப்பை என்பதும் ஒன்று. வெண்ணெற் கதிர்களைத் தின்று, அந்நிலங்களை அடுத்து வளர்ந்திருக்கும் மருதமரங்களைத் தம் வாழிடமாக் கொண்டு வாழும் பறவைக்கூட்டம், விளைந்த நெல்லை அறுக்கப் புகும் மள்ளர், ஆண்டு எழுப்பும் பறையோசைக்கு அஞ்சி, எழுந்து நால்வேறு திக்கினும் பறந்தோடும்; திடும் என எழுவதால், அவை அமர்ந்திருந்த அம் மரத்துக் கிளையாட, மருதமரப் பூக்கள், வயலிடத்தே பரக்கும். இத்தகு இயற்கைக் காட்சிகளால் கவின்நிறைந்த அவ்விருப்பையூர்க் கண், மலைபோல் உயர்ந்த வெண்ணெற் போர்கள் காணுமிடந்தோறும் கிடந்து, கண்ணிற்கு விருந்தளிக்கும். இத்தகு பெருவளம் நிறைந்த பேரூரை உரிமையாக் கொண்ட பேறுடையான் விரான். விரான், தன் வளம் கண்டு, வஞ்சம் கொண்டு, படையொடு வருவாரைப் பாழாக்கவல்ல பெருவலியும், தன்னையும், தன் நாட்டையும் வாழ்த்தி வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மையும் ஒருங்கே உடைய உயர்ந்தோனவன். புதுக் கோட்டையைச் சார்ந்த விராலிமலை இவன் மலையாகவும், அம் மலையைச் சார்ந்த இருப்பையூர் இவன் இருப்பையாகவும் கூடும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்
பழனப் பல்புள் இரியக் கழனி
வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்
தேர்வண் விராஅன் இருப்பை."

"முனையெழத்
தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலிபுனல் வாயில் இருப்பை." (நற்: ௩௫0; ௨௬0)

"விண்டுவன்ன வெண்ணெற் போர்வின்

# உஅ. வெளிமான்

குமணன் கோலோச்சியிருந்த காலத்தே, அவனோடொத்த வள்ளலாய் வாழ்ந்திருந்தான் வெளிமான்; வெளிமான், வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளலாய் வாழ்ந்திருந்தவன். தன் உடல் தளர்ந்து உயிரிழக்கப் போகும் அந்நிலையிலும், தன்னை உள்ளி வருவார்க்குத் தன்பால் உள்ளனவற்றை உவந்தீயும் உயர்வுள்ளம் உடையவன் வெளிமான். வெளிமானுக்கு ஓர் இளவல் இருந்தான்; இளவெளிமான் என அழைக்கப்பெறும் அவன், வெளிமானைப்போல் அத்துணைச் சிறந்தவனல்லன்.

கோடையால் வெம்மையுற்று வருந்திவருவார்க்குக் கொழு நிழலால் குளிர்வூட்டும் பெருமரம்போல், வறுமைத் துயர் வாட்ட வருந்திவருவார்க்கு வாரிவழங்குவன் வெளிமான் என்பதறிந்து அவனைப் பாடிப் பரிசில் பெற வந்திருந்தார் புலவர் பெருஞ்சித்திரனார்; வந்த புலவர் வெளிமானைக் கண்டார்; அக்காலை வெளிமான் உடல்நலம் கெட்டு, உயிர் போகுநிலை எய்திவிட்டான்; அந்நிலையிலும், புலவரை அருகழைத்து, அவர் பாடக்கேட்டு இன்புற்றான்; தம்பியை அழைத்து, புலவர்க்கு, அவர் வேண்டும் பொருளெலாம் அளித்து அனுப்புக எனப் பணித்தான்; ஆனால், அந்தோ! அவன் அப்பொருள் அளிக்க, அதைப் பெற்ற புலவர் மகிழ்ந்து நிற்கும் அவர் முகம்நோக்கி மகிழும் அவ்வின்பநிலையை இழந்துவிட்டான்; இறந்துவிட்டான் வெளிமான்; ஆக்கிவைத்த பானையின்றும் சோறின்றி எரி புறப்பட்டாற் போலாயிற்று புலவர்க்கு. கடலிடையே செல்லும் கலமொன்று, மாரிக்காலத்து நள்ளிரவில் கவிழ்ந்துவிட்டதாக, அக் கப்பலில் இருந்த, காணவும், பேசவும் மாட்டாக் கண்ணற்ற ஊமையொருவன், கடலில் வீழ்ந்து கலங்குவது போல் கலங்கினார்; அவ்வாறு வருந்தி

தன் மறைவு கேட்ட புலவரெல்லாம், இவ்வாறுவருந்தி வாட வள்ளலாய் வாழ்ந்து, வாழ்விழந்த விழுமியோன் வெளிமான் :

"நீடுவாழ் கென்றியான் நெடுங்கடை குறுகிப்
பாடிநின்ற பசிநாட் கண்ணே,
கோடைக்காலத்துக் கொழுநிழலாகிப்
பொய்த்த லறியா உரவோன் செவிமுதல்
வித்தியபனுவல், விளைந்தன்று நன்றென
நச்சி யிருந்த நசைபழு தாக,
அட்ட குழிசி அழல்பயந் தாஅங்கு
...................................................
வெள்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே"

"மாரி இரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஒராங்குக்
கண்ணில் ஊமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்து
அவல மறுசுழி மறுகலின்
தவலே நன்றுமன்; தகுதியும் அதுவே"

(புறம்: உ௩எ; உ௩அ)

## உகூ. வேங்கை மார்பன்

வேங்கைமார்பன், உக்கிரப் பெருவழுதி எனும் பாண்டியன் உலகாண்டிருந்த காலத்தே, பாண்டி நாட்டின் நடுவே இன்று காளையார்கோயில் என வழங்கு மிடத்தே அரிய அரண் அமைத்து வாழ்ந்திருந்த ஒரு பெருவீரன். வேங்கைமார்பன் என்ற பெயருடைமையான், இவன் ஊக்கமும், உரனும் ஒருங்கே உடையனவன் என்பது புலனும்; அவன் அமைத்து வாழ்ந்த அரண், பகைவர் பற்ற லாகாப் பேரரண் வாய்ந்தது, நிலத்தின் அடி எல்லையையும் கண்டதோ என எண்ணலாம் ஆழம்பொருந்திய அகழியினை யும், வானையும் தீண்டிற்றோ என எண்ணலாம் உயர்வுடைய மதில்களையும், ஒளிக்கதிர் சிறிதும் உட்புகலாகாவாறு அடர்ந்த காவற்காட்டினையும் கொண்ட அப் பேரரண், வீரர்பலர் ஆங்காங்கே யிருந்து காக்கும் சிற்றரண் பலவற் றைச் சூழப்பெற்ற அருமையினையும் உடைத்து; வேங்கை மார்பன், இத்தகு பேரெயிற்கு உரிமையுடையனாய் வாழ லைப் பொறாத உக்கிரப்பெருவழுதி, அவனையும் வென்று, அவ்வரணையும் கைப்பற்றத் துணிந்து விட்டான்; பாண் டியர் பெரும்படை, பற்றற்கரிய அப் பேரரணைப் பற்றிக் கொண்டது; மாற்றார் கைப்பட்டு மாண்பிழந்த தன் அரணை, எவ்வாற்றானும் மீளக் கைக்கோடல் வேண்டும் எனப் பலகால் முயன்றான் வேங்கைமார்பன்; ஆனால் அந்தோ தோல்வியே கண்டான்; இறுதியில், உக்கிரப் பெருவழுதியோ பேரரசர் வழிவந்தவன்; பெரும்படைத் துணையுடையான்; அவனை வென்று தன் அரணைப்பெறுதல் அரிதினும் அரிதாம்; சிவக்கக் காய்ந்த இரும்புண்ட நீரை மீண்டும் பெறல் இயலாததுபோல், பாண்டியன் பற்றிக் கொண்ட தன் அரணை மீளப் பெறுதலும் இயலாதாம் என உணர்ந்து, உறுதுயருற்று உளம் வருந்தி வாழ்ந்தான்.

“..............................................

கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்,
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய

# பின்னிணைப்பு

## க. கொங்கர்

பண்டு, தமிழ் நாட்டில் பிறந்தும், வளர்ந்தும் பேராண்மை மிக்க வீரராய்ப், பெருங்கொடை வள்ளல் களாய்ப் பெருக வாழ்ந்தும், பேரரசராய்க், குறுநிலமன்ன ராய் நெடிது நின்று ஆண்டும் வாழ்ந்தோர் பலர் தம் வர லாறுகளை விளங்கும் வகையான் வகுத்துரைத்தல் ஒருவாறு முடிந்தது. இவர் தம் வரலாறு உணரத் துணைபுரிந்த அத் தமிழ் நூல்களே, கொங்கர், கோசர், தொண்டையர், பூழியர், மழவர், வடுகர், வேளிர் போலும் மறவர்குல மக்கள் சிலர் தம் வரலாறுகளையும் உரைத்துள்ளன. தமிழ கத்தின் அன்றைய அரசியல் நிலைக்கு, அன்னார் வாழ்வும், பெரிதும் காரணமாமாதலின், அவர் குறித்து, அத் தமிழ் நூல்கள் அறிவிப்பனவற்றை மட்டும் தொகுத்துரைத் தலும், தமிழகத்தின் அக்கால அரசியல் நிலையினை அறிய விரும்புவார்க்குப் பெருந்துணைபுரிவதாகும். ஆகவே, அரசர் வரலாறு உரைக்கும் இந்நூலின் இறுதிக்கண், அவர் வரலாற்றினை ஓரளவு உணர்த்த எண்ணினேன்.

சேரர் பேரரசு நிலவியநாடு, பொதுவாகச் சேரநாடு என்ற பெயரான் அழைக்கப் பெறுமாயினும், அது, பிரி வில்லாப் பெருநாடாக என்றும் விளங்கியதில்லை; சில பல உள் நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெருநாடாகவே, அது திகழ்ந்து வந்துளது. அத்தகைய உள் நாடுகளுள், கொங்குநாடும் ஒன்று. கோவைமாவட்டமும், சேலம் மாவட்டத்தின் தென்பகுதியும் கொண்டநாடே, பண்டு, கொங்குநாடு என அழைக்கப் பெற்றது. கொங்கர் என்ற ஓரினத்தார் வாழ்ந்தமையால், அந் நாடு, அப் பெயர் பெற்றது; கொங்கராவார், சேரர், சோழர், பாண்டியர் களைப் போன்றே, தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு மறவர் மரபினராவர்; மறவர் மரபில் வந்த அக் கொங்கர், ஆனிரை போற்றும் அருந்தொழில் மேற்கொண்டு வாழ்ந்து வந்

மேட்டு நிலமாதலின், ஆனிரையோம்பும் அக் கொங்கர், அவ்வானிரைகட்கு நீரளித்து ஓம்புவான் வேண்டி, ஆழ்ந்த பல கிணறுகளை, ஆங்காங்கே தோண்டிவைப்பர்; கொங்கர் சிலர், தம் ஆனிரைகளை மேயவிடும் இடங்கட்கு, அவை ஆண்டுச் செல்வதன் முன்னர்ச் சென்று, உடன் கொணர்ந்த கணிச்சி முதலாம் படைகளின் துணைகொண்டு, தீப்பொறி சிதறுமாறு கற்களைப் பையப்பைய உடைத்தெறிந்து கிணறுகளைத் தோண்டுவர்; அவ்வாறு தோண்டிய அக் கிணறுகள் தாமும், பெருக நீர்சுரவா; நீர் சிறிதே சுரத்தலின், அந்நீரை முகக்கக், கொங்கர் பெரும்பெரும் முகவைகளைக் கொள்ளார்; மிக்க ஆழத்தில், சிறிதே ஊறிக் கிடக்கும் அந்நீரை, நீண்ட கயிறுகளில் சிறு முகவைகளைக் கட்டி முகப்பர்; நீர் வேட்கை மிக்க அவர் ஆனிரைகள், உண்ணும் நீர் வேட்கை உந்த, செந்தூள் பரக்க விரைந்தோடிச் சென்று, அவ்வாறு முகந்துபெறும் அச்சின்னீரைப், பலவும் ஒன்று கூடி மொய்த்து நிற்கும். இவ்வாறு, தம் ஆனிரைகளை அரிதின் முயன்று போற்றும் அக் கொங்கர்தம் அருள் உள்ளங்கண்டு பாராட்டியுள்ளனர் புலவர் பலர்:

"தோட்பதன் அமைத்த கருங்கை ஆடவர்
கனைபொறி பிறப்ப நூறி வினைப்படர்ந்து
கல்லுறுத்து இயற்றிய வல் உவர்ப் படுவில்,
பாருடை மருங்கின் ஊறல் மண்டிய,
வன்புலம் துமியப் போகிக் கொங்கர்
படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந்நிலக் குரூஉத்துகள்
அகலிரு விசும்பின் ஊன்றித் தோன்றும்." (அகம்: எக)

"சேண்பரல் முரம்பின் ஈர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்னபல் செலவு." (பதிற்று: எஎ)

"பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்

ஆனிரை ஓம்பும் அருளுள்ளம் உடையராய கொங்கர், கொற்றம் மிக்க வெற்றி வீரராகவும் விளங்கினர். வாட்போர்வல்ல வீரராதலோடு, பகைவர்தம் பேரரண்களைப் பாழ்படுத்துமாறு, பெரும்பெருங் கற்களைத் தாமே எறியவல்ல கல்கால்கவணை எனும் பொறிகளைச் செல்லும் இடந்தோறும் உடன்கொண்டு செல்லும் போர் அறிவும் உடையராவர் அக் கொங்கர்; "ஒளிறுவாட் கொங்கர்" (குறுந் ௩௯௩), "ஆரெயில் அலைத்த கல்கால் கவணை, நாரரி நறவின் கொங்கர்" (பதிற்று: அஅ), எனப் புலவர்கள் கூறுவன அறிக.

இவ்வாறு, ஆனிரைச் செல்வமும், ஆற்றற்பெருமையும் கொண்ட கொங்கர் வாழும் நாடு, சேரநாட்டின் கிழக்கெல்லைக்கண்ணும், சோழநாட்டின் மேற்கெல்லைக் கண்ணும், பாண்டியநாட்டின் வடமேற்கு எல்லைக் கண்ணும் இருந்தமையால், அந் நாடுகளை ஆண்டிருந்த தமிழ்வேந்தர் மூவரும், அக் கொங்கரை வென்று, அவர் நாட்டினை அகப்படுத்திக் கொள்ளும் ஆர்வமிக்கவராயினர்.

பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் மகனும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் உடன்பிறந்தோனுமாய பல்யானைச் செல்கெழுகுட்டுவன், ஒரு நாட்டை யடுத்துள்ள நிலங்களை வீரர் வழிவந்தார் சிலர் வாழ்விடமாக் கொண்டு வாழவிடல், அந் நாட்டிற்குக் கேடாம் எனும் உண்மையுணர்ந்த உரவோனாதலின், அவன், அக் கொங்கரை வென்று, அவர் நாட்டைத் தன்னாட்டோடிணைத்துக் கொண்டான். அன்றுமுதல், அக்கொங்கு நாடு, சேரநாட்டின் ஒருபகுதியாகவே கருதப்பெறலாயிற்று; சேரவேந்தர்களும், கொங்கு நாட்டுக் கோவேந்தர் எனும் குறி பெறுவாராயினர். பல் யானைச் செல்கெழுகுட்டுவனுக்குப் பிற்பட்டோனாய இளஞ்சேரல் இரும்பொறை, "கொங்கர்கோ" என அழைக்கப் பெறுவானாயினன்.

"ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த

அவ்வாறே கொங்கரையும் அழித்து, கணையனையும் சிறைப் பிடித்துச் சென்றான்.

"கொற்றச் சோழர், கொங்கர்ப் பணீஇயா.
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்ன." (நற் : க0)

"நன்னன், எற்றை, நறும்பூண் அத்தி
துன்னரும் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பரும் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனானாகித் திண்தேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலம் கண்ணிப் பெரும்பூட் சென்னி." (அகம் : சச)

"கவளங்கொள் யானையின் கை துணிக்கப் பட்டுப்
பவளம் சொரிதரு பைபோல்—திவள்ஒளிய
ஒண்செங் குருதி உமிழும் புனல்நாடன்
கொங்கரை அட்ட களத்து." (களவழி நாற்பது : கச)

கொங்கரால், தன் அரச வாழ்விற்கே அழிவுண் டாமோ என அஞ்சினான் பாண்டியன்; பசும்பூண் பாண்டியன் என அழைக்கப்பெறும் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன். அதனால், அவரை, அவர் நாட்டினின்றே துரத்தத் துணிந்தான்; உடனே, அவர் நாட்டை யடுத்துள்ள மலையகத்து ஊர் ஒன்றில் வாழ்ந்து வந்த அதியன் எனும் தன் படைத்தலைவனை அக்கொங் கரை வென்றுவருமாறு போக்கினான்; பாண்டியன் பணி மேற்கொண்ட அதியனும், கொங்குநாடு புகுந்து, அக் கொங்கரைவென்று, அவர் நாட்டைக் கைப்பற்றி மீண்டான்; இவ்வாறு கொங்கரை வென்ற பாண்டியர் படைத்தலைவன், பிற்காலத்தே, வாகையெனும் இடத்தே நடந்த போரில் உயிர் துறந்தான்; தம்மை வென்று விரட் டிய அதியன் அழிவுற்றான் எனக்கேட்ட கொங்கர்,

"கொங்கர் ஓட்டி,
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்." (அகம் : உ௫௩)

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதியன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே." (குறுந்:௩௯௩)

கொங்கரின் படைவன்மை கண்டு அஞ்சினார், பேரரசர் மூவர் மட்டுமே யல்லர்; பேரரசர்க்கு அடங்கியும், அடங்காதும் அரசோச்சி வந்த குறுநில மன்னர் சிலரும், அக் கொங்கர் ஆற்றல்கண்டு அஞ்சினர்; அன்னாருள் ஒருவனாய ஆய் அண்டிரன், அக்கொங்கரை வென்றதோடமையாது, அவர், வேற்படை முதலாம் தம் எண்ணற்ற படைக்கலங்களைக், களத்தே போட்டுவிட்டு, மேலைக்கடல் நோக்கி ஓடி ஒளியுமாறு துரத்தியும் அழித்தான்.

"கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே." (புறம் : க௩0)

இவ்வாறு, தமிழ் நாடாண்ட பேரரசர் பலரும் கண்டு அஞ்சுமாறு, ஆண்மையும், ஆனிரைச்செல்வமும் அளவிறந்தன பெற்று வாழ்ந்த கொங்கர், இறுதியில் சேர இனத்தோடு சேர்ந்தோராகக் கருதப் பட்டனரேனும், அவர் வாழ்ந்த நாடு, கொங்குநாடு என அவர் பெயரானேயே இன்றும் அழைக்கப் பெறுகிறது. அந்நாட்டில் வாழ்ந்த அரசர்களும், கொங்குவேளிர், கொங்குதேசராசாக்கள் எனப் பிரித்தே அழைக்கப் பெற்றுள்ளனர். கொங்கர், கொங்கர் கொங்குவேளிர், கொங்குதேச ராசாக்கள் என, யாண்டும் பன்மையில் வழங்கப் பெற்றுள்ளனரேயல்லால், அவருள் எவரும் ஒருமையில் வழங்கப் பெற்றாரல்லர்.

## உ. கோசர்

"என் ஆட்சிக்கு அடிபணியாது என் அரசோ டொப்ப அரசோச்சிய பெருமை வாய்ந்த பேரரசுகள்" என மௌரியப் பேரரசன் அசோகனால் சிறப்பித்துக் கூறப்பெற்ற தென்னிந்திய அரச இனங்கள் நான்கனுள் சத்யபுத்ரர் இனமும் ஒன்று; இச் சத்யபுத்ரரே கோசராவர் என வரலாற்று நூலாசிரியர் பலரும் கருதுவர்; "நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயாகின்று" (குறுந் : கரு) எனவும், "வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை வளங்கெழு கோசர்" (அகம் : உ0ரு) எனவும், கோசர், வாய்மொழி வழுவாதவர் எனச் சங்க நூல்களில் அறிவிக்கப் பட்டுள்ளமையால் போலும், அவர்கள் சத்யபுத்ரர் என அழைக்கப் படலாயினர்.

கோசர்க்குரிய நாடு, துளுநாடு என்று பழந்தமிழ் இலக்கியம் பகருகிறது. மங்களூரை நடுவிடமாக் கொண்ட, துளுமொழி வழங்கும் நாடே துளுநாடாம் என்றும், கேரளநாட்டிற்கும், துளுநாட்டிற்கும் எல்லையாகச் சந்திர கிரி அமைந்துளது என்றும், அந்நாடே அசோகனால் சத்ய புத்ரர் என அழைக்கப்பெற்ற கோசர் நாடாம் என்றும் வரலாற்று நூலாசிரியர் பலரும் கூறுவர். கோசர், "கொங் கிளங் கோசர்" (சிலம்பு : உரைபெறு கட்டுரை) என்றும் அழைக்கப் பெறுவதால், கோசர் ஆட்சி, கொங்கர் நாட்டிலும் பரவியிருந்தது எனத் தெரிகிறது.

"மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாடு." (அகம் : கரு)

துளுநாட்டைத் தாயகமாக் கொண்டு வாழ்ந்த கோசர், காலம் செல்லச் செல்லத், தாயகத்தின் நீங்கிக் கிழக்கு நோக்கிச்சென்று வாழலாயினர் என்பதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன;

ஒன்று; செல்லீ எனவும் வழங்கப்பெறும் அவ்வூரில் இருந்து அரசாண்டவன் ஆதனெழினி என்பான்; அச் செல்லூர்க்குக் கீழ்ப்பால், கடலொலி ஓயா நியமம் எனும் ஊரே, கோசர்க்கு உரிய ஊர்; அக் கோசர், போரிற்பெற்ற வீரப் புண்ணுலாய வடுநிறை முகத்தினராய விழுமியோராவர்; நியமத்தில் வாழ்ந்த அக் கோசர்வழிவந்த இளங் கோசர் பலர் ஒன்றுகூடி, கடலாடு மகளிர் கொய்துதந்த புலிநகக் கொன்றைப்பினையும், கழனி உழவர் பறித்துப் போட்ட குவளையினையும், காவற்காட்டில் மலர்ந்த முல்லையொடு கலந்து கட்டிய கண்ணியணிந்து சென்று, செல்லூரை அடுத்துள்ள இடத்தே ஆடி மகிழ்வர்; கோசர் வாழும் அந்நியமத்தைச் சூழ்ந்தநாடு, தேன் துளிர்க்கும் நெய்தல் மணக்கும் நன்செய் உடைமையால் நிறைவளம் பெற்றது என அப்பாக்கள் அறிவிக்கின்றன.

"செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி, யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம்." (அகம் : ௯0)

"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி உழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்விக் கோமான்
எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி." (அகம் : உகசு)

"கோசர்,
இளங்கள் கமழும் நெய்தலம் செறுவின்
வளங்கெழு நன்னாடு." (அகம் : ககங)

நாடோடி வாழ்வினராய், மேலைக்கடலைச் சார்ந்த தம் துளுநாடு முதல், கீழ்க்கடலைச் சார்ந்த நியமம் வரை

கினர். உழவுத்தொழிலைத் தமக்கு உரிய தொழிலாக மேற்கொண்டனர்; காட்டை அழித்துப் பண்படுத்தி, உழுது பயறு விளைத்திருந்தனர்; அந்நிலத்தில், ஒருநாள் அன்னி மிஞிலி என்பாளுடைய தந்தைமேய்த்து வந்த பசு புகுந்து மேய்ந்துவிட்டது; அஃதறிந்த கோசர், பெருஞ்சினங் கொண்டு, அவள் தந்தை கண்களை அழித்துச் சிறுமை செய்தனர்; கோசர் கொடுஞ்செயல் கண்டு சினங்கொண்ட அன்னி மிஞிலி, "என் தந்தையின் கண்களைப் போக்கிய கோசரை அழித்துப் பழி வாங்காமுன், கலத்தும் உண்ணேன்; தூய ஆடையும் உடேன்" என வஞ்சினம் உரைத்து, அக் கோசரை அழிக்க வல்லோன், அழுந்தூர்க்குடையோனாய திதியனே என்பதறிந்து, அவன்பாற் சென்று தன் குறையுரைத்தாள்; திதியன், அவள் பொருட்டு அக் கோசரை வென்று, அத் தவறுக்குக் காரணமாயிருந்தாரைக் கொன்றான்; அதுகண்டு சினம்மாறி அகமகிழ்ந்தாள் அன்னி மிஞிலி.

"முதைபடு பசுங்காட்டு அரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆடுவினைக் கலித்துப்
பாசிலை அமன்ற பயறு ஆபுக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்
கலத்தும் உண்ணாள்; வாலிதும் உடாஅள்;
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்;
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னி மிஞிலி." (அகம்: உகஉ)

" தந்தை
கண்கவின் அழித்ததன் தப்பல் தெறுவர
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று முரண்போகிய

வேளிர்பலர் பெரும் பொருள் சேர்த்து வைத்துப் பாதுகாத்து வரும் பாழி நகர்க்கு உரியோனும், தன் தோட்டத்துப் புனல் தந்த பசுங்காய் ஒன்றைத் தின்ற தன் தப்பிற்காக ஒரு பெண்ணைக் கொலைபுரிந்த கொடுமை யுடையோனுமாய நன்னனொடு பகைகொண்டிருந்தனர் கோசர்; அதனால், அவன் காவல்மரமாகிய மாமரத்தை வெட்டித் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றதோடு அமை யாது, அந் நன்னனுக்குரிய பாழிப் பறந்தலையில், அவன் நண்பன் மிஞிலி என்பானொடு போரிட்டு, வெளியன் வேண் மான் ஆஅய் எயினன் என்பான் இறந்தானாக, அதுகண்டு ஆற்றாது அழுத அவன் உரிமை மகளிர் துயரைப் போக் கினமையால், அந் நன்னன் பகையினை ஏற்றுக்கொண்ட அகுதை என்பானை, அந் நன்னன் அழிக்காவாறு காவல் செறிந்த இடத்தே வைத்தும் காத்தனர் கோசர்.

“ நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர்.” (குறுந் : எங)

“ அஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்.” (அகம் : ககங)

தம்மொடு பகைப்பார் அனைவரையும் அழிப்பதையே தொழிலாகக் கொண்ட கோசர், இறுதியில், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படை யாளராகிப் பணிபுரிவாராயினர்; பாண்டியர் படையில் பணி யாற்றும் கோசர்க்கு, மோகூர்க்குரியோனும், பழையன் என அழைக்கப் பெறுவோனுமாய மாறன் என்பான் படைத்தலைவனாய் விளங்கினான்; பழையன் மாறன், பாண் டியர் படைத்தலைவனாய், கோசர் பெரும்படையோடு, பாண்டியர் தலைநகராம் கூடன்மாநகரைக் காத்திருந்த காலை, வெள்ளம்போல் பரந்த பெரும்படையுடைய கிள்ளி வளவன், கோசர்படையைக் கொன்று, கூடல்நகரைக் கைக்கொள்வான் எண்ணிக் கூடலை வளைத்துநின்று பெரும் போர்புரியத் தொடங்கினான்.

தன் களிற்றுப்படையோடும் புறம்போந்து, கிள்ளிவள வனை வளைத்துப் போரிட்டான்; பாண்டியர் பெரும்படையை எதிர்த்துநிற்கும் ஆற்றல் இழந்து தோற்றுன்; கிள்ளிக்குரிய களிறுகளையும், குதிரைகளையும் கணக்கில கைப்பற்றிக் கொண்டான் கோசர் படைத்தலைவன் பழையன்; அம் மட்டோடு அமையாது, பாண்டிநாட்டை அடுத்துள்ள அக் கிள்ளிக்குரிய நல்ல ஊர்கள் பலவற்றையும், சோழன் பகைவன் சேரன் சிரிக்குமாறு, கைப்பற்றிக் கொண்டான்;

"பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும் பெயர் மாறன் தலைவனுகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயல்நெறி மரபின்நின் வாய்மொழி கேட்ப."

(மதுரைக் காஞ்சி : எஎக-௪)

"........கோசர் விளங்கு படை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி."

(அகம் : உ0௬)

"பழையன் மாறன்
மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே."

(அகம் : ௩௪௬)

பாண்டியர் தலைநகர்க்குச் சோழ வேந்தன் ஒருவனுல் வரவிருந்த கேட்டினைப் போக்கிக் காத்த கோசர்படை, வட நாட்டுப் பேரரசன் படை யொன்றால், தமிழகத்திற்கு நேர இருந்த பெருங்கேட்டையும் போக்கிக் காத்தனர் கோசர். வட நாட்டுப் பேரரசுகளுள், மௌரியப் பேரரசும் ஒன்று; அப் பேரரசர் படையொன்று, தமிழகத்தைத் தன்

யிற்று. அவ்வாறு வந்த பெரும் படைக்குத் தமிழகத்தின் வட எல்லையை அடுத்து வாழ்ந்த வடுகர் என்பார் துணை புரிந்தனர்; வடுகர் துணையும் பெற்று வந்த அப் பெரும் படை, வழியில், தம் நெடிய தேர்ப்படை செல்லாவாறு நின்று தடுத்த மலைகளையெல்லாம் உடைத்து வழி செய்து கொண்டு வந்தது. வந்த பெரும்படை பழையனுக்குரிய மோகூரை வளைத்துப் போரிட்டது; பழையனை வென்றாலல்லது, பாண்டிநாடு முதலாம் பேரரசுகளை வீழ்த்தல் இயலாது என அறிந்த அப் படை பேராற்றல் காட்டிப் போரிட்டது; அக்காலைத் தன் ஊர்க்கண் தங்கியிருந்த பழையன் மாறன், அப்படையின் ஆற்றல்களைச் சிறுகச்சிறுக அழித்துக் கொண்டே, மோகூர்க் கோட்டையுள் அடங்கியிருந்தான்; ஆயினும், மோரியர் பெரும்படையைக் கோசர் படைத்துணையின்றி அழித்தல் பழையனால் இயலாது என அறிந்தான், பாண்டியன்; உடனே, தன்கீழ்ப் பணிபுரியும் கோசர் படையை மோகூர் நோக்கிப் போகவிட்டான்; தங்கள் படைத்தலைவனையும், தமிழகத்தையும் ஒருங்கே காக்கும் ஒப்பற்ற பணிமேற் கொண்டு மோகூர் வந்த கோசர்படை, தேர்ப்படையோடு கூடிய மோரியர்தம் பெரும்படையை வென்று துரத்திற்று; மோரியர் முன்னி வந்தது முடியாது போயிற்று; தமிழகத்திற்கு நேரஇருந்த தாழ்வினைத் தடுத்துப் போக்கினர் கோசர் :

"பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன."
(மதுரைக் காஞ்சி ; ருoஅ-க)

"வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

நன்னன் போராற்றலேயும், வெள்ளம்போற் பரந்த பெரும்படையுடையனுய கிள்ளிவளவனேயும், வடுகர் முன்னுற வந்தெதிர்க்கும் மோரியர்தம் தேர்ப்படையையும் பாழாக்கவல்ல போராற்றலுடையராய கோசர், அப்போராற்றலேப் பேணிக் காத்தற்பொருட்டு, இடைவிடாப் போர்ப் பயிற்சி மேற்கொண்டிருப்பர்; கோசர் பெருவீரராய் விளங்கினர் என்பதை அறிவிக்கும் பழந்தமிழ்ப் பாக்களே, அவர்கள் போர்ப்பயிற்சி பெறும் முறையையும் விளங்கக் கூறுகின்றன; படைக்கலம் பயிலும் இளங்கோசர் பலர் கூடிச் சென்று, தம் பயிற்சிக்குத் துணேயாக, முருக்க மரத்தான் இயன்ற இலக்கு அமைத்து, அதன்மீது தம் படைக்கலங்களேப் பலகாலும் எறிந்து எறிந்து பயிற்சி பெறுவர் என்ற செய்தியைக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனுர் அறிவித்துள்ளார் :

"வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகலிலே முருக்கின்
பெருமரக் கம்பம்." (புறம்: கசுக)

கோசர் வரலாறு குறித்துப் பழந்தமிழ்ப் பாக்கள் கூறுவன இத்துணேயவே. இவர் வரலாருகப் பிறவும், பிறரும் கூறுவன நுணுகி ஆராய்தற்குரிய தொன்றும்.

## ௩. தொண்டையர்

"சான்றோர் உடைத்து" என்ற சீர்சால் சிறப்பினையுடையது தொண்டை நாடு. அப் பெயர் பெறுதற்குக் காரணமாயவர் தொண்டையர்; செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துள், அருவா, அருவாவடதலை ஆய இருநாடுகளையும், வேங்கடமலையையும் உள்ளடக்கிய நாடாய்ப் பண்டு நிலவியதே, இத்தொண்டையர் வாழ்வால், தொண்டைநாடு எனப் பின்னர் வழங்கப்பெற்றது. தொண்டையர், வேங்கடமலையைச் சார்ந்துள்ள நாட்டினைக் காஞ்சியிலிருந்து ஆண்டு வந்தவராவர்; வேங்கடமலையில் வேட்டையாடிப் பெற்ற யானைகளால் ஆய பெரிய படையுடையவர்; அக் களிற்றுப் படையோடு, வளம் மிக்க தேர்ப்படையும் உடையராதலின், பகையரசர் நாடுகளை வென்று அடிப்படுத்து, ஆண்டுப்பெற்ற பயன் கொண்டு வாழும் விழுமிய வாழ்வுடையவர்; பகைவர்தம் பேராண்களை அழித்து, ஆங்கு வாழ் அப்பகையரசர்தம் முடிகளைக் கைப்பற்றி வெற்றிப் புகழ் கொள்வதை விடுத்து, பகைவர் பணிந்து திறைதரமுன் வருவராயினும் பகைதணிந்து போதலை விரும்பா வீரமுடையோராவர் :

"வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்,
இனமழை தவழும் ஏற்றரும் நெடுங்கோட்டு
ஓங்கு வெள்ளருவி வேங்கடம்." (அகம் : உ௧௩)

"பொருவார்
மண்ணெடுத் துண்ணும், அண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர்." (குறுந் : உ௬0)

"பகைவர்
கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றியல்லது, வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா, உரவுவாள் தடக்கைக்

காலத்தால் கரிகாலனுக்குப் பிற்பட்டோன் எனக் கருதப்பட்ட குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிய புலவர் தாயங்கண்ணனார், தொண்டையோரைப் பற்றிக் கூறியுள்ளார்; தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டிய காரணத்தால் கரிகாற் பெருவளத்தானுக்குப் பிற்பட்டோராகத் தோன்றும் கல்லாடரும் அத்தொண்டையோரைத் தம் குறுந்தொகைப் பாட்டொன்றில் குறிப்பிட்டுள்ளார்; அதியமான் பொருட்டுத் தொண்டைமானுழைத் தூதுசென்ற ஔவையார், பாணருக்குப் பிற்பட்ட காரணத்தால், அவரும் கரிகாற் பெருவளத்தான் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவரே; வேங்கட மலையையும், அதைச் சூழவுள்ள நாட்டையும் ஆண்டுவந்த திரையனையும், அவனுக்குரிய ஊர்களுள் ஒன்றாய பவத்திரியையும் அகப்பாட்டொன்றில் அமைத்துப் பாராட்டிய காட்டூர்கிழார் மகனார் கண்ணனாரும், "செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்" எனத் திரையனைப் பாடிய நக்கீரரும், கரிகாற் பெருவளத்தானுக்குப் பிற்பட்டோரேயாவர்; ஆக, இவ்வாறு, தொண்டையர் என்ற மரபினரையும், அம்மரபில் வந்தோராய தொண்டைமான், திரையன் என்பாரையும் பாராட்டிய புலவரெல்லாம், கரிகாற்பெருவளத்தான் காலத்திற்குப் பிற்பட்டோராகவே தோன்றலின், அத்தொண்டையர் மரபு, தமிழ்நாட்டில் தோன்றியது, அக் கரிகாலனுக்குப் பின்னரே எனக் கொள்க.

## ௯. பூழியர்

செந்தமிழ் நிலஞ் சேர் பன்னிரு நிலங்களுள் பூழி நாடும் ஒன்று. "பூழி நாட்டார், சிறுகுளத்தைப் பாழி என்ப" என உரையாசிரியர்கள் கூறுவர்; கொங்கரைப் போன்றே, பூழியரும் ஆனிரைம்பிவாழும் வாழ்வினராவர். ஆயர், நல்லினத்து ஆயர், புல்லினத்து ஆயர், கோட்டினத்து ஆயர் எனும், பிரிவுடையாராவர்; ஆக்களையும், ஆனேறுகளையும், மேய்ப்பார் நல்லினத்தாயராவர்; ஆடுகளை மேய்ப்பவர் புல்லினத்தாயராவர்; எருமைகளையுடையார் கோட்டினத்தாயராவர். இவருள் பூழிநாட்டார் நல்லினத்தாயரும், புல்லினத்தாயருமாவர்: "பூழியர், சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன" (குறுந்: ௧௬௩) எனவும், "பூழியர் உருவத் துருவின் நாண்மேய லாரும்" (நற்: ௧௯௨) எனவும் அவர் ஆடு மேய்க்கும் தொழிலும், "புல்லுடைய வியன் புலம் பல்லா பரப்பிக், கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம், மிதியல் செருப்பின் பூழியர்" (பதிற்று: ௨௧) என அவர் மாடு மேய்க்கும் தொழிலும் புலவராற் பாராட்டப் பெறுதல் காண்க. பூழியர், ஆடு, மாடு மேய்க்கும் அத்தொழிலோடு அமைவாரல்லர்; தம் ஆடு மாடுகளைப் புல்நிறை நிலந்தேடி மேய விடுத்து, அக் காட்டில் கற்களின் இடையிடையே கலந்து சிதறிக்கிடக்கும், விலையுயர்ந்த ஒளி வீசும் மாணிக்கங்களைத் தேடித்திரட்டும் பயன் மிகு தொழிலும் மேற்கொண்டிருந்தனர்; அம்மட்டோ! காட்டில் வாழ் யானைகளைப்பற்றிக் கொணர்ந்து பழக்கும் பொருள்நிறை தொழிலும் அறிந்திருந்தனர்.

"கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியல் செருப்பின் பூழியர்." (பதிற்று: ௨௧)

"பூழியர்
கயம் நாடு யானையின் முகன் அமர்ந்து."
(அகம்: ௬)

கொங்கர்க்குரிய கொங்குநாடு.

இருந்து உயர்வுற்றது. பல்யானைச்செல்கெழு குட்டுவன் "பூழியர் கோவே!" (பதிற்று : உக) எனவும், "செல்வக் கடுங்கோ வாழியாதன் பூழியர் பெருமகன்" (புறம்: ருஅஎ) எனவும்," தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பூழியர் மெய்ம்மறை" (பதிற்று: எரு) எனவும், இளஞ் சேரல் இரும்பொறை "பூழியர்கோவே பொலந்தேர்ப் பொறைய" (பதிற்று: அச) எனவும், பூழியர் மெய்ம் மறை" (பதிற்று : கூ0) எனவும் புலவர் பெருமக்களாற் பெயரிட்டுப் பாராட்டப்பெறுதல் காண்க.

இவ்வாறு பண்டுதொட்டே சேரர்க்குரியதாய்ச் சிறப் புற்ற பூழிநாடு, இடையில் சிலநாள், அவர் பகைவர் கைப் பட்டுப் பாழுற்றது; களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் எனும் சேரவேந்தன் நனி இளையனாய் இருந்த காலத்தே, சேரர்க்குரிய பூழிநாட்டைச் சேரர் பகைவனாய நன்னன் என்பான் கவர்ந்துகொண்டான்; நார்முடிச் சேரல் அரி யணை ஏறியதும், நன்னன் ஆண்டிருந்த அப் பூழிநாட்டின் மீது படை யெடுத்துச்சென்று, கடம்பின் பெருவாயில், வாகைப்பெருந்துறை என்னும் இடங்களில், அந் நன்ன னோடு கடும்போர் ஆற்றி, அவன் காவல் மரமாம் வாகை மரத்தினை வெட்டி வீழ்த்தி, அவனையும் வென்று, அவன் பண்டு கவர்ந்துகொண்ட தன் பூழிநாட்டையும் பெற்று மீண்டான்.

"பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள் பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச்செருவி னாற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து."
(பதிற்று : பதிகம்: ச)

"இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

## ரு. மழவர்

சோழர் பேரரசின் தலைநகர்களுள் ஒன்றாய உறையூர்க்கு மேற்கே, காவிரியாற்றிற்கு வடக்கே கொங்கு நாட்டை அடுத்திருந்த ஒரு சிறுநிலப் பகுதி மழநாடு எனவும், மழகொங்கம் எனவும் பெயர்கொண்டு நிலவியிருந்தது; அந் நாட்டில் வாழ்ந்த வீரர் மழவர் எனும் பெயருடையராவர்; மழவர், விரைந்து செல்லும் குதிரைப் படை உடையவர் எனக் கூறுவர் புலவர் மாமூலனார்:

"வண்டு படத் ததைந்த கண்ணி, ஒண்கழல்
உருவக் குதிரை மழவர்." (அகம்: க)

"கறுத்தோர்
தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்." (அகம்: கஅஎ)

மழவர், இவ்வாறு பகைவர் படைகளைப் பாழாக்க வல்ல பெரும்படை உடைமையால், தம் அண்டை நாடுகளுட் புகுந்து அந் நாட்டு ஆனிரைகளைக் கவர்ந்துவரும் களவுவாழ்க்கையினை விரும்பி மேற்கொண்டிருந்தனர்; செம்மறியாட்டுக் கிடாயின் கொம்பேபோல், சுருண்டு சுருண்டு, பிடரி மறையத் தொங்கும் தலைமயிரையும், சிவந்த கண்களையும் உடைய அம் மழவர், தம் காலில் இட்ட செருப்புக்கள் தேயச் சேணெடுந் தூரம் சென்று, தம்மை எதிர்ப்பாரை வாளால் வெட்டி வீழ்த்தியும், அம்பேவிக் கொன்றும் அழித்துவிட்டு அவர்தம் ஆனிரைகளைக் கவர்ந்து மீள்வர்; இடைவழியில், நெடுந்தூரம் நடந்து வருதலின், நடை ஓய்ந்து நின்றுவிட்ட கன்றுகளின் கண்ணீர் கண்டும் கலங்கார்; அவ்வாறு கவர்ந்து வந்த அவ்வானிரையுள் தாம் விரும்பும் கொழுத்த ஆவினை, தம் வழிபடு தெய்வத்தின் முன் நிறுத்திக் கொன்று, அதன் உதிரத்தைத் தூவிப் பலியிட்டு எஞ்சிய புலாலைப் புழுக்கி உண்பர்.

" வீளை யம்பின் விழுத்தொடை மழவர்
நாளா வுய்த்த நாம வெஞ் சுரத்து
நடை மெலிந் தொழிந்த சேட் படர் கன்றின்
கடைமணி உகுநீர்." (அகம்: கஙக)

" வயவாள் எறிந்து வில்லின் நீக்கிப்
பயநிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்புசேட் படுத்து வன்புலத்து உய்த்தெனத்
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பின்
கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வான்கண் அகலறை"

(அகம்: நூ0க)

நாடுகளுட் புகுந்து ஆனிரைகளை அகற்றிச் சென்று வாழும் அறமில்லா வாழ்வினராய மழவர், வழியிற் செல்வாரை வருத்தி அவர் கொண்டு செல்லும் பொருள்களைக் கவர்ந்துண்ணும் கொடுமையும் உடையராவர்; இவ்வாறு ஆறலைத்து வாழும் வேட்கையராய அம் மழவர், அவ்வேட்டம் குறித்துக் குடநாடு வரையிலும் செல்வர்.

" கல்லா மழவர் வில் இடம் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழி பெயர் தேஎம்." (அகம்: கஉஎ)

" கடுங்கண் மழவர் களவுழ வெழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காட்டு உம்பர்
..............................குடநாடு." (அகம்: கூக)

எனப் புலவர்கள் கூறுவன அறிக; மழவர் கொடுமை குறிக்கும் செயல் ஒன்றைக் கூறியுள்ளார் புலவர் பாலைபாடிய பெருங்கடுங்கோ. வருவாரை எதிர்நோக்கி இருந்தனர் மழவர்; அக்காலை, அரசவைதோறும் சென்று சென்று தூதுரைத்து மீளும் தொழிலுடையனை வறுமை நிறை பார்ப்பான் ஒருவன், ஓலைச் சுருளோடு அவ்வழி வந்தான்; அவனைக் கண்ட மழவர், வருவோன் வறுமையால் வாடி

கொண்டு அவனைக் கொன்று வீழ்த்தினர்; வீழ்ந்த அவன், பிறர் எவரும் உடுக்க எண்ணுவாறு கந்தையான ஆடையினையே அணிந்திருத்தல் கண்டு, அவன்பால் பொருளின்மை அறிந்து, அப் பார்ப்பான் குருதிபடிந்து கறைபட்ட தம் அம்போடு, அனைவரையும் அழைத்துக் கொண்டு அப்பாற் சென்றனர்; என்னே கொடுமை!

"தூது ஒய் பார்ப்பான் மடி வெள் ஓலை
படை யுடைக் கையர், வரு தொடர் நோக்கி
உண்ணு மருங்குல் இன்னோன் கையது
பொன்னு குதலும் உண்டு எனக் கொன்னே
தடிந்துடன் வீழ்த்த கடுங்கண் மழவர்,
திறனில் சிதாஅர் வறுமை நோக்கிச்
செங் கோ லம்பினர் கைந்நொடியாப் பெயர."

(அகம்: ௩௩௭)

இவ்வாறு, மழவர் வில்லேர் உழவினராய் வாழ்ந்தமையின், அவர்கள், தம் குலத்து இளைய வீரர்கட்கு விற்போர், வாட்போர் முதலாயினவற்றில் பயிற்சி அளித்து, அவ்வாறு பயின்று சிறந்தாரை அரங்கேற்றுவிக்கும் விழாவினை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடி வருவாராயினர்; அவ்வாறு அவர்கள் கொண்டாடிய விழா, பூந்தொடை விழா எனப் புலவர்களால் பாராட்டப் பெற்றுளது.

"மழவர்
பூந் தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்." (அகம்: ௧௮௭)

மழவர், இவ்வாறு வீரருட் சிறந்தாராய் விளங்குதல் கண்ட தமிழ் நாட்டு அரசர்கள், அவரைத் தம் படையுட் சேர்த்துப் பணிகொண்டு பெருமை யுற்றனர்; ஒரு சில அரசர், அவர்க்குப் புகலிடம் அளித்துப் புரத்தல் பொருந்தாது, அவரை அழித்து அடக்குதலே அறமாம் எனக் கொண்டனர்;

யோருமாவர்; பல்யானைச் செல்கெழுகுட்டுவன் அம் மழவரைப் பெற்று, "குவியற் கண்ணி மழவர் மெய்ம் மறை" (பதிற்று: உக) எனச் சிறப்பிக்கப் பெற்றான்; ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும், அவர் தொடர்புண்மையால், "செவ்வூன் தோன்றா வெண்துவை முதிரை, வாலூன் வல்சி மழவர் மெய்ம்மறை" (பதிற்று: நிரு) எனும் பாராட்டினைப் பெற்றான்; சேரர்குலத்தோடு தொடர்புடையனாய் அவர்க்குரிய பனந்தோடணியும் பேறுபெற்ற அதியமான் நெடுமான் அஞ்சி, அம் மழவர் படைத்துணைபெற்று "ஒளிறிலங்கு நெடுவேல் மழவர் பெருமகன்", "வழுவில் வன்கை மழவர் பெரும!" (புறம்: அஅ, கூ0); என்ற பெருமைக் குரியனாயினன்; சேரர்க்குரிய கொல்லி மலையைத் தன் மலையாக் கொண்டு வாழ்ந்த ஓரியும், அம் மழவர் படைத்துணை பெற்று "வெம் போர் மழவர் பெருமகன் மாவள் ஓரி" (நற்: நிஉ) எனப் புகழும் மாண்புடையனாயினான்; இவ்வாறு இந்நால்வரும், மழவரைப் போற்றினாராக, நெடு வேளாவி என்பானும், புல்லி என்பானும் அம் மழவரைப் பகைத்து வாழ்ந்தனர்; அவருள், பொதினி மலைக் குரியோனாய நெடு வேளாவி, முருகனைப்போல் அரும்போர் ஆற்றி, மழவர்தம் குதிரைப்படையினை ஓட்டி உயர் புகழ் பெற்றான்; அஃதறிந்த புலவர் மாமூலனார், "உருவக் குதிரை மழவர் ஓட்டிய, முருகன் நற்போர் நெடுவேள் ஆவி" (அகம்: க) எனப் போற்றிப்புகழ்ந்தனர்; ஆவி, அம் மழவரை வென்று துரத்தினான்; ஆனால் வேங்கடத்துக் குரிய புல்லியோ, அம் மழவரை, அவர் நாட்டிலேயே வென்று, அந் நாட்டைத் தனக்குப் பணிகொண்டான்; அதனால், அவனும் "கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான், மழபுலம் வணக்கிய மாவண் புல்லி" (அகம்: கூக) எனும் பாராட்டிற்குரியனாயினான்.

தம் படைவன்மை கொண்டு பேயாட்டம் ஆடிய மழவர் இறுதியில், அவரினும் வல்லாரால், நல்லோரால் நலிவெய்கினர்.

## சா. வடுகர்

வடுகர் தமிழகத்தைச் சேர்ந்தவரல்லர்; தமிழகத்தின் எல்லைக்கண் வாழ்ந்தவர்; பொருள் தேடிப் புறநாடு போகும் தமிழர், இவர் பண்பெலாம் உணர்ந்துள்ளனர். ஆகவே, அவர் குறித்தும் ஈண்டுக் கூறுதல் அமைவுடைத்தாம்; வடுகர் தேயம், புல்லி எனும் பெயருடையானாய கள்வர் குலத்தலைவன் இருந்து ஆளும் வேங்கடமலைக்கு அப்பால் உள்ளது; வேற்றுமொழி வழங்குவது; அந்நாட்டில், தமிழகத்து எல்லையை ஒட்டி அமைந்திருந்த நாடு, கட்டி என்பானுக்குரிய நல்லநாடு.

"இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்கு வெள்ளருவி வேங்கடத்தும்பர்
..........................................
வால் நிணப் புகவின் வடுகர் தேஎம்" (அகம் : ௨௧௩)

'புடையலம் கழற்கால் புல்லி குன்றத்து
நடையரும் கானம் விலங்கி, நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேஎம்." (அகம் : ௨௯௫)

'வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎம்." (குறுந் : ௧௧)

வடுகர், தமக்குத் துணையாக வன்மைமிக்க நாய்களை என்றும் உடன்கொண்டு திரிவர்; கடிய ஒலிக்கும் பம்பை எனும் பறையுடையர்; கள்ளுண்டு களிக்கும் கருத்துடையர்; காட்டில் மயில் கழித்துப்போட்ட தோகையை, வார் கொண்டு வலித்த தம் வில்லில் வைத்துக் கட்டி, வலிய அவ் வில்லின் நாணோசைக்கொப்ப, விரைந்து ஒலித்துப் பாயும்

"கடுங்குரல் பம்பைக் கதநாய் வடுகர்." (நற் : உகஉ)

"ஒல்கியல் மடமயில் ஒழித்த பீலி
வான் போழ் வல்வில் சுற்றி, நோன்சிலை
அவ்வார் விளிம்பிற்கு அமைந்த நொவ்வியல்
கணைகுரல் இசைக்கும் விரைசெலல் கடுங்கணை
முரண்மிகு வடுகர்." (அகம் : உஅக)

வடுகரும், அக்காலத்து ஏனைய மறவர்களைப் போன்றே, பகைவர் நாடுகளுட்புகுந்து, அந்நாட்டு ஆனிரைகளைக் கைப்பற்றி மீள்வர். நள்ளிருளில் சென்று, பசுநிரைகளைக் காத்து நிற்கும் படைவீரரை அழித்து, கன்றுகளோடு கூடிய அந்நாட்டு ஆனிரைகளைத் தம் நாட்டு மன்றுகள் நிறையுமாறு கொணர்ந்து நிறுத்துவர்.

"ஆரிருள் நடுநாள் ஏரா ஒய்யப்
பகைமுனை யறுத்துப் பல்லினம் சாஅய்க்
..............................................
துறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்தோள் வடுகர்." (அகம் : உகந)

இவ்வடுகர், தென்னாட்டைக், குறிப்பாகத் தமிழ் நாட்டை வெல்ல விரும்பிப் போந்த வட நாட்டாராய மோரியர்க்குப் படைத்துணை அளித்தனர்; தென்னாடு நோக்கிப் போகும் தம் தேர்ப்படையினை இடைநின்று தடுக்கும் மலைகளையெல்லாம் உடைத்து வழி செய்து கொண்டு வந்த அம் மோரியர்க்குத் தூசிப்படையாய் அமைந்தது இவ்வடுகர் பெரும் படையே; அவ்வாறுவந்த அவ்வடுகர் படை மோரியர் படையோடும் மோகூரில் அழிவுற்றது.

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்து

நன்னனுக்குரிய பாழிநகர், வேளிர், தம் திரண்ட பொருள்களையெல்லாம் சேர்த்து வைக்கும் சிறப்புடைத்தாதல் அறிந்த அக்கால அரசர் பலரும், அப் பாழி நகரைத் தம தாக்கிக் கொள்ளும் விருப்புடையராயினர்; அவ்வாசை, வடுகரையும் விட்டதன்று; அதனால், வடுகர் அப் பாழியைப் பற்றி ஆண்டு வந்தனர் சிலநாள்; ஆனால், அப் பாழியைப் பற்றி ஆள்வதைத் தம் குடிக்கடனாகக் கருதி வந்தனர் சோழர்; ஆனால், அக்கடன், இளம்பெருஞ் சென்னியின் காலம் வரை குறைவினையாகவே இருந்தது; அது காணப்பொறாத அவ்விளம் பெருஞ் சென்னி, அப்பாழியை எவ்வாற்றானும் கைப்பற்றிக் கொள்ளும் கருத்துடையனாயினன்; உடனே பெரும்படை கொண்டு பாழிநகரைத் தாக்கினான்; செம்பினை ஒத்த, பாழியின் அரணகத்து மதில் அழிந்தது; அக்காலை, அப் பாழி நகரை ஆண்டிருந்த வடுகரை, அவன் யானைப்படை அழித்தது; பாழியைப் பறிகொடுத்தனர் வடுகர்; இவ்வாறு அழிந்தது வடுகர் தம் தமிழக வாழ்வு.

"இளம் பெருஞ் சென்னி,
குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோடு." (அகம்: ௩௭௫)

# எ. வேளிர்

ஆய் அண்டிரன், பறம்புமலைப் பாரி, வையாவிக் கோப்பெரும் பேகன் முதலாய வள்ளல்களும், நெடுவேள் ஆவி, நீடூர்க் கிழவன் எவ்வி, நன்னன் வேண்மான், வெளியன் வேண்மான், பிடவூர் வேண்மான், நெடுவேளாதன், இளவிச்சிக்கோ, இருங்கோவேள் முதலாம் பெரு வீரர்களும், நாங்கூர்வேள், அழுந்தூர் வேள், மையூர்கிழான் வேண்மான் முதலாம் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை அளிக்கும் மாண்புடையாரும், அழும்பில்வேள்போலும் படைத் தலைவரும் பிறந்த பெருமையுடையது வேளிர்குடி; இவர்களை யல்லாமல், இடையர் குலத்தலைவன் கழுவுள் என்பானை வென்ற பதினன்கு வேளிரையும், வெண்ணிவாயில் எனுமிடத்தே, கரிகாற் பெருவளத்தானை எதிர்த்துப் போரிட்ட பதினொரு வேளிரையும் பெற்றளித்த பெருமையும் அவ் வேளிர் குடிக்கே உரித்து.

தொல்காப்பியப் பாயிர வுரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர், "தேவரெல்லாம் கூடி, யாம் சேர இருத்தலின், மேருத் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்" என்று அவரை வேண்டிக் கொள்ள, அவரும் தென் திசைக்கட் போதுகின்றவர்........ துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண் குடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கண் இருந்தனர்" எனக் கூறியதையும்,

"நீயே,
*வடபால் முனிவன் தடவினுட் டோன்றிச்*
*செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை*
*உவரா வீகைத் துவரை யாண்டு*

என்ற புறநானூற்றுப் பகுதியினையும் சான்றுகளாகக் கொண்டு, வேளிர், கண்ணன் வழியினராய்த் துவாரகையில் வாழ்ந்தோராய யாதவகுலத்து வந்தோராவர் எனச் சிலர் வாதிப்பர்; "துவராபதி, நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வாழ்ந்த வடநாட்டுத் துவாரகையன்று; பறம்பு மலையைச் சார்ந்த ஒரு பகுதியே யாகும் ஆதலானும், நச்சினார்க்கினியர் கன்ன பரம்பரையாகப் பலபட வழங்கிவந்த செய்தியை ஒரு தொடர்ப்படுத்தி எழுதியுள்ளார் எனக் கொள்ள வேண்டுதலின், அவர் கூறியவற்றிற்கெல்லாம் சொற்கிடக்கை முறையானே பொருள் கொள்ளல் வேண்டும் என்னும் நியதியின்றாம்; ஆகவே துவராபதிக்கும் நெடுமுடி யண்ணலுக்கும் சம்பந்தங் கூறுதல் பொருந்தாது; அதற்கும் வேளிர்க்கும் சம்பந்தம் கூறுதல் பொருந்தமாம்" எனவும் கூறி முன்னோர் வாதத்தை மறுப்பர் சிலர்.

அவ்வாதப் பிரதி வாதங்கட்கிடையே தலையிடாமல், வேளிர் வழிவந்தார் சிலர் குறித்து, இவ் வரிசையுள் ஆங்காங்கே விளங்கக் கூறியனவற்றையும், பிறர் வரலாறு உரைப்புழி, அன்னார் வரலாற்றோடு இணைத்து உரைக்கப் பெற்றனவற்றையும் தொகுத்துரைத்து உணர்ந்து கொள்க.

கழக வெளியீடு: எ௫௨

பதிப்பாளர்
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம்:
24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை ரூ. 1-12.

அப்பர் அச்சகம், சென்னை-1—C. 1000.